188

1/52

பாரத ஜோதி

பதிப்பாசிரியர் :

D. இராமானுசன், B.A., B.T.

Hindu High School, Triplicane

★

...ணல் பப்ளிஷிங் கம்பெனி
...ம் :: சென்னை-6

O-,bx
N51
120718

பாரத ஜோதி

பதிப்பாசிரியர் :

D. இராமானுசன், B.A., B.T.
Hindu High School, Triplicane

இன்டர்நாஷணல் பப்ளிஷிங் கம்பெனி
நுங்கம்பாக்கம் : : சென்னை–6

காப்பிரைட்] [விலை ரூ. 1

முதற் பதிப்பு—1951

Kabeer Printing Works, Madras (1827)

முகவுரை

பாரத நாடு ஆட்சியுரிமை பெற்று ஐந்தாண்டுகள் ஆகின்றன. அரசியலில் அமர்ந்துள்ள அமைச்சர் பலரும் தம்தம் துறையில் நாடு முன்னேறுவதற்கு ஆவனவற்றை முனைப்புடன் புரிந்து வருகின்றனர். ஆங்கில அரசு நிலவிய காலத்தில் எழுதப்பட்ட இந்திய சரித்திரம் திருத்தி மீண்டும் எழுதப்படவேண்டும் என்னும் விருப்பம் அறிஞர் பலரிடையே இருந்து வருகிறது. தேச சரித்திரம் கற்கும் மாணவரிடையே தேச பக்தி வேரூன்றுவதற்கு இது ஒரு சிறந்த சாதனமாகும்.

முன்னோரது வரலாறுகளை மாணவர் உணர்ச்சியுடன் கற்று வீறு கொள்வதால், அவர்கள் உள்ளத்தில் வேரூன்றித் தழைத்தல் கூடும். சமயம், அறநெறி, சமூகம், கலை வளர்ச்சி ஆகிய துறைகளில் தொன்றுதொட்டு ஈடுபட்டு வரும் பெரியோர்களின் வரலாறுகளைச் சிறுவர் சிறுமியர் அறிந்து உணர்ச்சி கொள்ளும் வகையில் எழுதப்பெற்றுள்ளன. **பாரத ஜோதி** என்னும் இப் புத்தகம் **உயர்நிலைப் பள்ளி மாணவர்க்குத் துணைப் பாட புத்தகமாகக்** கூடியது.

ஆசிரிய அன்பர்கள் இப் புத்தகத்தை ஆதரித்துப் பாட புத்தகமாக்கி என்னை ஊக்குவார்கள் என்றே நம்புகிறேன்.

பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	அறிஞரின் அமுதமொழிகள்	...	1
2.	பிறர் புகழ்தல்	...	4
3.	இயற்கை நலம்	...	7
4.	பெயர் வரலாறு	...	11
5.	சமய நெறி	...	13
6.	ஆரியரும் திராவிடரும்	...	17
7.	முன்னோரின் குடியேற்றம்	...	22
8.	தூதும் துதியும்	...	28
9.	ஐம்பத்தாறு தேசங்கள்	...	32
10.	வேத சாஸ்திரங்கள்	...	38
11.	வேதகால வாழ்க்கை	...	43
12.	கால அளவு	...	48
13.	குணச் சிறப்பு	...	51
14.	தொழில் சிறப்பு	...	57
15.	இசைக் கலை	...	61
16.	கலைஞான பீடங்கள்	...	65
17.	கருணைக் கடல்	...	69
18.	வீர இளைஞன்	...	72
19.	வீறுகொண்ட வேந்தன்	...	76
20.	அன்பு வெள்ளம்	...	79
21.	அன்னியரின் மாற்றம்	...	82
22.	குப்தரின் கீர்த்தி	...	84
23.	கும்பமேளா	...	87
24.	மலைக்கோயில் மாண்பு	...	90

எண்	பொருள்		பக்கம்
25.	சோழர் சிறப்பு	...	93
26.	பாண்டியர் பெருமை	...	96
27.	சேரர் கீர்த்தி	...	99
28.	முகம்மதியரின் பெருமிதம்	...	103
29.	விஜய நகர வல்லரசு	...	107
30.	தர்மப் பண்பு	...	111
31.	சமரஸ உருவம்	...	113
32.	சிவாஜியின் எழுச்சி	...	118
33.	மேனாட்டினரின் வருகை	...	122
34.	சத்தியப் போர்	...	125

பாரத ஜோதி

1. அறிஞரின் அமுத மொழிகள்

பாரத நாட்டின் பெருமையைப் பாரெங்கும் சென்று பரப்பிய சுவாமி **விவேகானந்தர்** அருளிய பொன்மொழிகள் இவை :

“பாரத மக்களே, நமது நாட்டின் பழம் பெருமையை உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். பழம் பெருமையையே பேசிக்கொண்டிருப்பதில் என்ன பயன்? வருங்கால விழுமிய வாழ்வினுக்கன்றோ வகைதேட வேண்டும்?” என்பர் சிலர். எனினும், பழமையான சிறப்பை மனத்துட்கொண்டன்றோ வருங்கால வாழ்வினுக்கு வழிதுறை தேடுதல் வேண்டும்?

ஆதலின், அன்பர்களே! பழம் பெருமையை மனம்போன மட்டும் எண்ணிப் பாருங்கள். அக் கீர்த்திக்கு அடிப்படையாயிருந்த அரிய மார்க்கத்தையும் ஆலோசனை செய்யுங்கள். நமது மூதாதையர் பெருங்கீர்த்தி வாய்ந்தோராக விளங்கிய பெரியோராவர். இதனை நாம் நினைவில் இருத்திக்கொள்ளுதல் வேண்டும்.

“நமது உடலிலே எத்தகைய இரத்தம் ஓடுகின்றது, நமது பரம்பரையின் சிறப்பு யாது என்று நாம் அனைவரும் உணர்தல் வேண்டும். உணர்ந்துகொண்டால், மீண்டும் இணையிலா அம்மேம்பாட்டினை அடையலாம் என்னும் நம்பிக்கை பிறக்கும். அதுகொண்டு முனைந்து முயன்று முன்னையினும் பன்மடங்கு மொய்ம்பும் மாண்பும், தகவும் திறனும், ஆண்மையும் திண்மையும் அடைய நாம் அனைவரும் வழி தேடுவோமாக!”

அவ் வீரத் துறவிக்குப் பின்பு, பாரெங்கும் புகழ் நாட்டிய **பால கங்காதர திலகர்** நம்மை உறக்கத்தினின்றுந் தட்டி யெழுப்பினர். ‘இவருக்குப் பின்,

காந்தி மகான் மீண்டும் நமக்குப் புத்துயிரளித்து, ஆன்ம சக்தியின் அருமை பெருமையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்த்தியருளினர்; குடியரசும் தேடித்தந்தார்.

தேவர்கள் சாபத்தால் வாயு மைந்தனை அனுமான் தனது இயற்கை வன்மையை மறந்து தயங்கி நின்றது போலவே பாரத மக்களாகிய நாம் மேனாட்டு நாகரிகம், நடையுடை, காவியம் இவைகளில் ஈடுபட்டுள்ளோம். இந்நிலை நம்மை விட்டு அகலவேண்டுமாயின், நமது பழஞ் சிறப்பை ஊடுருவி நோக்குதல் அவசியமாகும்.

பழையன, புதியன இவற்றில் சிறந்த அனைத்தையும் காலநிலையைத் தழுவி ஏற்றவாறு மேற்கொண்டு, வருங் காலத்திலே சிறப்புடன் விளங்குவதற்கு வழி காட்டுவோராக நாம் திகழவேண்டும். ஜப்பானியப் பேரறிஞர் ஒருவர் முன்பே அறிவுறுத்தியுள்ளதாவது:

"ஆசியாக் கண்டம் எனப்படும் சம்பூத்துவீபம் பல தீர்க்க தரிசிகளின் பிறப்பிடம்; புத்தர்பிரான், ஏசுநாதர், முகம்மது நபி முதலிய மகான்கள் அவதரித்த புண்ணிய பூமி. உலகத்தின் போக்கையே மாற்றக்கூடிய ஆன்ம பலம் இங்கேயே நிரம்பி யுள்ளது. கோடானகோடி மக்கள் இங்கு வாழ்கின்றனர். அவர் களில் அநேகர் மகா மேதைகள்; அடக்க ஒடுக்கமான வாழ்க்கை யுடையவர் என்று எவரும் இலேசாக எண்ணிவிடவேண்டாம். ஆசியாக் கண்டம் பெருங் காற்றுக்குப் பேர்போனது. அக் காற்று இம்முறை கிளம்பி வீசுகையில், மாயமான மேனாட்டு ஆயுத பலத்தையும், செல்வச் செருக்கையும் தவிடுபொடியாக்கி விடும். முன்போலவே, இத் துவீபம் தலைசிறந்து திகழும் என்பது திண்ணம். இதனை யாவரும் அறிந்து நடப்பாராக."

ஆதிமுதல் இத் தேசத்திலே எத்தனையோ அன்னிய மக்கள் படாடோபத்துடன் புகுந்தனர்; எத்தனையோ பேர் படைகொண்டு பாய்ந்தனர். இவர்

களால் நேர்ந்த இடையூறுகள் எண்ணில் அடங்கா. அவைகளால் அழிவுருமல் வீறுடன் விளங்கியது, நம் பாரத பூமி; வந்த அனைவரையும் திருத்தித் தனது அகத்தே அடக்கிக்கொண்டது.

கிரேக்கர், உரோமர், பாரசீகர், பாபிலோனியர், அஸீரியர் என்று உலகிலே எத்தனையோ நாட்டினர் வாழ்ந்தனர். பேரரசுங் கண்டனர்; பெரு நாகரிகமும் பரப்பினர்; பின்னரோ, பெருமையிலே குன்றி மறைந்தனர். அவர்களுக்கெல்லாம் முன்தோன்றியவர் பாரத புத்திரரேயாவர். "மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காது" அன்றோ? வாழ்க்கை நிலையில் தாழ்வடைந்தாலும், ஆன்ம வலியில் ஊன்றி நிற்கின் றனர் நம் பாரத மக்கள்.

உலகின் மிகப் பழமையான தேசங்கள் இரண்டு என்ப. அவை பாரத பூமியும் சீனு தேசமும் ஆகும். இந்த இரண்டினுள்ளும் பழமையானது நம் பாரத பூமி. அறிவு நலமும் ஆன்ம பலமும் அரிய பண்பு களுமே அருந்துணையெனக் கொண்டு இது துலங்கி வருகின்றது; ஆதலின், எதனையும் சமாளிக்கும் ஆற்றல் வாய்ந்துளது.

காலத்தின் கோலத்தால் நேர்ந்த கொடுமைகளும் பிறரது சூழ்ச்சிகளால் ஏற்பட்ட தீமைகளும் பாரத பூமியின் உயிர்நாடியை அசைக்க முடியவில்லை. தீயிலிட்ட பொன்போல, இது ஒளி வீசுகின்றது. இந்த ஒளியின் தன்மைகளை இனிக் காண்போம்.

2. பிறர் புகழ்தல்

"நிலமகள் முகமோ! திலகமோ! கண்ணே! நிறைநெடு மங்கல நாணே!" என்று கவியரசராகிய கம்பர் இப் பாரத பூமியை வருணித்துள்ளார். பிற நாட்டினர் மனமுவந்து நயந்து நவின்றிருப்பதை இங்கே சிறிது எடுத்துக் காட்டுவோம்.

பதினுன்காவது நூற்றுண்டிலே நமது பூமியை எங்கும் சுற்றிப் பார்த்தபின், சரித்திர ஆசிரியரான **அப்துல்லா வாஸப்** என்பார் எழுதியிருப்பது பின் வருமாறு:

> "பூவுலகிலே வாசத்துக்கு மிகவும் வசதியான பூமி, பாரத பூமியே! கண்ணையும் கருத்தையும் கவர்ந்து கழி பேரின்பம் ஊட்டவல்லதும் அதுவேயாம். அப்பூமியின் தூசியோ காற்றி னும் தூய்மையானது. அக் காற்றே தூய்மையினும் தூய்மை வாய்ந்தது. அதன் சமவெளிகள் போகபூமியின் பூங்காவை நிகர்க்கும். போக பூமியும் இந்தியாவுக்கு ஈடு ஆகாது!"

சரித்திர ஆசிரியரில் ஒருவரான **மர்ரே** என்னும் ஆங்கிலேயர் தாம் எழுதியுள்ள நூலில்,

> "மகிமை, சீர்மை இரண்டினுக்கும் இருப்பிடம் இந்தி யாவே! மணியும் பொன்னும், பண்பும் குணமும் அங்கே கொழித்துக் கிடக்கும். அப்பூமியின் அற்புதமான இயற்கை வனப்பும் செயற்கையின் செம்மையும் எங்கும் காணக் கிடைக்கா"

என்று கூறியிருக்கிறார்.

நமது பூமியின் பழைமையான வேத உபநிடதங் கள், பகவத் கீதை முதலிய பல நூல்களையும் நன்கு பயின்று, அவற்றை ஆங்கில மொழியில் எழுதி வைத்து, அனைவருக்கும் அவற்றின் அருமை பெருமைகளை அறிவுறுத்திய **மாக்ஸ் முல்லர்**

என்னும் பேராசிரியர் இந்தியாவின் பெருமையைப் பின்வருமாறு கூறுகின்றார் :

"இயற்கை நலத்தினால் ஏராளமான செல்வமும் இணையிலாத சக்தியும் ஈடிலா வனப்பும் வாய்ந்த தேசம்—சுருங்கச் சொன்னால் போக பூமி—எது எனில், இந்தியா என்பேன். மனவிரிவு கொண்டு மகா சிந்தனை செய்து, மனித வாழ்க்கையின் பெருஞ் சிக்கல்களை வகுத்துரைத்துப் பேரின்ப மார்க்கம் புகட்டிய பூமி எது என்றால், இந்தியா என்றே இசைப்பேன் !

"மனித சமூகம் நலமும் பலமும், வளமும் வன்மையும் வாய்ந்து, நன்கு வாழும் வண்ணம் இனிய வழிகாட்டிய பூமி—மேனாட்டுத் தத்துவ ஞானிகளின் ஞானத்தாயகமான பூமி—யாது என்றால், மீண்டும் இந்தியா என்றே துணிந்து உரைப்பேன் ! ஆன்ம ஞானத்தினால் இகபரம் இரண்டிலும் ஏற்றம் எய்தும் வண்ணம் மக்கள் இனத்திற்கு மதிநலம் புகட்டும் மகிமைத்தலம் எது என்றால் மறுபடியும் இந்தியா தேசம் என்றே சாற்றுவேன் ?"

பிரான்ஸ் தேசத்தின் பெரியாரான பியரி லோட்டி என்பார் பரவசமாகி வரைந்திருப்பது வருமாறு :

"பழமையும் பண்பும் நிறைந்த பாரத பூமியே! கலைச் செல்வத்தினுக்கும் தத்துவ ஞானத்தினுக்கும் சீரிய வழிகாட்டும் விழுமிய தலமான ஆரிய தேசமே! உன்னை எனது மன மொழி, மெய்களால் வணங்குவேன்.

மேனாட்டினர் மேன்மையிழந்து, நல்லறிவு குன்றி, ஒருவரையொருவர் வெட்டிக்குவித்து, ஆண்டவனையும் அலட்சியம் பண்ணி, ஆன்ம கோடிகளை அடக்கி ஒடுக்கி வரினும், பாரத பூமியே! உனது மகிமை கண்டு அன்னவர் உன்னை வணங்கா நிற்பர். நீ முன்போலவே மொய்ம்புடன் நிமிர்ந்து நிற்க உன்னை அன்னார் போற்றிப் புகழ்வர்."

தொன்றுதொட்டுப் பூமகளின் திலகமாகத் திகழ்வது பாரத பூமியே என ஓர் ஆங்கில ஆசிரியர் உரைத்துள்ளார். நாகரிகம் என்பது என்னவென்று ஏனைய

நாடுகள் உணராமல் இருந்த காலத்திற்கு எத்தனையோ நாள் முன்னதாகவே, நாகரிகமெய்தி நனி வாழ்ந்தோர் பாரத புத்திரரே என மற்றோர் ஆசிரியர் மொழியா நிற்பார்.

மொகலாய சக்கரவர்த்திகள் இத்தேசத்தை ஆண்டுவந்த காலத்திலே அன்னாரின் அத்தாணி மண்டபத்தின் முகப்பில், "பூவுலகிலே போக பூமி உளது என்றால், அது இங்கே இருக்கிறது! அது இங்கே இருக்கிறது! அது இங்கே இருக்கிறது!" என்று பாரசீக மொழியில் பொறிக்கப்பட்டிருந்ததாம்.

வீர மரபினரான இராஜபுத்திரரின் சரிதத்தை ஆதியோடு அந்தமாக ஆராய்ந்து அருமையாக எழுதி யுள்ள **கர்னல் டாக்** என்னும் ஆங்கிலேயர் புகன் றுள்ளதாவது :

> "கிரீஸ் தேசத்தின் ஆதி தத்துவ ஞானிகளான பிளேடோ, பிதியாகரஸ் முதலியோர் எங்கிருந்து, யாரிடமிருந்து தத்துவ ஞானம் எய்தினர்? இந்தியாவிலே இணையிலாது விளங்கிய இருடியரின் நூல்களிலிருந்து அல்லவா? வானநூல், கணித நூல், சிற்பநூல், ஓவியநூல் முதலியவற்றை மேனாட்டினர் பாரதபூமியிலிருந்தே கற்றுக்கொண்டனர்."

ஆங்கில ஆட்சி இத்தேசத்திலே • ஓங்கிநின்ற காலத்தில், அகந்தை மிகப்படைத்த இராஜப் பிரதிநிதி களில் ஒருவர் **லார்டு கர்ஸான்** என்பவர். அவரே ஒரு சமயம், "ஆங்கிலேயராகிய நாம் உடலெங்கும் அரிதாரம் பூசிக்கொண்டு, இலை தழைகளையே ஆடை களாகத் தரித்து, வன விலங்குகளேபோல் திரியா நின்ற காலத்தில், இந்தியாவிலே இணையிலா வல்லரசு கள் சிறந்த நாகரிகத்துடன் துலங்கின" என்று கூறியுள்ளார்.

3. இயற்கை நலம்

பாரத பூமி பழம் பெரும் பூமி. இது முக்கோண வடிவம் வாய்ந்தது; தலைப்பக்கம் மிக அகன்றும், அடிப்பக்கம் வரவரக் குறுகியும் இருப்பது. தென் வடலாக இதன் நீளம் இரண்டாயிரம் மைல். வட பாகத்தில் கிழமேலாக அவ்வளவு தூரம் உண்டு. இதன் பரப்பு இருபது இலட்சம் சதுரமைல்.

இதன் வடக்கே நெடுக ஒரு பெரிய மலை இருக்கிறது. அது எல்லைச் சுவர்போல் உள்ளது. எந்நாளும் அதைப் பனி மூடியிருக்கும். ஆதலின், அதனைப் பனி மலை அல்லது இமயமலை என்பர். அதன் நீளம் இரண்டாயிரம் மைல்; அகலம் இருநூறு மைல்; உயரமோ இரண்டோரிடங்களில் ஐந்து மைல்!

இமயமலையைப் போல் உயர்ந்த மலை உலகிலே வேறு எங்கும் கிடையாது. அதன் உயர்ந்த சிகரம் **காஞ்சன சிருங்கம்** எனப்படும். அதன் உச்சியை இதுவரையில் எவரும் பார்த்ததும் இல்லை. மேனாட்டினர் எத்தனையோ முறை முயன்றும் முடியவில்லை. அந்த மலை முழுவதையும் ஊடுருவிப் பார்த்தவர்களும் கிடையாது.

தாவர நூலாரும் அறியமுடியாத புல் பூண்டுகளும், மரஞ்செடிகளும் அம்மலையிலே நிரம்பியிருக்கும். அம்மலை பல இடங்களில் பச்சைப் போர்வையுடன் துலங்கும். பற்பல இடங்களில் பூம் படுக்கையால் மூடுண்டு கிடக்கும். பலப்பல இடங்களிலே வெண்ணிற ஏரியில் மறைந்திருக்கும். அதன் வளத்தை நோக்க நோக்கப் பரவசம் பிறக்கும்.

அம்மலையின் கீழ்க் கோடியிலே **காசி, காரோ** என்னும் குன்றுகள் தென்வடலாக நானூறு மைல்

நீண்டுள்ளன. மேல் கோடியிலே **சுலைமான், கிரி தரம்** என்னும் மலைகள் தெற்குநோக்கி நானூறு மைல் தூரம் பரவியிருக்கின்றன. ஆகவே, வடக்கிலும் வட கிழக்கிலும், வட மேற்கிலும் அம்மலைகள் மதிள் சுவர்போல் இப்பூமிக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன.

பாரதபூமியின் தெற்கிலே இந்துமகா சமுத்திரம் பரந்து விரிந்து தோன்றுகிறது. மேற்கிலும் கிழக்கிலும் கடல்கள் சூழ்ந்துள்ளன. வடக்கிலே மலை அரண் உண்டு என்ருல், மற்றத் திசைகளிலே நீர் அரண்கள் உள. இந்த அரண்கள் தக்க பாதுகாப்பு அளிப்பன. இந்த அரண்கள் சேர்ந்து இப்பூமிக்கு ஒரு தனி மாண்பைத் தருகின்றன.

இமயமலையிலிருந்து பற்பல நதிகள் தோன்றுகின்றன. அவற்றுள் **சிந்து, கங்கை, யமுனை, பிரமபுத்திரா** என்பவை முக்கியமானவை. சிந்துவும் பிரமபுத்திராவும் முறையே மேற்காகவும் கிழக்காகவும் ஓடி, அப்பால் வடமேற்கிலும் வடகிழக்கிலும் விரிந்து பாய்வது விந்தையாக இருக்கும்.

இந்நதிகள் பாயும் பிரதேசம் சிந்து கங்கைச் சமவெளிப் பிரதேசம் எனப்படும். இமயப் பெருமலையிலிருந்து இந்த ஆறுகள் அடித்துவரும் வண்டல் வந்து படிவதனுல், அப்பிரதேசம் முழுவதும் செழுமையும் வளமையும் நிறைந்திருக்கும்; கோதுமையும் நெல்லும் ஏராளமாகப் பயிராகும். அங்கு வாழும் மக்களுக்கு உணவுத்தட்டு இராது.

சிந்து, கங்கை நதிகளின் முகத்துவாரத்திலிருந்து உள் நாட்டிலே சிறிது தூரம் வரையில் பெருங் கப்பல்கள் போகலாம்; நெடுந்தூரம் சிறிய கப்பல்கள் போகமுடியும். எண்ணிறந்த படகுகளும்

நெடுகப் பாய்ந்து ஓடும். ஆகையால், போக்கு வரவுக்கும் அந்நதிகள் பெரிதும் பயன்படுகின்றன.

பாரத பூமியின் நடுவிலே **நருமதை, தபதி** என்னும் நதிகள் மேற்கு நோக்கிப் பாய்கின்றன. **கிருஷ்ணு, கோதாவரி** முதலியனவோ கிழக்கு முகமாக ஓடி ஆங்காங்குள்ள பூமியைச் செழிப்பிக் கின்றன. தெற்கிலே **காவேரி, தாமிரவருணி** முதலிய நதிகள் பாய்ந்து செழுமை ஊட்டுகின்றன.

காவிரி நதி பாயும் திருச்சி, தஞ்சை வட்டங்கள் தமிழகத்தின் **நெற்களஞ்சியம்** எனப்படும். இவையே யன்றி, இமயம் முதல் குமரி வரையில் எண்ணிறந்த நீர்நிலைகளும் உண்டு. அதனுல் மக்களின் உணவுக்கும் உடைக்கும், தொழிலுக்கும் வாணிபத்துக்கும் உரிய பொருள்களெல்லாம் ஏராள மாகக் கிடைக்கின்றன.

நமது தமிழகத்திலே நெற்பயிர் அதிகம். தக்காணத்திலே பருத்தி விளைவு மிகுதி. சிந்து நாட்டிலே கோதுமை நிரம்ப உண்டு. வங்கத்திலே சணல் ஏராளமாகப் பயிராகிறது. மலைகளிலே தேக்கும் தேனும் வேண்டுமளவு கிடைக்கின்றன. காடுகளிலே பலவகையான மரங்களும் மூலிகைகளும் நிரம்ப உண்டு. மைசூரிலே தங்கம் அகப்படுகிறது. தூத்துக்குடிக்கு அருகே கடலில் முத்தும் பவழமும் எடுப்பர்.

ஆதலின், இங்கே முன்னுளில் பொன்னும் மணி யும் கொழித்துக் கிடந்தன, பாலுந் தேனும் வழிந் தோடின என்பர். வளம் நிரம்பியுள்ள பூமியின்மீது பலருக்கும் ஆசை பிறத்தல் இயல்பே யன்றே? ஆதலின், அன்னியர் பலர் நம் நாட்டிலே புகுந்து, அரசாளவும் கொள்ளை கொள்ளவும் முயன்றனர்.

ஆனல், இயற்கையான பாதுகாப்புக்கள் அவர்களுக்கு இடையூருக இருந்தன.

மலைகளுக்கு இடையே சில இடங்களில் கணவாய் கள் உள்ளன. அவற்றின் வழியே போக்குவரவு அவ்வளவு கஷ்டமாக இராது. நமது பூமியின் வடமேற்கிலே **கைபர், போலன்** என்னும் கணவாய் கள் இருக்கின்றன. அன்னியர் பலரும் அக்கணவாய் களின் வழியேதான் இப்பூமிக்குள் புகுந்தனர்.

மிகநீண்ட கடற்கரை இருப்பதால், மேல் கடலி லும் கீழ்க்கடலிலும் பல துறைமுகங்கள் இருந்தன. அவற்றில் கப்பல் வாணிகம் நடந்துவந்தது. தொன் ஞளில் **உரோமர், கிரேக்கர், பாபிலோனியர்** முதலிய அன்னியர் அத்துறைமுகங்களை யடைந்து வாணிபம் நடத்திவந்தனர். அல்லாமலும், தமிழ் வேந்தரிடம் அன்னவர் போர்ச் சேவகமும் புரிந்து வந்தனர். இவை யனைத்தையும் உட்கொண்டே நமது தேசீய கவிஞராகிய **பாரதியார்** பின் வருமாறு பாடலானர் :

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்

ஆற்றினிலே சுனை யூற்றினிலே—தென்றற்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே புய னீந்திடுங்காலி
யினத்தினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

தோட்டத்திலே மரக் கூட்டத்திலே—கனி
யீட்டத்திலே பயி ரூட்டத்திலே
தேட்டத்திலே யடங்காத நிதியின்
சிறப்பினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

4. பெயர் வரலாறு

நாம் வாழும் பாரதபூமிக்குப் பாரத வருஷம், பரத கண்டம் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. பாரசீகரும் கிரேக்கரும் அறியாமையினுல் இட்ட பெயரே இந்தியா என்பது.

நமது புராண இதிகாசங்கள் கூறும் வண்ணம் இப்பூமண்டலம் ஏழு துவீபங்களாக உள்ளது. அவை **ஜம்பு, இலட்ச, புஷ்கர, கிரௌஞ்ச, சாக, சான் மலி, குச** துவீபங்களாகும். இக்காலத்தே அவை முறையே ஆசியா, தென் அமெரிக்கா, வட அமெ ரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, ஓஷியானியா என்பனவாம்.

முன்னொரு காலத்தில் **பரதன்** என்னும் பேரரசன் ஜம்பு துவீபத்தில் இமய வரைக்குத் தெற்கிலுள்ள பூமியில் ஆட்சி புரிந்தான். அவன் அருந்திறலும் பெருந் திருவும் உயர் வீரமும் வாய்ந்தவன். அவனுல் ஆளப்பட்ட பூமி அவன் பெயரால் பாரத வருஷம் அல்லது பரத கண்டம் என்னும் பெயர் பெற்றது.

அப்பரதனது மரபினர் இப்பாரத பூமியிலே மிக வும் பெருகிப் பரவினர். அன்னவர் பரதர் அல்லது பாரதர் என்று பெயர் பெற்றனர். நாளடைவில் இந் நாட்டு மக்கள் அனைவருக்கும் பாரதர், பாரத புத்திரர் என்னும் பெயர்கள் வழங்கலாயின. நான்கு வேதங் களில் ஒன்றுன **இருக்கு** வேதத்தில் பரதனையும் பார தரையும் பற்றி அடிக்கடி பேசப்படுகிறது.

பின்னுளிலே சந்திர வமிசத்திலும் பரதன் என் னும் பெரு வேந்தன் ஒருவன் இருந்தான். இவன் **துஷ்யந்தன்-சகுந்தலை** ஆகிய இருவருக்கும் பிறந் தவன். இவனும் பெருங் கீர்த்தி வாய்ந்தவன்.

எனவே, இவன் பெயரால் இப்பூமி வழங்குகின்றது என்பதும் உண்டு.

இனி இப்பூமியை **ஆரிய பூமி, ஆரியா வர்த்தம், ஹிந்துஸ்தானம்** என்றும் அழைப்பர். நமது தேசீய கவியாகிய சுப்பிரமணிய பாரதியார் இப் பெயர்களையே எடுத்தாண்டிருக்கிறார். "ஆரிய பூமியில் நாரியரும் நரசூரியரும் சொல்லும் வீரிய வாசகம் வந்தே மாதரம்" என்பது காண்க. மேலும், "சேதம் இல்லாத ஹிந்துஸ்தானம்! இதைத் தெய்வம் என்று கும்பிடடி பாப்பா," என்றும் அவர் கூறியுள்ளார். பரதகண்ட வாசிகள் மதி நுட்பம் மிகப் படைத்தவர்கள். ஆதலின், அன்னார் ஆரியர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றனர். ஆரியர் என்னும் பெயருக்கு 'அறிவு உடையவர், ஒழுக்கம் மிகுந்தவர்' என்பவை பொருளாம். அதுபற்றியே ஆரியபூமி, ஆரியா வர்த்தம் என்னும் பெயர்கள் எழுந்தன.

வடக்கே இமயம் முதல், தெற்கே குமரி வரையிலுள்ள நம்மவர் அனைவரும் பாரதர் அல்லது ஆரியர் ஆவர். இந்தியா, இந்தியர் என்னும் பெயர்கள் ஏற்கா. முன்னம் பாரசீகரும் கிரேக்கரும் வடமேற்கு எல்லை வழியே நம் பூமியில் புகுந்தனர். அங்கே சிந்துமா நதி ஓடுகின்றது. அந்நதியின் பெயரைக் கொண்டு அன்னார் நம் பூமியை ஹிண்ட், இண்ட் என்றனர். நாளடைவில் ஹிந்துஸ்தானம் என்பது ஏற்பட்டது.

இப்பூமியில் வாழும் மக்களை 'இந்துக்கள்' என்று அன்னவர் அழைக்கலாயினர். ஆங்கில அரசாங்கமோ 'இந்தியா' என்றும், 'இந்தியர்' என்றும் அழைக்கத் தொடங்கியது. அரசு எவ்வழி அவ்வழி குடிகள் அல்லவா? அதன் பின்னரே இந்தியா, இந்தியர் என்னும் பெயர்கள் பெருவழக்காயின.

5. சமய நெறி

உலகத்தில் அநேக மதங்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. அப்பெயர்களில் பெரும்பாலன அவைகளைத் தோற்று வித்த மகான்கள் பெயரால் வழங்கி வருகின்றன. பௌத்த மதத்தைப் **புத்தர்** தோற்றுவித்தார். **ஜின தேவர்** என்பவரால் ஜைன சமயம் உண்டாயிற்று. முகம்மதிய மதத்தை **முகம்மது** என்பவர் நிறுவினர். கிறிஸ்து மதம் **கிறிஸ்து**வின் பெயரால் வழங்குகிறது. பாரசீக தேசத்தில் முன்னம் ஒரு மதம் இருந்தது. அது **ஜரதஸ்தர்** என்பவரால் ஏற்படுத்தப்பட்டது.

அந்த ஜரதஸ்தர் மதத்தைச் சேர்ந்தவர்கள் நம் தேசத்தில் இப்போதும் கொஞ்சம் பேர் இருக்கிறர்கள். நாம் அவர்களைப் **பார்ஸிகள்** என்று அழைக்கிறோம். சீன தேசத்தில் **கன்பூஷஸ்** என்ற பெரியார் இருந் தார். அவர் ஏற்படுத்திய மதம் **கன்பூஷியானிஸம்** எனப்படும். இவ்விதம் ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு அவதார புருஷரால் ஒரொரு காலத்தில் தோன்றியது.

இவ்வாறு மற்ற மதங்களுக்கெல்லாம் ஒவ்வொரு பெயர் உண்டு. பாரத மக்களான நம்மவரின் சமயத் துக்கு என்ன பெயர்? ஆங்கிலம் படித்தவர்கள் **ஹிந்து மதம்** என்பார்கள். நாட்டுப்புற வாசிகளோ **சிவமதம்** அல்லது **விஷ்ணுமதம்** என்று சொல்லு வர். இப்பெயர்கள் மனிதரின் பெயரைச் சார்ந்தவை யல்ல.

ஹிந்து மதம் என்ற பெயர் யாரோ இட்டதாம். மதம் என்றல் என்ன? பிறவி எடுத்ததன் பயனை எய்தும் வழியை எடுத்துரைப்பதே மதம் எனப்படும்.

தர்மம் என்றும் அது பெயர் பெறும். மற்ற மதங்களெல்லாம் ஒருவரது பெயரை அடிப்படையாக உடையன அல்லவா? அவருக்குமுன் அந்த மதம் இருந்திருக்கவில்லை என்பது வெளிப்படை.

பிற மதங்களெல்லாம் உதிப்பதற்கு முன்பும் நம்முடைய மதம் இருந்தது. உலகம் முழுவதும் நம்முடைய மதமே பரவியிருந்த பழைய காலம் ஒன்றும் உண்டு. அந்தக் காலத்தில் நமது மதத்துக்கு ஒரு தனிப்பெயர் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. வேறு மதங்கள் இருந்தால் அல்லவா, தனியே ஒரு பெயரும் அடையாளமும் வேண்டும்?

கடவுளுக்கு ஒரு பெயர் உண்டா? இல்லை. பெயர் இல்லாமையே இந்து மதத்தின் பழமையையும் பெருமையையும் காட்டும். ஆயினும், இந்து மதத்திற்கு ஓர் அடையாளம் உண்டு. "**இது என்ன, வேத வாக்கோ? வேத வாக்கியமோ?**" என்று சொல்லுவது உண்டு. அதன் பொருள் யாது? எல்லாரும் வேத வாக்கினை மதித்து, அதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதாம்.

இப்பொழுதுள்ள மதங்களெல்லாம் ஏறக்குறைய இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் ஏற்பட்டவை. கிறிஸ்து மதம் உதித்து இன்னும் இரண்டாயிரம் வருஷம் ஆகவில்லை. அந்த மதத்துக்கு முன்பே, யூத மதம் இருந்தது. யூத மதம் இப்பொழுது பிரபலமாக இல்லை. கிரீஸ் தேசத்திலே ஒரு பழைய மதம் இருந்து அழிந்துவிட்டது.

எகிப்து தேசத்தின் பழங்கால அரசரின் பெயர்கள் பலவும் 'இராமன்' என்று இருக்கும். ஆப்பிரிக்காவுக்கு அருகே **மடகாஸ்கர்** என்னும் தீவு ஒன்று இருக்கிறது. அங்குள்ள ஊரின் பெயர்களில் நூற்

றுக்கு எழுபத்தைந்து வடமொழிப் பெயராக இருக்கின்றன.

சகாரா பாலைவனம் நீர்ப்பரப்பாக இருந்த காலம் ஒன்று உண்டு. அக்காலத்தில், அதன் கரையோரங்களிலே வசித்த மக்களின் பெயர்கள் பலவும் வடமொழிப் பெயர்களாம். அவற்றில் இராமன் என்ற பெயரே அதிகமாம். அமெரிக்காவிலுள்ள **மெக்ஸிகோ** நாட்டில் **இராம சீதா** என்னும் திருநாள் நடைபெற்று வருகிறது. அங்கே சில இடங்களில் பூமியைத் தோண்டியபோது விநாயகரின் சிலைகள் கிடைத்தன.

அமெரிக்காவிலே **பெரு** என்று மற்றொரு நாடு உண்டு. அங்கே அனைவரும் சூரியனது ஆலயத்தில் தொழுகை நடத்துகிறார்கள். அவர்கள் சூரியனையே கடவுளாகக் கொண்டவர்கள். ஆஸ்திரேலியாவில் ஒரு பழைய ஜாதியார் வசிக்கிறார்கள். அவர்கள் ஆடும் ஆட்டம் **சிவ நடனம்** எனப்படும். அந்நடிகர் தமது வேஷத்தில் நெற்றிக் கண்ணும் அமைத்துக் கொள்கின்றார்!

கிழக்கு இந்தியத் தீவுகளிலே ஒன்று **போர்னியோ** எனப்படும். அங்கே நூற்றுக்கணக்கான மைல் நீளமுள்ள காடு ஒன்று இருக்கிறது. அக்காட்டினுக்குள் ஒரு கல் கண்டெடுக்கப்பட்டது. அதிலே வடமொழி எழுத்தில் ஒரு சாசனம் இருந்தது. இன்ன அரசன், இன்ன இடத்திலே, யாகம் செய்தான்; இவ்வளவு தான தருமம் செய்தான் என்றெல்லாம் அச்சாசனத்தில் வரையப்பட்டுள்ளது.

ஆசியா, ஐரோப்பாக் கண்டங்களுக்கு இடையே எல்லையாக **யூரல் மலை** இருக்கிறது. அம்மலையிலே விநாயகர் ஆலயம் ஒன்று காணப்படுகிறது. உல

கிலே பல இடங்களில் நமது மதத்திற்கு உரிய அடையாளங்கள் இன்னும் எவ்வளவோ உண்டு என்று எடுத்துக் காட்டலாம். நமது மதம் பூவுலகெங்கும் பரவியிருந்தது என்பதற்கு இந்த அடையாளங்களே சாட்சி பகரும்.

ஆகவே, பழங்காலத்தில் எங்கும் நமது மதம் பரவி யிருந்தது. எல்லாம் நம் தேசமாகவே இருந்தன. ஆதலின் "உலகெலாம் சுகமே வாழ வேண்டும்" என்று நமது முன்னேர் துதித்து வந்தனர். நாமும் சுபதினங்களில் அவ்வாறே துதித்து வருகின்றேம். நம்மிடமிருந்து பிரிந்தவர்களே உலகின் பல்வேறு பகுதிகளில் இருக்கிறுர்கள்.

எல்லா மதங்களிலும் உள்ள முக்கியமான அமிசங்களெல்லாம் நம்முடைய பழைய மதத்தில் உள்ளன. அதனுல்தான் நம்முடைய மதத்தினுக்கு ஒரு தனிப் பெயர் இல்லே. நமது மதத்தைப் போலவே **சம்ஸ்கிருதம்** அல்லது வடமொழி என்பதும் முன்னம் பொதுமொழியாக இருந்தது. அதுவே, பிறமொழிகளுக்கு உயிர் நாடியாக உள்ளது.

இத்தகைய நமது மதமும், வடமொழியும் உலக முழுவதும் பரவியிருந்தன. வேதமே நமது மதத்துக்கு ஆதாரம். எல்லா மதமும் நமது மதத்தின் சாயலே. எங்கும் அன்பு மலிந்தால், எல்லாரும் ஒன்ருகி விடலாம்.

6. ஆரியரும் திராவிடரும்

நமது பாரத பூமியின் மொத்த ஜனத்தொகை சுமார் நாற்பது கோடி. அம்மக்களின் நடையுடை, நோக்கு போக்கு, தோற்றம் சாயல், பழக்க வழக்கம் இவற்றில் வேறுபாடுகள் காணப்படலாம். ஆயினும், ''எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந்தியா மக்கள்'' என்னும் உணர்ச்சி உள்ளூரக் காணப்படும்.

அம் மக்கள் வசிக்கும் இடத்தைப் பொறுத்தும், பேசும் மொழியைக் கொண்டும், பலவாறுன பாகுபாடுகள் உண்டு என்றுலும், திராவிடர் ஆரியர் என்னும் இருபெரும் பிரிவுகள் ஆதி முதல் உண்டு என்பர் சிலர். தென்னுட்டினர் திராவிடர் என்றும், வடநாட்டினர் ஆரியர் என்றும் அவர்கள் கூறுவது உண்டு.

அன்னுர் கூறும் வண்ணம், திராவிடர் என்போர் நெடுங்காலத்துக்கு முன்பு, நமது பூமியின் வட மேற்கு எல்லை வழியே இங்கு வந்தனர்; இங்கிருந்த பூர்வீக மக்களை வென்றெழித்து வீறுடன் வாழத் தலைப்பட்டனர்; நாளடைவில் தென்னிந்தியாவிலே திரண்டு வசிக்கலாயினர்.

அன்றியும், ஒரு காலத்திலே தென்னிந்தியாவின் பரப்பு தெற்கே மிகவும் விசாலமாக இருந்தது. தென் கோடியில் திகழ்ந்த பெரிய பூபாகம் வெகுகாலத்துக்கு-முன் கடலில் மூழ்கிப் போயிற்று. அப்பூபாகம் லெமூரியா எனப்படும். திராவிடர் அங்கிருந்தே வந்தவராவர்.

இனி, ஆரியரைப் பற்றிய கூற்றைக் காண்போம். ஆரியர் என்போர் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் மத்திய ஆசியாவிலிருந்து, வடமேற்கு எல்லேவழியே வந்து இத்தேசத்தில் குடியேறினர். அவர்கள் முதலில் குடியேறிய இடம் சிந்துநதிப் பிரதேசம். அப்பால், வட இந்தியா முழுவதும் அவர்கள் பரவி வசிக்கலாயினர்.

நாளடைவிலே அந்த ஆரியர் தென்னிந்தியாவிலும் சிறிது சிறிதாகப் பரவினர்; அப்போது திராவிடர்களுடன் ஓயாது மல்லுக்கு நின்றனர்; முடிவிலே தங்களது நாகரிக நேர்த்தியினுல் அத் திராவிடரை வசம் செய்தனர். முடிவிலே அவ் விருவரும் வேற்றுமையின்றிக் கலந்து வாழத் தலேப்பட்டனர். இருவரின் நாகரிகமும் ஒன்ருேடொன்று குழைந்துவிட்டது. இது நிற்க,

சிந்துநதிப் பிரதேசத்திலே **சுக்கூர்** என்னும் நகரையடுத்த ஓர் இடத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர் பூமியைத் தோண்டிப் பார்த்தனர். அங்கே புதையுண்டு கிடந்த பெரிய நகரின் அடையாளங்கள் தென்பட்டன. எழுத்துக்கள் பொறித்த முத்திரைகளும் சிவ லிங்கங்களும் காணப்பட்டன. இன்னும் பல சின்னங்களும் அகப்பட்டன. அந்த இடம் **மஹேஞ்சதாரோ** எனப்படும்.

அதற்கு வடக்கே நானூறு மைல் தூரத்தில் **ஹரப்பா** என்னும் இடத்திலும் பூமியைத் தோண்டிப் பார்த்தனர்; அங்கும் புதையுண்ட நகரின் அடையாளங்களேக் கண்டனர்; வேறு பல சின்னங்களும் தென்பட்டன. ஆராய்ச்சியாளர் அவற்றையெல்லாம் ஊடுருவி நோக்கினர்.

அந்த ஆராய்ச்சியின் பயனுக, முன்பு திராவிட

ரென்போர் அங்கே வாழ்ந்து, உன்னதநிலை எய்தி யிருக்க வேண்டும். நாளடைவில் அத் திராவிடர் தெற்கு நோக்கிச்சென்று, தமிழகத்தில் தங்கிவிட்ட னர். அங்கே காணப்படும் சின்னங்களும் தமிழகத் திராவிடரின் பூர்வீகச் சின்னங்களும் ஒன்றுபோல் உள என்று முடிவு கட்டினர்.

அந்த ஆரியத் திராவிட ஆராய்ச்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. ஏற்கெனவே நடந்த ஆராய்ச்சி யைக் குறித்து மிக்க கருத்து வேற்றுமையும் இருந்து வருகிறது. அந்த ஆராய்ச்சியை நோக்கினல், ஆரி யரும், திராவிடரும் இப்பாரத பூமியின் பூர்வீகக் குடி மக்கள் அல்லர் என்று நாம் கொள்ளவேண்டும்.

ஆங்கில நாகரிகத்தில் நம்மவர் மோகங்கொண்டு அடிமைகளாக இருந்த காலத்தில், நமது தேசம், சமயம், நாகரிகம், கலைஞானம் இவற்றின் பெரு மையை விளங்க உரைத்து, நம்மவருக்கு விழிப்பு ஊட்டியதுடன், ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்று, 'பாரத புத்திரரை இலேசாக எண்ண வேண் டாம்' என்று வலியுறுத்தி, மேனுடுகளிலே நம்மவருக்கு மதிப்பும் மகிமையும் நிலைநாட்டிவந்த **சுவாமி விவேகானந்தர்** கூறியுள்ளதை இங்கே குறிப்பிடு வோம் :

" பண்டைக் காலத்திலே இந்தியாவில் பழங்குடி மக்கள் பலர் வாழ்ந்துவர, அவர்களை ஆரியர் வந்து அழித்து ஒழித்து விட்டனர் என்று சரித்திர ஆசிரியர் என்போர் சாற்றுவர் ; அந்த ஆரியர் மத்திய ஆசியாவிலிருந்து வந்தோராவர் என்றும் சொல்லுவர். ஆரியர் சிவந்த சிகை படைத்தோர் என்று ஆங்கில ஆசிரியரில் சிலர் கூறுவர். வேறு சிலரோ கருத்த சிகை படைத்தோர் என்று உரைப்பர்.

அந்த ஆரியர் சுவிட்ஸர்லாந்து தேசத்தின் ஏரிக்கரை களில் வசித்தவர் என்று மற்றும் சிலர் விளம்புவர். அவ்வா

றெல்லாம் சொல்லுவோரும், அவர்களின் கட்டுக்கதைகளும் கொள்கைகளும் அந்த ஏரிகளிலே முழுகிவிட்டால் மிகவும் நல்லது என்பேன்! வடதுருவத்திலிருந்து ஆரியர் இங்கே வந்தனர் என்று பகர்வோரும் உண்டு. அக் கூற்றுக்களுக் கெல்லாம் ஆதாரம் ஒரு சிறிதும் கிடையாது. நமது வேதங் களிலே, உபநிஷதங்களிலே, புராண இதிகாசங்களிலே, இலக் கியங்களிலே அந்த ஆரியர் எங்கிருந்தோ இங்கு வந்தனர் என்பதற்கு இம்மியும் சான்று கிடையாது.''

சுவாமி விவேகானந்தர் மேலும் கூறுவதாவது :

''தென் இந்தியாவிலே பல்லாண்டு பல்லாண்டாகத் திராவிடர் என்போர் இருந்துவந்தனர். அவர்கள் எவ்விதத் திலும் ஆரியரினின்றும் வேறுபட்டவர்களே. தென்னாட்டுப் பிராமணர் அந்த ஆரியரில் எஞ்சியிருப்போராவர். அப் பிராமணர் வடநாட்டிலிருந்து வந்தவர்கள். அவர்கள் வேறு, திராவிடர் வேறு என்பன எல்லாம் ஆதாரமற்ற செய்திகள்.

அந்த முட்டாள்தனமான விஷயங்களை யாரும் நம்ப வேண்டாம். பாரதபூமி முழுவதும் எந்நாளும் ஆரிய மயமே. ஆரியரென்போர் வெளியிடங்களிலிருந்து இங்கு வந்து குடி யேறவில்லை. இங்கிருந்த பண்டை மக்களையோ திராவிடர் களையோ அவர்கள் அடக்கவுமில்லை, ஒடுக்கவுமில்லை. மொழி ஆராய்ச்சியாளரே! போதும் உங்களது ஆராய்ச்சி!''.

நமது தேசமுன்னேற்றத்தில் மிக்க அக்கறை கொண்டவர் அச்சுவாமிகள். ''நலம் பயவாத வாதம் எதற்கு? எல்லாரும் இனிது வாழ முயலுவோம்'' என்பதே அவர் கருத்து. ஆராய்ச்சியாளரினும் அதிக அறிவு படைத்தவர் அவர். ஆதலின் அவரது திருவாக்கை நாம் கூர்ந்துணர்தல் வேண்டும்.

ஒரு தாய் வயிற்றுப் பிறந்த மக்களிடையேயும் சாயல், தோற்றம் இவற்றில் சில வேற்றுமைகள் காணப்படும். சென்ற மூவாயிரம் நாலாயிரம் ஆண்டு களிலே நம் பூமியில் வந்து புகுந்து மக்களுடன்

மக்களாகி விட்டோர் பலராவர். அக்கலப்பினை ஊன்றி நோக்கின், கலப்பற்ற குலத்தார் இன்னவர் என்று நாம் சாதிக்க முடியுமா?

இந்நிலையில், ஆரியர் திராவிடர் என்னும் வீண் வாதத்தை விடுத்து, வருங்காலத்துக்கு ஏற்ற விழுமிய வாழ்க்கையை வகுப்பதிலும், ஒழுக்கத்தினால் விழுப்பம் எய்துவதிலுமே கண்ணுங் கருத்துமாயிருத்தல் அறிவுடைமையாகும்.

7. முன்னோரின் குடியேற்றம்

உலகசரிதம் என்னும் ஆங்கில நூல் கூறும் வண்ணம், மனித சமூகத்தின் தாயகம் பாரத பூமியே. இப்பூமியின் மக்கள் ஆதியிலே கலைஞானத்தில் மிகத் தேர்ந்து, தொழில் துறைகளில் தலைசிறந்து, நாகரிக நயத்தில் நனி உயர்ந்து வாழ்ந்து வந்தனர். அச் சமயம் உலகெங்கும் பல திசைகளிலும் பரவத் தொடங்கி அவ்விடமெல்லாம் நாகரிகத்தைப் பரப்ப முயன்றனர்.

வடக்கு நோக்கிச் சென்றோர், **துருக்கிஸ்தானம், சைபீரியா, ஜெர்மனி, கிரீஸ், உரோமாபுரி** முதலிய பல இடங்களைச் சேர்ந்தனர். மேற்கு நோக்கிப் போனவர்களோ, ஆப்பிரிக்காவின் கிழக்குப் பாகங்களிலும் வடபாகத்தே **எகிப்து** நாட்டிலும் பரவினர். கிழக்கு நோக்கி ஏகினவர்கள் **சீனு, ஜப்பான், பர்மா, சயாம், மலாயாத் தீவுகள்** முதலிய இடங்களில் குடியேறிப் பெருகினர்.

நமது மூதாதையரின் பழமையான குடியேற்ற நாடுகளில் எகிப்து தேசம் முதன்மையானது. அதற்கு அடுத்தபடி அமெரிக்காவின் சில பாகங்களைக் கூறலாம். எகிப்து தேசத்தின் இணையிலாக் கல்விமான்களில் **பிரக்ஷ்பே** என்பார் சிறந்தவர். அவர் வரைந்துள்ளது வருமாறு :

> "எண்ணுயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் பாரத மக்கள் எகிப்தில் வந்து குடியேறினர். உடனே அவர்களது பரந்த கலைஞானமும், விரிந்த நாகரிகமும் தொழில் வகைகளும் எகிப்தில் தோன்றலாயின.

கிரீஸ் தேசத்தினுக்கும் பாரதபூமிக்குமுள்ள பண்டைத் தொடர்பை ஆராய்ந்து அறிந்தவர் போகாக் என்பவர். அவர் தாம் எழுதிய நூலில் இவ்வாறு கூறியிருக்கிறார். ''பாரதபூமியைச் சேர்ந்த சிந்து நதியின் முகத்துவாரத்தே வசித்த மாலுமிகள் நுண்ணறிவும், தாளாண்மையும் வாய்ந்தவர்கள். அன்னவர் தமது பிறப்பிடம் துறந்து, கடல் வழியாகப் பாரசீகக் குடாக்கடல் குறுகி, அரேபியாவில் உள்ள உமான், ஈமான், நகரங்களின் வழியே செங்கடலை நண்ணினர்.

பின்னர் அவர்கள் எகிப்து, அபிஸீனியா என்னும் தேசங்களில் வல்லரசு கண்டு வாழலாயினர்; அப்பால் கிரீஸ் தேசத்திலும் அதனைச் சுற்றியுள்ள தீவுகளிலும் தமது நாகரிகத்தைப் பரப்பி நன்மை பல புரிந்தனர். இமாலயப் பிரதேச மக்களே ஆப்பிரிக்கா சேர்ந்து, அங்கே குடியேறினர் என்பது திண்ணம்.

பாரசீகரைப் பற்றி ஓர் அரிய நூல் எழுதியவர் ஹாக் என்பவர். அந்நூலில் ''பாரசீகரின் சமயம் ஆரிய வேத மார்க்கத்தின் ஒரு கிளையே ஆகும். இருவரின் சமயச் சடங்குகளும், கோட்பாடுகளும் ஒத்துள்ளன. இருவரது தெய்வங்களின் திருநாமங்கள், வீரரின் சரிதங்கள், வேள்வி விதிகள் இவற்றில் யாதொரு வேற்றுமையும் இல்லை.''

ஆப்கானிஸ்தானம் என்னும் தேசமோ ஆதியில் **காந்தாரம்** என்னும் பெயருடன் பாரதபூமியின் ஒரு பாகமாக இருந்து வந்தது. துருக்கிஸ்தானம் என்பது ஆசியாவின் வடமேற்கில் உள்ள ஒரு பெரிய நிலப்பரப்பு. அது சீன துருக்கிஸ்தானம், ருஷிய துருக்கிஸ்தானம் என்று பல வகைப்படும். அங்கிருந்த மக்கள் ஆதியில் **துரானியர்** என்று அழைக்கப் பெற்றனர்.

அன்னவரின் மூதாதை, பாரத புத்திரராகிய **துர்வாஸன்** என்பவரே. இவரும் இவர் மக்களும் துருக்கிஸ்தானம் சென்று குடியேறினர். அவர்கள் அங்கே பரவி வாழ, அது காரணமாக அது துர்வசஸ்

தானமாகி, நாளடைவில் துருக்கிஸ்தானம் என்று பெயர் பெற்றது என்று மாக்ஸ் முல்லர் கூறுகிருர்.

ஆதிமுதல் நமது தமிழகத்தினுக்கும் சீனு, மலாய்த் தீவுகளுக்கும் வர்த்தகத் தொடர்பு அதிகம் உண்டு. தமிழர் கப்பல் வியாபாரத்தில் தலைசிறந்த வர்கள். அம்மலாய்த் தீவுகளிலுள்ள **மலாக்கா** ஜல சந்தி தமிழரின் கப்பல்களுக்கு ஒரு சந்திப்பு இட மாகும். அங்கே தமிழ் வணிகர் முதலில் பண்டக சாலை கொண்டனர். அவை நாளடைவில் துறைமுக நகரங்களாக மாறின.

அத் துறைமுக நகரங்களில் **மலாக்கா, சிங்கப் பூர், கிட்டா** முதலியவற்றைக் குறிப்பிடலாம். தமி ழகத்திலிருந்து அம் மலாய்த் தீவுகளில் குடியேறிவர் கள் முதன்முதல் **பூஜாங்** நதிக்கரையில் நகரொன்று நிறுவினர். அப்பிரதேசம் **மேகாங்** பள்ளத்தாக்கைச் சேர்ந்தது. அங்கே குடியேறியதும் நமது கலைஞா னம், பழக்க வழக்கம், பண்பாடு, மதக்கொள்கை, அரசியல் நெறிகள் இவை நாளடைவில் அக் கீழ்த் திசையெங்கும் பரவின.

கீழ்த் திசைகளிலே வர்த்தகம் நடத்திய வணிகரில் தமிழகத்தைச் சேர்ந்த **பந்தன்** என்பான் பெரும் புகழ் வாய்ந்தவன். அவன்மீது **ஔவைப் பிராட்டி** யார் **பந்தனந்தாதி** என்று ஒரு சிறுநூல் பாடி யிருக்கிருள்.

கி. பி. ஆரும் நூற்ருண்டின் ஆரம்பத்தில் அங்கே காம்போஜா, சம்பா, ஸ்ரீ விஜயா என்னும் பெரிய அரசுகள் தோன்றின. அவற்றைத் தோற்று வித்தவர்கள் தமிழரின் மூதாதையராவர். காம்போஜா என்னும் நாட்டில் தோன்றியது, காம்போஜா அரசு. சியாம் நாட்டில் தோன்றியது, சம்பா அரசு. மலாயா

நாட்டில் தோன்றியது ஸ்ரீவிஜயா அரசு. காம்போஜா நாட்டிலே நம்மவரால் பயிர் செய்யப்படும் பருத்தி உலகப் பிரசித்தி பெற்றுள்ளது.

சீன தேசம் நமது புத்த மதத்தை ஏற்றுக் கொண்டது. அசோக மகாராஜனது தூதுவர் அங்கே அச் சமயத்தை நிலைநாட்டினர். பின்னர் நமது பூமிக்கும் சீனவுக்கும் இடையே வர்த்தகம் வளர்ந்தது; போக்குவரவும் மிகுந்தது. பர்மாவைச் சேர்ந்த பெகு நாட்டில் நம்மவரது குடியேற்றம் தோன்றியது. அப்பால் அங்கே நம்மவரின் அரசும் முளைத்தது. பர்மியரின் நாகரிகம் பாரத நாகரிகத்தின் ஓர் அமிசமே ஆகும் என்று **வில்ஸன்** என்னும் சரித்திர ஆசிரியர் சாற்றுகிறார்.

சியாம் நாட்டில் குடியேறிய நம்மவர் அங்கே நமது கலைகளைப் பரப்பியதுடன், அற்புதமான ஆலயங்களும் எழுப்பினர். **அங்கர்வாட்** என்னும் நகரிலுள்ள ஆலயம் நமது மூதாதையரின் புகழை இன்றும் எடுத்துக் காட்டும். அந்த ஆலயங்களின் சுவர்களிலே இராமாயண பாரத நிகழ்ச்சிகள் சித்திரிக்கப் பட்டுள்ளன.

கலிங்க நாட்டிலிருந்து பயணமான நம்மவர் ஜாவா—சாவகம்—என்னும் தீவில் குடியேறி, அங்கு நமது நாகரிகத்தையும் பண்பாட்டையும் நிலைநாட்டினர். மலாய் நாட்டிலுள்ள போர்னியோ என்னும் பிரதேசத்திலே ஆங்காங்கு ஆலயங்களும் கோவில்களும் தென்படும். நம்மவரின் குடியேற்றத்தை அறிவிக்க அவையே அறிகுறியாம்.

சுமத்ரா என்னும் தீவின் தலைநகரமான **ஸ்ரீவிஜயாவில்** சைவேந்திர மன்னர்கள் ஆட்சி செலுத்தி வந்தனர். அவர்கள் ஏழாவது நூற்றாண்டில் அக்கம்

பக்கத்திலிருந்த தீபகற்பங்களை வென்று, மலாக்கா ஜலசந்திப் பகுதிகளில் ஆதிக்கம் கொண்டனர். எட்டாவது நூற்ருண்டில் மலாயா தீபகற்பமும், மத்திய ஜாவாத்தீவும் இவர்களின் வசமாயின. இந்த சைவேந்திரரோடுதான் சோழ அரசர்கள் நூற்ருண்டுப் போர் தொடுத்தனர்.

சைவேந்திர மன்னருக்குப் பின்னர் ஜாவாத்தீவு, மரம்மணி குலத்தைச் சேர்ந்த மன்னர்களின் வசமாயிற்று. **பாராம்பனன்** என்ற இடத்தில் அழகான எட்டு ஆலயங்களை அன்னுர் நிறுவினர். அவற்றில் நான்கு ஆலயங்கள் முறையே **பிரம்மா, விஷ்ணு, சிவன், நந்தி** ஆகிய தெய்வங்களின் வழிபாட்டுக்கு உரியன. இக் கோவில்களின் சுவர்களில் இராமாயணக் காட்சிகள் விவரமாகவும் சிறப்பாகவும் சித்திரிக்கப் பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் மனத்துட்கொண்டே பாரதியார் பின்வருமாறு பாடினர் போலும் :

“ சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுந் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய் நாடு.
சீனமிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு ”.

எனவே, நமது முன்னேர் எங்கும் சென்று குடியேறி இனிது வாழ்ந்தனர் ; பிறரையும் இனிது வாழச் செய்தனர். பிறரை அடிமைப்படுத்தி அன்னுரின் நற்பயன்களைக் கண்டு கவர்ந்துகொள்ள மேனுட்டினர் எங்கும் சென்று குடியேறுவர். ஆதிகால

நம்மவரோ அவனியெங்கும் அறிவுச்சுடர் கொளுத்தவும், பண்பாடு பரப்புவுமே போயினர்.

பிரான்ஸ் தேசத்து மேதையும் பேராசிரியருமான டெல்போ என்பார், "பாரத பூமியிலே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் பொங்கிப் பரவிய நாகரிகத்தின் சாயல் நம்மைச்சுற்றி எங்கும் தோன்றுகின்றது. நமது உலகின் மூலை முடுக்குகளிலும் அச் சாயலைக் காணலாம். கங்கை நதியின் கரையிலே ஆதியில் உதித்த நாகரிகத்தை அமெரிக்காவிலும் பார்க்கலாம். ஐரோப்பாவிலும் பார்க்கலாம்" என்று வரைந்திருக்கிருர்.

1827—3

8. தூதும் துதியும்

பண்டை நாளில் நமது மூதாதையர் பாருல கெங்கும் பரவிப் பெருமை அடைந்தது ஒரு புறம் இருக்க, அந்நாளிலிருந்த நமது பூமியின் வேந்தர் பிற நாட்டு வேந்தருக்குத் தூது அனுப்பியும், துதி எய்தியும் வாழ்ந்ததை இனிக் காண்போம்.

ஏறக்குறைய இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டு களுக்கு முன்னம் கி. மு. 620 ஆம் ஆண்டில் **அஸீரியா** நாட்டின் அரசனுக்கும் பாரசீக வேந்தனை **கைகுஸ்** என்பவனுக்கும் போர் மூண்டது. இருவரும் படைவலியில் பெருத்தவர்.

போர் நடந்தால், பேரழிவு நேரும் என்று நமது பூமியின் அரசனை **அரிமளன்** என்பார் அறிந்து கொண்டார்; ஆதலின், இருவருக்கும் இடையேயுள்ள பிணக்கைப் போக்கி நேசத்தை நிலைநாட்டத் தாம் முயலுவதாக அறிவித்தார். அதற்கு அப்பாரசீக வேந்தனும் இசைந்தான்.

கி. மு. ஆறும் நூற்றுண்டிலே பாரசீகத்தை ஆண்டுவந்த **ஸைரஸ்** என்னும் சக்கிரவர்த்தியின் சபையில் நமது தூதர் வீற்றிருந்து, அரிய ஆலோசனைகள் சொல்லி, அரும்புகழ் அடைந்தனர்.

கி. மு. 480 ஆம் ஆண்டிலே பாரசீக சக்கரவர்த்தி யாக **ஷெரஸ்** என்பவன் இருந்தான். கிரீஸ் தேசத்தின்மீது அம்மன்னர் மன்னவன் படை கொண்டு பாய்ந்தான். பிரம்பாலான வில்லும், இரும்பு முனை வாய்ந்த அம்பும் தாங்கித் தூய வெண்மை ஆடை தரித்த நமது பாரதப் போர்வீரர் அவனுக்குத் துணையாக நின்று அருஞ்சமர் செய்தனர்.

கி. மு. நாலாம் நூற்றுண்டிலே **டைரியஸ்** என்னும் பாரசீக வேந்தனே மகா **அலெக்ஸாந்தர்** எதிர்த்த காலேயில், பாரதவீரர் அப்பாரசீக வேந்தனது சேனேயில் சேர்ந்து பெருவீரம் விளைத்தனர்.

கி. மு. 24 ஆம் ஆண்டிலே **போரஸ்** என்னும் பாரத வேந்தர் உரோமாபுரியின் சக்கரவர்த்தியான **அகஸ்டஸ்** என்பானுக்கு இருமுறை தூது அனுப்பினுர். முதலில் சென்ற தூதோ ஸ்பெயின் தேசத்தில் அச்சக்கரவர்த்தியைக் கண்டு பேசித் திரும்பியது. இரண்டாவது முறை சென்ற தூது **சாமாஸ்** என்னும் தீவில் அச்சக்கரவர்த்தியைச் சந்தித்துப் பேசிற்று.

உரோமாபுரியை உரோமகப் பட்டணம் என்று நம்மவர் அழைத்து வந்தனர். அதனேத் தலேநகராகக் கொண்ட **இத்தாலி** தேசத்தை எரிமலே நாடு என்று கூறுதல் வழக்கம். பாரத பூமியும் உரோமாபுரியும் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்ததனுல், இரு தேச அரசரும் தம்தம் தூதுவரை அனுப்பி நட்புரிமை கொண்டனர்.

மார்க் **ஒளரேலியன்** என்பவர் உரோமாபுரியை வென்று, வாகை மாலேயுடன் அந்நகரில் புகுந்த பொழுது, பாரத பூமியின் தூதுவர் ஆங்கிருந்து அவரது வெற்றியைப் போற்றினர்.

கி. பி. முதல் நூற்றுண்டிலே உரோம சக்கரவர்த்திகளின் சபையை நமது தேசத்தின் சோதிட வல்லார் அலங்கரித்தனர். வருங்கால நிகழ்ச்சிகளே யும், வெற்றி விளேவுகளேயும் அன்னவர் மூலம் அச்சக்கரவர்த்திகள் அறிந்து கொள்ளுதல் வழக்கம். சோதிடத்திலே அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தது.

கி. மு. முதல் நூற்றுண்டு முதல் கி. பி. ஆறும்

நூற்றுண்டு வரையில், நம்மவர் பலர் உரேமாபுரிக்குப் போய்வந்தனர். உரோமரும் நமது பூமிக்குவந்து போயினர். உரோம வீரர் தமிழ் வேந்தரின் சேனையில் சேர்ந்து சேவை புரிந்ததாக நமது தமிழ் நூல்கள் கூறுகின்றன.

இங்கிலாந்தை உரோமாபுரி கட்டியாண்ட காலத்திலே, பாரத வீரர் அடங்கிய படை ஒன்று அங்கே காவல் புரிந்து நின்றது. கி. மு. 189 ஆம் ஆண்டுக்கு முன், பாரத பூமியின் மேதாவிகள்—ஆணும் பெண்ணுமாக—உரோமாபுரி, கிரீஸ் ஆகிய இவ்விரு நாடுகளிலும் நிரம்பியிருந்தனர். நமது தேச மஸ்லின் எனப்படும் 'ரவை சல்லா'த் துணியையும், ஆபரணங்களையும் உரோமர் ஆவலுடன் வாங்கி அணிந்து வந்தனர். அவ்விதம் அயல் நாட்டுப் பொருள்களை வாங்குதல் கூடாது என்று உரோமாபுரியில் பிறந்த சட்டமும் பலிக்கவில்லை.

உரோம அரசரின் கொடுமைக்கு ஆற்ருத உரோமரில் பலர் பற்பல சமயங்களில் பாரத பூமியிலே தஞ்சம் புகுந்ததுண்டு. உரோம 'கவர்னர்' ஒருவர் இங்கே தஞ்சம் புகுந்து உயிர் தப்பினர்.

கப்பல் சண்டையிலே பாரதபுத்திரர் பெருவீரம் விளைப்பர்; கடல் பிரயாணத்திலே அன்னவர் மிக்க வல்லவர் என்று **நோனஸ்** என்னும் எகிப்திய கவிஞர் தம் கவி யொன்றில் குறிப்பிடுகிருர்.

அஸீரியா நாட்டின் அரசியான **ஸெமிரமிஸ்** என்பாள் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன் நானூறு கப்பல்களும், மூன்று இலட்சம் காலாளும், இருபதினுயிரம் குதிரை வீரரும் கொண்டு பாரத பூமியைத் தாக்கினுள். போரிலே படுகாயம் அடைந்ததனுல், அவள் புறங்காட்டி ஓடநேர்ந்தது.

ஆசியாத் துருக்கியை அடுத்த **ஆர்மீனியா** நாட்டிலே கிறிஸ்தவ சகாப்தத்துக்குமுன், பாரத புத்திரர் குடியேறி ஆலயங்கள் அமைத்திருந்தனர். கிறிஸ்தவ மதம் தோன்றியவுடனே அந்த ஆலயங்கள் இடியுண்டன. அந்த இடிபாட்டைத் தடுக்க ஆறு வேதியர் விரைந்து சென்றனர். ஆயினும் அவர்கள் உயிரிழக்க நேர்ந்தது. ஒரே நாளில் 5050 பாரத புத்திரரை **கிரேகரி** யென்பார் பலவந்தமாக அக் கிறிஸ்தவ மதத்தில் சேர்த்தார்.

ஆசியாத் துருக்கியிலே செங்கடலை அடுத்துள்ள பிரதேசம் ஆதியிலே நம்மவரின் குடியேற்ற நாடாக இருந்தது. அப்போது அதற்கு **மக்கேச தேசம்** என்று பெயர். அங்குள்ள மக்கமா நகரிலே சிவாலயம் ஒன்று இருந்தது. இஸ்லாம் மதம் தோன்றிய பின், ஆங்கிருந்த நமது ஆலயங்களெல்லாம் அழிவுற்றன. நம்மவரில் சிலரும் விதியின்றி அம்மதத்தில் சேர்ந்தனர். ஆயினும், பல வேதியரின் குடும்பங்கள் மதம் மாறுமல் அங்கேயே வசித்து வந்தன. அக் குடும்பத்தாரை **உஸ்ஸேனி பிராம்மணர்** என்று அழைத்துவந்தனர்.

9. ஐம்பத்தாறு தேசங்கள்

பாரத புத்திரரிடையே கால அடைவில் இரு பெரிய அரச குலங்கள் தோன்றின. அவை சூரிய குலம், சந்திர குலம் என்பவை. கதிரவனைக் குல தெய்வமாகக் கொண்டது சூரியகுலம். சந்திரனைக் குலதெய்வமாகக் கொண்டது சந்திரகுலம்.

இந்த இரு குலத்திலும் ஓங்குபுகழ் கொண்ட சக்கரவர்த்திகள் எத்தனையோ பேர் இருந்தனர். நீதியும் நெறியும் வழுவாமல் அவர்கள் இப்பூமியை ஆண்டு வந்தார்கள்.

சூரிய குலத்தைச் சேர்ந்த சக்கரவர்த்திகளில் மிகவும் பிரசித்தி பெற்றவர், இராமபிரான். அவரது ஆட்சியிலே வறியோரும் இல்லை. அறிவிலிகளும் இல்லை. ஆதலின், அத்தகைய **இராமராஜ்யம்** இப்போதும் ஏற்படவேண்டும் என்று **காந்தியடிகள்** கூறிவந்தார்.

அப்பிரானது வாழ்க்கை வரலாறு இராம கதை எனப்படும். ஆயினும், இராமாயணம் என்பதே பெருவழக்கான பெயர். அந்த இராமாயணத்தை நம்மவர் அனைவரும் பயபக்தி விசுவாசத்துடன் படித்தும் கேட்டும் வருவர்; தெய்வப் பிறப்பு எனவும் அப்பெருமானைக் கருதித் தொழுவர். பலர் இராமன் என்று பெயர் கொள்வர்.

சந்திரகுல சக்கரவர்த்திகளில் சாலச் சிறந்தவர் **தருமபுத்திரர்** ஆவார். அவரது அரசு தர்ம ராஜ்யமாக விளங்கியது. இப்போதும் தர்மத்தில் சிறிதும் தவறாதவனை 'இவன் தருமபுத்திரன்' என்பார்கள். பொறுமைக்கு இவர் ஒரு பூஷணமாக விளங்கி வந்தார்.

தேசத்திலே பற்பல இடங்களில் தர்ம இராஜா கோயில்கள் உண்டு. இவரது தேவிக்குத் திரௌபதி என்று பெயர். அவளுக்கும் ஆலயங்கள் உண்டு. உற்சவங்களும் நடக்கும். தீமிதித் திருநாள் மிகவும் பெயர் பெற்றது. இருவரும் தெய்வ அம்சம் வாய்ந்தவர்கள் என்பதே பெரும்பான்மையோரது நம்பிக்கை. இவர்களின் வரலாறு **மகாபாரதம்** எனப்படும்.

இராமாயணமும் மகாபாரதமும் நம் நாட்டிற்கு இருகண் போலுல் சிறந்த இதிகாசங்களாகும். இதிகாசம் என்பதற்கு சரித்திர நிகழ்ச்சிகளைக் கூறும் காவியம் என்பதே பொருள். மகா பாரதத்தை ஐந்தாவது வேதம் என்பர். கல்வியில் பெரிய **கம்பர்** முன்னதை அற்புதமாகப் பாடியிருக்கிருர். பின்னதை **வில்லிபுத்துராழ்வார்** என்பவர் அழகாக இயற்றியுள்ளார்.

அந்நாளில் நமது பூமியை ஐம்பத்தாறு தேசங்களாக வகுத்திருந்தனர். சிறந்த சக்கரவர்த்திகள் இருந்தாலும், அரசாட்சியின் நலத்தை மதித்தே அவ்வாறு தேசங்கள் வகுக்கப் பெற்றன. அந்த ஐம்பத்தாறு தேசங்களாவன :—

1. **அங்கம்** : இதனை இப்போது பீகாரின் கிழக்குப் பாகம் எனலாம். 2. **வங்கம்** : இது இப்போதுள்ள வங்காளத்தின் ஒரு பாகம். 3. **கலிங்கம்** : ஒரிஸ்ஸா மாகாணத்தை அடுத்தது. 4. **கேரளம்** : திருவாங்கூரும் கொச்சியும் அடங்கிய பாகம். 5. **காசுமீரம்** : இப்போதும் அதே பெயர் வழங்கி வருகின்றது ; பாரத பூமியின் வடமேற்குக் கோடியில் உள்ளது. இயற்கை நலமெல்லாம் வாய்ந்த எழில் நிறைந்த நாடு இது.

6. **காமரூபம்** : அஸ்ஸாம் மாகாணத்தின் ஒரு

பகுதி. 7. **மராட்டம்:** பம்பாய் மாகாணத்தின் ஒரு பகுதி. 8. **ஆந்திரம்:** ஒரிஸ்ஸா மாகாணத் திற்குத் தென்மேற்கேயுள்ளது. 9. **சௌராஷ்டிரம்:** இப்போதும் அதே பெயருடன் விளங்குகின்றது. 10. **கூர்ஜரம்:** இப்போதும் அப்பெயரே உடையது.

11. **மலையாளம்:** கொச்சியை அடுத்த பாகம். 12. **கர்ணுடகம்:** மைசூர் ஹைதராபாத் இவற்றின் ஒரு பகுதி. 13. **அவந்தி:** மாளவம் என்னும் பிரதேசத்தின் ஒரு பிரிவு. 14. **விதர்ப்பம்:** பீரார் மாகாணமே விதர்ப்பம் எனப்படும். 15. **சோழம்:** சோழநாடு. தஞ்சை திருச்சி ஜில்லாக் கள் கொண்டது. 16. **பாஞ்சாலம்:** டில்லிக்கு வட மேற்கில் உள்ள பிரதேசம். 17. **காம்போஜம்:** இந்தியாவின் வடமேற்கில் உள்ள பிரதேசம். 18. **விராடம்:** இராஜபுதனத்தில் உள்ளது. 19. **விதே கம்:** பீகார் மாகாணத்தின் வடபாகம்.

20. **கிராதம்:** விந்திய மலையை அடுத்துள்ள ஒரு பாகம். 21. **நேபாளம்:** இதே பெயருடன் இப் போதும் வழங்கி வருகிறது. 22. **கோசலம்:** அயோத்தி நகரையும் அதனை அடுத்துள்ள பிரதேசத் தையும் குறிக்கும். 23. **மகதம்:** பீகார் மாகாணத் தின் ஒரு பாகம். 24. **உத்கலம்:** ஒரிஸ்ஸா எனப் படும். 25. **குந்தளம்:** கூர்ஜரத்தை அடுத்துள்ள பூமி. 26. **கொங்கணம்:** பம்பாய்க்குத் தெற்கில் உள்ள ஒரு நிலப் பரப்பு. 27. **கேகயம்:** வட மேற்கு இந்தியாவில் விளங்கியது.

28. **குரு:** பாஞ்சாலத்தை அடுத்திருந்த பூமி. 29. **சிம்மளம்:** இப்போது இலங்கை எனப்படும். 30. **குலிந்தம்:** மேலைக் கடற்கரையில் விளங்கியது. 31. **மச்சம்:** இந்தியாவின் மேலைக் கடற்கரை ஓர

மாக விளங்கிய பூமி. 32. **மத்திரம்:** இராஜபுதனத்தில் ஒரு பாகம். 33. **சவ்வீரம்:** சிந்து தேசத்தை அடுத்த ஒரு பிரதேசம். 34. **சிந்து:** சிந்துநதி பாயும் பிரதேசம். 35. **பர்ப்பரம்:** இமயமலையின் அடிவாரத்திலுள்ள ஒரு பிரதேசம்.

36. **கன்னடம்:** மைசூர் இராச்சியத்தின் ஒரு பாகம். 37. **சீனம்:** இந்தியாவின் கிழக்கே இந்தோசீனு என்ற பெயருடன் விளங்குவது. 38. **காசம்:** காசி இராச்சியம் எனப்படும். 39. **பாண்டியம்:** மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்கள் கொண்டது. 40. **விந்தம்:** விந்திய மலையை அடுத்த ஒரு பூபாகம். 41. **சூரசேனம்:** பஞ்சாப் மாகாணத்தின் ஒரு பிரதேசம். 42. **சாளுவம்:** பஞ்சாப் மாகாணத்தின் ஒரு பாகம். 43. **நிடதம்:** மத்திய மாகாணத்தின் ஒரு பாகம். 44. **பல்லவம்:** தென்னிந்தியாவிலே காஞ்சியை அடுத்த ஒரு பகுதி. 45. **ஒட்டிரம்:** அல்லது ஒட்டியம் ஒரிஸ்ஸா மாகாணத்தின் ஒரு பாகம்.

46. **திராவிடம்:** தென்னிந்தியாவின் ஒரு பாகம். 47. **துளுவம்:** கொச்சியை அடுத்த ஒரு பாகம். 48. **மகேந்திரம்:** தென்னிந்தியாவின் கோடியிலுள்ள பூபாகம். 49. **மாளவம்:** இப்போதும் அப்பெயருடன் விளங்குவது. 50. **வங்காளம்:** வங்காள மாகாணத்தின் ஒரு பாகம். 51. **சோணகம்:** மத்திய இந்தியாவில் ஒரு பிரதேசம்.

52. **தெங்கணம்:** இப்போதுள்ள ஐதராபாத் இராச்சியத்தின் ஒரு பாகம். 53. **யவனம்:** இந்தியாவின் வடமேற்குக் கோடியின் ஒரு பாகம். 54. **இலாடம்:** பஞ்சாப் மாகாணத்தின் ஒரு பிரிவு. 55. **காந்தாரம்:** ஆப்கானிஸ்தானம் என்னும் தேசத்

தின் பழைய பெயர். 56. **குடகு:** குடகு நாடு என இப்போதும் வழங்குவது.

இவற்றிலே சீனம், சிம்மளம், பாரசீகம், காம் போஜம் ஆகிய நான்கும் நவீன பாரத பூமிக்கு வெளியே உள்ளன. முன்னாளில் அந்நான்கும் பாரத வேந்தரால் ஆளப்பட்டு வந்தன. ஆதலின், புராதன பாரத பூமியின் தேசங்களாக முன்னோர் இவற்றைக் கணக்கிட்டனர்.

இனி இப்பூமியை **ஆரியாவர்த்தம், தட்சிண பதம்** என இரு பிரிவுகளாகவும் பேசுவது உண்டு. விந்தியமலை இப்பூமியின் நடுவே கிழமேலாக உள்ளது. அதன் வடக்கேயுள்ள பாகம் ஆரியாவர்த் தமாம். தெற்கிலுள்ளதே தட்சிணபதம். மேலும், ஆரியா வர்த்தத்தில் கங்கை, யமுனை, சரயு, சிந்து, சரஸ்வதி முதலிய புண்ணிய நதிகள் ஓடுகின்றன. தவிர, இருஷிகேசம், கேதாரம், நைமிசாரண்யம், சாளக்கிராமம், மகாகாளம், அயோத்தி, அவந்தி, காசி, பிரயாகை, பிரமகபாலம், அரித்துவாரம் முதலிய பல புண்ணிய தலங்கள் நிறைந்துள்ளன.

தட்சிணபதமோ கர்மபூமி எனப்படும். தேவரும், துறவியரும் தவறு செய்து மீண்டும் பிறவி கொள் ளின், அக்கருமத்தைக் கழிப்பதற்கு வந்து உதிப்ப தனால் இப்பெயர் ஏற்படலாயிற்று. மற்றும், கர்ம பூமி வாசிகள் நித்திய கடன்களையும் சாஸ்திர விதி களையும் மறவாது நடந்து வருவதும் அப்பெயருக்கு ஒரு காரணமாகும்.

சக்கரவர்த்திகள் சாலச் சிறந்து நின்ற காலத் திலே அத் தேசங்களின் அரசரனைவரும் செவ்வனே ஆட்சி புரிந்து வந்தனர். அச் சக்கரவர்த்திகள் தலை சாய்ந்ததும், அந்த அரசரிலே சிலர் போக போக்கியங்

களில் மூழ்கி விட்டனர். வேறு சிலரோ பிற அரசர் களை அடிப்படுத்த எண்ணி, அன்னியரின் உதவியை நாடி நின்றனர். அதனுல் அன்னியர் இங்குப் படை யுடன் புக நேர்ந்தது.

இந்த 56 தேசங்களிலே முடியுடை வேந்தர் தலை முறை தலைமுறையாக இருந்து வந்தனர். ஆயினும், மக்களினுல் தேர்ந்தெடுக்கப் பெற்ற அரசரும் இருந் தனர். அரசரனைவரும் தமது விருப்பப்படி ஆட்சி நடத்த முடியாது; அறிஞரும் குணசீலரும் நிறைந்த மந்திரி சபைக்கு உட்பட்டே நடத்துதல் வேண்டும். அல்லாமலும் ஆண்டவனுக்கும் பாவ புண்ணியத்துக் கும் பயந்து நடத்தல் அரசனது கடமையாகும்.

அமைச்சர் குழாத்தின் நன்மதியைப் புறக் கணித்த அரசர் முடியிழக்கவும், உயிர் துறக்கவும் நேர்ந்த சமயங்களும் உண்டு. தர்ம சாஸ்திரங்களே அந்நாளில் சட்டமாக இருந்தன. அரசினிடம் குடி மக்கள் பக்தி விசுவாசம் பூண்டிருந்தனர் என்றுல், அரசரும் மக்களிடம் அன்பும் மதிப்பும் காட்டி நடந்து வந்தனர். அதனுல் அரசர் தேவாம்சம் வாய்ந்தோராக மதிக்கப் பெற்றனர்.

10. வேத சாஸ்திரங்கள்

வாக்கையும் எழுத்தையும் தழுவி, ஒருவனை மதிப் போம். ஒரு சமூகத்தை அதற்குரிய நூல்களைக் கொண்டு மதித்தல் வேண்டும். பாரத புத்திரரின் பண்டைய நூல் **வேதம்** எனப்படும். தமிழிலே அதனை **மறை** என்பர். வேதம் என்பதற்கு அறிவு என்பதே பொருள்.

வேதங்கள் நான்கு. அவை **இருக், யஜுர், சாமம், அதர்வணம்** என்பன. அந்நான்கிலும் பழ மையும் முதன்மையும் வாய்ந்தது இருக் வேதமே. உலகத்து நூல்களில் அதுவே முந்தியது. மானிட கோடிகளின் அறிவினுக்கு ஆதாரம் வேத இலக்கியமே என்று மாக்ஸ்முல்லர் மொழிந்திருக்கிருர்.

வேதங்களை எழுதாக்கிளவி என்பர். அவ்வேதங் கள் எப்போது உதித்தன என்று எவரும் துணிந்து கூற இயலாது. சிலர் எண்ணுயிரம் ஆண்டுகளுக்கு-முன் உதித்தது என்பர். வேறு சிலரோ பத்தாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றியது என்பர்.

சமீப காலத்தில்தான் வேதங்கள் அச்சுவாகனம் ஏறின. நேற்றுவரையில் குரு சிஷ்யரின் மூலம் மக் களின் மன ஏட்டிலேயே அவை திகழ்ந்து நின்றன. அதுபற்றியே எழுதாக்கிளவி என்னும் பெயர் அதற்கு வழங்கியது.

தேவாரம், திருவாசகம் இவற்றைத் தமிழ் வேதம் என்பர். **திருக்குறள்** தமிழ்மறை எனப்படும். **திருவாய்மொழி**யும் தமிழ்மறையேயாம் என்பர் வைணவர். கிறிஸ்தவர் தங்களது **விவிலிய** நூலைச் சத்திய வேதம் என்றே சாற்றுவர். “வேத வாக்கோ

இது!'' என்பதும் வேதத்தின் பெருமையைக் குறிக்கும்.

"தனது நலம் தனது முன்னோரின் பெருமை, தனது சமூக சரிதம், தனது அறிவு வளர்ச்சி இவற்றை மதிக்கும் எவரும் வேதசாஸ்திரங்களை அவசியம் படித்தறிய வேண்டும்'' என்று மாக்ஸ்முல்லர் கூறுகிறார். "மனித சமூகத்தின் புத்தகாலயத்திலே மிகப் பழமையானது வேதமே'' என்று பேராசிரியர் ஹீரன் கூறுகிறார்.

அறிவுக்கு உரிய வித்துக்கள் எல்லாம் வேதத்தில் உள. வேதபோதமோ விஞ்ஞான சாஸ்திரத்தின் இலட்சியத்தைத் தழுவியது என்பர் நமது மூதாதையர். வேதங்கள் சம்ஸ்கிருதத்திலேயே உள்ளன. ஒரு காலத்தில் சம்ஸ்கிருதமே உலகிலிருந்த ஒரே பாஷையாம் என்று பேராசிரியர் பாப் என்பார் பகர்வார். ஐரோப்பாவில் வழங்கும் நவீன மொழிகளுக்கெல்லாம் அதுவே தாயகம் என்று பிரெஞ்சு மேதையான டூபோ என்பார் கருதுகிறார்.

ஆதியிலே இருக் வேதத்தில் ஓர் இலட்சம் சுலோகங்களுக்குமேல் இருந்தன. இப்போதோ ஆயிரத்து சொச்சம் சுலோகங்களே உள்ளன. இவை பலவும் ஆண்டவனது புகழையும், கடவுளரின் குணகணங்களையுமே எடுத்துரைக்கின்றன. ஆண்டவனை வேத முதல்வன், வேதப்பொருள் என்பர் பெரியோர்.

கலியுகம் தொடங்குவதற்குமுன், வியாச மகா முனிவர் வேதங்களை வகுத்தார். ஆதலின் வேத வியாஸர் என்று அவர் பெயர் கொண்டார். வேத சுலோகங்கள் அல்லது பாக்களைப் பாடியவர்கள் ருஷிகளே. அவர்களில் ஒன்பதின்மர் மிகவும் முக்கியமானவர்கள். அவர்கள் வசிஷ்டர், விசுவாமித்திரர்,

வாமதேவர், அத்திரி, அகஸ்தியர், பிருகு, கண்வர், ஜமதக்கினி, பாரத்வாஜர் என்போராவர். தாம் இவர் கள் வமிசத்தில் வந்ததாக இக்கால வேதியர் கூறிக் கொள்வர்.

வேதப் பாக்களிலே ஆகாயம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், அக்கினி இவைபற்றிய துதிகள் காணப்படும். அக்கால மக்கள் ஆகாயத்தையும் சூரி யனையும் தீயையும் முதன்மையாக வணங்கி வந்தனர். இயற்கைச் சக்திகளை அல்லது பொருள்களை அவர்கள் வணங்கியது ஏன் ?

ஆகாயம் என்பது அகண்டமானது. அதன் பரப்பை எவரும் கண்டறிய முடியாது. அது நீலநிற மாகத் தோன்றும் ; கறுத்தும் இருக்கும். பெருங்கடல் களின் ஆழத்தை மேனாட்டினர் ஒருவாறு கணக்கிட் டுள்ளனர். ஆனால் ஆகாயத்தின் பரப்பை இன்றும் கண்டறியவில்லை ; என்றும் கண்டறிய முடியாது.

அகண்டமான ஆகாயம் இருண்டும் தோன்றும். ஆண்டவன் நமக்குக் கண்கள் அளித்திருப்பினும் சூரிய, சந்திர ஒளியோ விளக்கொளியோ இல்லை யானால் அக்கண்கள் பயன்படா. கண்ணின் பயனை ஊட்டுபவன் கதிரவன். அக்கதிரவன் இன்றேல் உலக மும் உயிர்களும் உருப்படா.

அதிகாலையில் எழுந்து நீராடியதும் சூரியனை வணங்கிவரின், நெடுநாள் நோய்நொடியின்றி மனிதர் வாழலாம். மேனாட்டு விஞ்ஞான விற்பன்னரும் அச் சூரிய நமஸ்காரத்தை மிகச் சிறந்ததென ஒப்புக்கொள் கின்றனர். வான வீதியிலே சூரிய, சந்திரர் தோன்றி நலம் பயத்தல் ஒருபுறம் இருக்கட்டும்.

உடுக்களும், மழை இடிகளும், மாருதங்களும் ஆகாயத்திலேதான் தோன்றுகின்றன. அவை இல்லா

விடின் உலகம் நடவாது. ஆதலின் அந்த இயற்கைச் சக்திகளையெல்லாம் வணங்குதல் கடமையென ஆதி கால பாரதர் உணர்ந்திருந்தனர். அவை அனைத்தை யும் படைத்த ஒருவன் இருத்தல்வேண்டும் என்றும் ஊகித்து அறிந்தனர். அவற்றினுக்கு நம்மால் கைம் மாறு செலுத்த முடியுமோ ? வணக்கமாவது செலுத்த வேண்டும் அல்லவா ?

அச்சக்திகளின் துணைகொண்டே நமக்கு வேண்டிய அனைத்தையும் நாம் தேடிக்கொள்ளுகிறோம். ஆண்டவன் எம்மாத்திரம் என்று இறுமாந்து பேசும் மனிதர், தங்கம் வெள்ளி இவற்றை உற்பத்தி செய்ய வேண்டாம். மண்ணையாவது உண்டாக்க முடியுமா? எண்ணிப் பார்க்கவேண்டும்.

மனித சக்தி என்பது எம்மாத்திரம்? ஆண்ட வனது சக்தியே சக்தி! அவன் அமைத்துள்ள இயற் கைப் பொருள்களின் உதவியினாலேயே நாம் வாழ் கின்றோம். இந்த உண்மையை ஆதியில் கண்டறிந் தனர் நமது முன்னோர். அந்த அறிவின் பயனாகவே வேதப்பாக்களைப் பாடிவைத்தனர். ஆகாயத்தில் அல் லது வானத்தில் உள்ள சூரிய சந்திரர் மழையிடிகள் முதலியவற்றின் தத்துவத்தையும், அறிவு நலத்தினால் ஆராய்ந்து பார்த்தனர்.

அந்த அறிவுப் பார்வையின் திரட்டே வேதங்கள் எனப்படும். ஆதலினால்தான் மேனாட்டு மேதாவிகள் அனைவரும் நமது வேதங்களை மனங்கொண்ட மட்டும் புகழ்ந்தும் வியந்தும் பேசியுள்ளனர்.

வேதப் பொருளை மனங்கொண்ட மட்டும் ஆராய்ந்து பார்த்து அறுதியிடுவன உபநிடதங்கள். அவை உரைக்கும் உண்மையைக் கண்டு, மேனாட்டு மேதைகள் பிரமிக்கின்றனர்.

இதிகாசங்களான இராமாயண, மகா பாரதங்களுக்கு ஈடான காவியங்கள் உலகிலே எத்தேசங்களிலும் தோன்றவில்லை என்பது ஐரோப்பிய அறிஞர்களின் கருத்து.

இனி, தமிழ்மறை எனப்படும் திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஒப்புயர்வற்ற நூல் என இதனைக் கொண்டாடாத அன்னியர் கிடையாது.

தேவார, திருவாசகங்களும் திருவாய்மொழியும் தேன் சொட்டும் தமிழில் இயன்றுள்ளன. அவற்றில் தெய்வ மணமும் பக்தி மணமும் கமழும்.

11. வேதகால வாழ்க்கை

இருக் வேதத்தில் காணப்படுவதற்கு இணங்கப் பாரதபுத்திரர் சிறந்த பக்திமான்களாக விளங்கினுர்கள். வாய்மை அவர்களுக்கு ஓர் அணியாகத் துலங்கியது. இயற்கைச் சக்திகளை அவர்கள் வணங்கிவரவே, அந்நாளில் ஆலயங்களும் விக்கிரகங்களும் ஏற்படவில்லை. தெய்வம் ஒன்றே என்று அவர்கள் கொண்டனர்.

தேசமும் மக்களும் சுகமாக வாழவேண்டுமென அறிவாளிகள் துதிசெய்து வந்தார்கள். வேளாண்மை செழித்திருந்தது. அதிக மழையோ மழையின்மையோ நேரவில்லை. பஞ்சம் என்பது அந்நாளைய பாரத புத்திரருக்குத் தெரியாது. நீர்ப்பாசன வசதிகளும் நிரம்பியிருந்தன. குதிரைகளையும் கட்டி உழுதார்கள். நவதானியங்கள் நிரம்பியிருந்தன.

அவர்கள் வெளிநாடுகளுடன் வர்த்தகம் நடத்தி வந்தனர். அது கப்பல்மூலம் நடந்து வந்தது. கப்பல் கட்டும் தொழிலும் பிரபலமாக இருந்துவந்தது. உல்லாசத்தை உத்தேசித்தும் பலர் கப்பல் பிரயாணம் செய்து வந்தனர். கப்பல் பிரயாணம் ஒரு களியாட்டமாக இருந்ததுடன், கடமையாகவும் இருந்து வந்தது.

ஆடவரின் வாழ்க்கைக்கு மாதர் உற்ற துணையாக விளங்கிவந்தனர். கற்பு என்பது அம்மாதரின் அணிகலமாகத் திகழ்ந்தது. குடும்பத்தை நன்கு நடத்துவதிலும், குழந்தைகளை வளர்த்துப் பயிற்றுவதிலும் மாதர் கைதேர்ந்திருந்தனர். கேள்வியறிவுடன், கல்வியறிவிலும் அவர்கள் சிறந்து நின்ருர்கள். பளபளப்

பான ஆடையும் அணியும் அவர்களின் அழகை மேலும் வளர்த்து வந்தன.

அந்நாளில் அரசரும் சக்கரவர்த்திகளும் இருந்தனர். ஜில்லாவின் தலைவர் **நகரபதி** என்றும், கிராமத்தின் தலைவர் **கிராமபதி** என்றும் அழைக்கப் பெற்றனர். ஆட்சி அதிநேர்மையாக இருந்தது. நகரங்களும் கிராமங்களும் மாளிகைகளும் நிறைந்திருந்தன. அரசரும் பிரபுக்களும் குதிரைபூட்டிய தேர்களையே வாகனமாகக் கொண்டனர். அன்பிலும் தயையிலும் அவர்கள் இம்மியும் குறையவில்லை. சாலைகளிலே பல சத்திரங்கள் இருந்தன.

நகரங்களிலும் கிராமங்களிலும் வீதிகள் விசாலமாக இருந்தன. தேசமெங்கும் செம்மையான பாதைகள் அமைந்திருந்தன. மலைகளில் ஏறுவதற்கு அழகிய படிகள் இருந்தன. நிலத்திலும், நீரிலும், வானிலும் போவதற்குரிய வாகனங்களுக்கு ஒரு குறைவும் கிடையாது. படகுகளும் பெருங் கப்பல்களும் ஏராளமாக இருந்தன.

அந்நாளில் சாதி என்பது இல்லை. தகுதியை மதித்து **இருடியர், தேவர்** என்று சிலர் மரியாதையாக மதிக்கப்பட்டு வந்தனர். வேத• காலத்திலே விருந்துகள் பலவகைப்படும். அவை (1) மதத்தைத் தழுவிய விருந்துகள், (2) அறுவடையானதும் நடக்கும் விருந்துகள், (3) மூதாதையரின் ஞாபகமான விருந்துகள், (4) உல்லாசமான மாலை விருந்துகள் என்பன. இவற்றில் எல்லாரும் கலந்து கொள்வர்.

சாதிப் பாகுபாடு இல்லையானாலும், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்னும் பிரிவுகள் இருந்தன. அவை செய்யும் தொழிலைக் குறித்தே உதித்தவை. அவற்றுள் ஏற்றத் தாழ்வு என்பது கிடையாது.

எல்லாரும் சரிசமமே. ஒரு குடும்பத்திலேயே ஒருவன் பிராமணனுகவும், ஒருவன் க்ஷத்திரியனுகவும், ஒரு வன் வைசியனுகவும் இருப்பது உண்டு.

அம் மூன்று பிரிவிலும் கடமையில் தவறியவனே ஒதுக்கி வைத்தனர். அத்தகையவனே சூத்திரன் எனப்பட்டான். அச் சூத்திரரிலும் சிலர் அரசராக இருந்தனர் ; சிலர் ஞானிகளாக விளங்கினர். சமு தாயத்திலே அத்தகையோருக்கு மதிப்பும் பதவியும் இருந்து வந்தன. வேதப் பாக்களேச் செய்தவர்களில் சூத்திரர் என்போரும் உண்டு. எனவே, பிரிவு காரண மாகத் தாழ்வு இல்லே. தகுதியைத் தழுவியே மதிப்பும் ஏற்பட்டது.

இந்நாளிலே பிராமணர் என்போரைத் தவிர மற்றையோர் அனேவரும் சூத்திரர் என்பது தப்பாகும். சூழ்நிலேகளுக்கும் பொருந்தாது. இந்த உண்மையை உணரின், நம்மிடையே மனக்கசப்பினுக்கும் மாறு பாட்டினுக்கும் இடம் ஏது ?

ஆதிநாளிலே வேதவிருந்துகளில் தொழுகை நடத்தி, அரசர் முதலியோர் சார்பாக வேத காரியங் களேச் செய்துவந்த அறிவாளிகளே **பிராமணர்** எனப்பட்டனர்.

சமூகத்தின் நலத்தையும் பாதுகாப்பையும் முதன் மையாகக் கொண்டு, போர்த் தொழிலே பூண்டவர்கள் அரசகுலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களே **க்ஷத்திரி யர்** என்றனர். **ராஜன்யர்** என்றும் அவர்களுக்கு ஒரு பெயர் உண்டு. ராஜன்யர் என்பதற்கு அரச குலத்தவர் அல்லது அரசனுக்காகப் போர் புரிபவர் என்பது பொருள்.

சமூகத்தின் நலத்தை மதித்து, வர்த்தகம் புரிந் தும் பலவாறுன தொழில்களே நடத்தியும் வந்தோர்

வைசியர் எனப்பட்டனர். அன்னூர் பணத்தை வாரிக் குவிப்பதிலேயே கருத்துவைக்காமல், ஒரு சிறிதே இலாபம் கொண்டு வாழ்ந்து வந்தனர்.

முன்னாளிலே இம்மூன்று பிரிவினருள்ளும் விவாகத் தொடர்பு இருந்து வந்தது. அன்னூர் ஒரே பந்தியில் அமர்ந்து உணவு கொள்ளுவதும் உண்டு. எனவே, ஏற்றத் தாழ்வு இல்லை என்பது வெளிப்படை.

இனி நிலங்களை உழுது பயிர் செய்தும், பிழைப்பை எண்ணி மற்றைய மூன்று பிரிவினருக்கும் பணியாளராக இருந்தும் வந்தோர் சூத்திரர் ஆவர் என்று சிலர் சொல்லுவர். இது எங்ஙனமாயினும் தாழ்ந்த பிரிவினராக அவர்களை அன்று மதித்தது கிடையாது.

ஒழுக்கத்தினுல் ஒருவன் உயர்வு அடைவான். அதினின்று தவறினுல் தாழ்வு எய்துவான் என்று தமிழ்மறை கூறுகின்றது. ஒழுக்கத்தில் தவறிய பிராமணன் உன்னத பதத்தை இழந்து விடுவான். அறிவிலும் ஆண்மையிலும் உயர்ந்த சூத்திரனை முன்னேர் மதித்தும் போற்றியும் வந்தனர் என்பது தேற்றம்.

ஒரு குடும்பத்திலே நான்கு சகோதரர் இருந்தால், மூத்தவன் வீட்டிலேயே இருந்து பூஜை செய்வான். அடுத்தவன் அக்குடும்பத்தின் வரவு செலவுகளைக் கவனித்து வருவான். மற்றெருவன் வீட்டிற்கு வேண்டிய பொருள்களை வாங்கி வைப்பான். கடைசியானவன் வயலுக்குப்போய் வேளாண்மை நடத்துவான்.

இவ்விதம் குடும்பத்தின் காரியங்களைத் தனித் தனியே பிரித்து நடத்துவதின் கருத்து யாது ? வீட்டுக்குரிய காரியங்கள் எளிதில் நடைபெற வேண்டும்

என்பதுதான். அவ்வாறு இல்லாமல் எல்லாரும் எல்லாம் செய்ய ஆரம்பித்தால், யாதுபயன் உண்டு? துன்பமே விளையும். குடும்பம் நன்ருக நடவாது. பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் பிரிவும் அம்மாதிரியேதான். சம்ஸ்கிருதத்தில் இதனை **வர்ணு சிரம தருமம்** என்பர்.

> "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பு ஒவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்"

என்பது திருக்குறள். ஆதிநாளிலே வர்ணுசிரம தர்மப் பாகுபாடு இருந்தும் ஏற்றத் தாழ்வு இருக்கவில்லை. கால அடைவிலே பற்பல அன்னியர் இங்கே வந்து புகுந்து, மக்களோடு மக்களாக ஆகிவிட்டாலும், அவரவர் செய்யும் தொழிலை மதித்து ஏற்றத் தாழ்வுகள் தோன்றின என்றே நாம் கொள்ளுதல் வேண்டும்.

12. கால அளவு

நமது தேச நாகரிகத்தின் பழமையை எண்ணிப் பார்த்தால் பலருக்கும் ஆச்சரியமாகவே தோன்றும். அதன் உயிர் நாடியோ மாயமாகத் தென்படும். இப் பூமி உண்டான காலத்திலேயே நமது நாகரிகமும் உண்டாயிற்று.

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான் பூமி உண்டாயிற்று என்று சிலர் கூறுவர். கோடானு கோடி ஆண்டுகளுக்கு முன்னமேயே இப்பூமண்டலம் உண்டாயிற்று என்பதாக நமது நூல்கள் உரைக் கின்றன. அக் கணக்கினை இங்கே ஆராய்வோம்.

குறிப்பிட்ட ஒரு காலத்தில் பூமி தோன்றும். அப்பால் குறித்த காலத்தில் மறையும்; அதாவது பிரள யம் உண்டாகும். உலகைப் படைப்பவன் பிரமன். தெய்வம் ஒன்றே ஆயினும், படைக்கும் காலையில் அக் கடவுள் பிரமன் என்று பெயர் பெறுவான்.

அப் பிரமனுக்கு ஒரு நாள் அல்லது பிரமதினம் என்பது 432 கோடி வருஷங்கள். அத்தினம் ஓராயிரம் சதுர்யுகங்கள் கொண்டது. அந் நான்கு யுகங்களும், சத்ய, திரேத, துவாபர, கலி யுகங்களாம். சத்தியயுகம் என்பது 17 லட்சத்து 28 ஆயிரம் வருஷம். திரேதா யுகம் 12 இலட்சத்து 96 ஆயிரம் வருஷம். துவாபர யுகம் 8 லட்சத்து 64 ஆயிரம் வருஷம். கலியுகமோ 4 லட்சத்து 32 ஆயிரம் வருஷம். எனவே 4 யுகங்களும் சேர்ந்து 43 இலட்சத்து 20 ஆயிர வருஷங்கள் ஆகும்.

இப்படி ஆயிரம் சதுர்யுகங்கள் ஒரு பிரம தினம். அதாவது 432 கோடி வருஷம். இந்தக் கால அளவு வரையில் பூமண்டலம் நிலைத்திருக்கும். அப்பால்

பிரளயம் உண்டாக உலகம் மறைந்துபோம். அந்தப் பிரம தினத்தில் பதினன்கு மனுக்கள் தோன்றி மறைவர். ஒரு மனுவின் காலம் 71 சதுர்யுகம்.

இதுவரையில் 6 மனுக்கள் தோன்றி மறைந்து விட்டனர். இப்போது ஏழாவது மனுவின் காலம் நடைபெறுகிறது. இன்னும் ஏழு மனுவின் காலங்கள் நடைபெற வேண்டும். ஒரு மனுவின் காலம் 30 கோடியே அறுபத்தேழு இலட்சத்து 20 ஆயிரம் வருஷம். ஆறு மனுக்களின் காலமாகிய 184 கோடியே மூன்று இலட்சத்து இருபதாயிரம் வருஷங்கள் கழிந்துவிட்டன.

இப்பொழுது நடப்பது 28 வது சதுர்யுகத்தின் கலியுகம். இக் கலியுகத்தில் இன்னும் நான்கு இலட்சத்து சொச்சம் வருஷம் நடைபெற வேண்டும். எனவே, மேலும் 214 கோடியே ஏழு லட்சத்து நாலாயிரம் ஆண்டுகள் கழிந்தால்தான் எஞ்சியுள்ள ஏழு மனுக்களின் காலமும் முற்றுப்பெறும்.

இக் கணக்கைப் பார்த்தால், மேனுட்டினருக்கு மலைப்பே தட்டும். கிறிஸ்தவ சகாப்தத்தைக் கொண்டே அவர்கள் கணக்கிட்டு வருகின்றனர். கிறிஸ்தவ சகாப்தத்தில் இப்போது நடப்பது 1952 ஆம் ஆண்டு தான். எனவே, அம் மேனுட்டினர் தங்களது மன விரிவு கொண்டே நமது காலக்கணக்கை எண்ணிப் பார்க்க இயலும்.

இந் நாளிலே காலத்தை அறிவதற்குக் கடிகாரம் என்பது உண்டு. கடிகாரம் தோன்றுவதற்கு முன்னம் சூரியனைக் கொண்டு பகலிலே காலத்தைக் கணக்கிட்டு வந்தனர் நமது முன்னேர். இரவிலோ உடுக்களின் சலனத்தைக் கொண்டு அறிந்து வந்தனர்.

வான நூலிலே நம்மவர் கைதேர்ந்து நிற்பதால்

பஞ்சாங்கம் கணிக்கின்றனர் ; இன்ன இன்ன நாளில் சூரிய சந்திர கிரகணங்கள் உண்டாகும் என்று கூறுகின்றனர்; அக்கிரகணங்களும் பூமண்டலத்திலே இன்ன இடத்தில் தோன்றும், இன்ன இடத்தில் தோன்ருது என்றும் உரைக்கின்றனர்.

இனி நமது முன்னேர் வகுத்த வண்ணம் பதினைந்து நிமிஷம் கொண்டது ஒரு காட்டை. காட்டை முப்பது கொண்டது ஒரு கலை. அக் கலை முப்பது கொண்டது ஒரு முகூர்த்தம். முகூர்த்தம் முப்பது கொண்டது ஓர் இராப் பகல். இரவும் பகலும் கூடியதே ஓர் நாள்.

நாள் 15 கொண்டது ஒரு பட்சம். சுக்கில பட்சம், கிருஷ்ண பட்சம் இரண்டும் கொண்டது ஒரு மாதம். மாதம் இரண்டு கொண்டது ஓர் இருது. இருது மூன்று கொண்டது ஓர் அயனம். தேவருக்குப் பகல் காலம் உத்தராயணம். இரவோ தட்சிணுயனம். அந்த இரண்டு அயனங்களும் கொண்டது ஒரு மனித வருஷம்.

அந்த மனித வருஷம் தேவருக்கு ஒரு நாள். தேவநாள் முப்பது சேர்ந்தால், தேவமாதம் ஒன்று ஆகும். தேவ மாதம் பன்னிரண்டுக்குத் தேவ வருஷம் ஒன்று. அதாவது மனித வருஷம் முன்னூற்றறுபது. இவ்விதமெல்லாம் வேறு எத்தேசத்தினரும் கால அளவைக் கண்டறியவில்லை.

13. குணச் சிறப்பு

கனியின் சுவை கண்டு, மரத்தின் நலத்தை மதிப்பது மரபு. அங்ஙனமே, மக்களின் மாண்பு கண்டு, தேசத்தின் சிறப்பை எண்ணுதல் இயற்கை. மாந்தரின் நற்குணங்களில் நனிசிறந்தது வாய்மையே. தெய்வத் திருவள்ளுவரும்,

> "யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை; எனைத்தொன்றும்
> வாய்மையின் நல்ல பிற"

என்றே அருளியுள்ளார். நெய் விளக்கு, மணிவிளக்கு, கற்பூர விளக்கு எனப் பற்பல விளக்குகள் உண்டு. அவற்றுள் பொய்யா விளக்கே மேம்பட்டதாகும். பாரத மக்கள் அப்பொய்யா விளக்கு ஏந்திப் பூவலயம் எங்கும் புகழ்க்கொடி தூக்கினர். அரிச்சந்திர மன்னன் அவதரித்த அரிய இடம் நமது பாரதபூமியே யன்றோ ?

கிரேக்க தேசக் கவிஞர் ஒருவர் ஆரியரின் குண நலங்கண்டு, "அன்னவரின் மனைகளுக்குப் பூட்டுச் சாத்து அவசியம் இல்லை. அவர்கள் கொள்ளும் உடன்படிக்கைகளுக்குக் கைச்சாத்தும் வேண்டுவ தில்லை. ஆரியர் அத்தகைய சத்திய சந்தர்," என்று சொல்லியுள்ளார்.

அர்ரியன் என்பவர் பேர்பெற்ற ஓர் யவன ஆசிரியர்; கிறிஸ்தவ சகாப்தத்தின் இரண்டாம் நூற்றாண்டில் நம் தேசத்தை நன்கு உணர்ந்தவர். "பாரத மக்களிலே எவரும் பொய்பேசியது கிடையாது" என்று அவன் புகன்றுள்ளார்.

சுவே என்பார் ஒரு சீனர்; மூன்றாம் நூற் றாண்டின் தொடக்கத்தில் அவர் நம் நாட்டிற்கு வந்து

போனுர். "பாரதர் மகா கண்ணிய புருஷர்; மிக்க நேர்மையாளர்," என்று அவர் தம் தேசத்தினரிடம் சொல்லிக் களித்தார்.

பைது என்பார் சீனதேச ஆசிரியரில் ஒருவர்; ஏழாம் நூற்ருண்டின் ஆரம்பத்திலே அவர் தூதராக இங்கே வந்தவர். தமது தேசம் திரும்பியதும், அவரை நோக்கி, "பாரத பூமியிலே என்ன அதிசயம் கண்டீர்?" என்று பலரும் கேட்டனர். "இந்திய மக்கள் மகா சத்தியசீலர்கள்; இதுவே யான் கண்ட அதிசயம்," என்று அவர் சொன்னுர்.

எட்டாம் நூற்ருண்டிலே வட இந்தியாவில் வல்லரசராக விளங்கியவர் ஹர்ஷர். அவரது சபைக்கு ஹியூன்சங்கு என்னும் சீனத்தூதர் வந்திருந்தார். அவர் கூறியுள்ளதாவது:

> "நேர்மைத் திறத்திலும் யோக்கியப் பொறுப்பிலும், இந்தியரை நிகர்ப்பார் ஒருவரும் இலர். அன்னவர் அநீதியாக எதனையும் கொள்வது கிடையாது. நீதி வழங்குவதில் அவர்களிடம் கருணை ததும்பும். இந்தியரின் அரசியல், சமன்செய்து சீர்தூக்கும் துலைக்கோல்போல் கோடாமல் குலவுகின்றது."

அரேபியா தேச அறிஞரில் ஒருவர் இட்ரிஸி என்பவர். பதினேராம் நூற்ருண்டில் அவர் இந்தியாவுக்கு வந்து போனுர். தாம் எழுதியுள்ள ஒரு நூலில், "இயற்கையிலேயே பாரத மக்கள் நீதிமான்கள்; மனம் வாக்கு காயம் மூன்றிலும் அவர்களிடம் தருமம் துலங்கும். அவர்களின் உயரிய சிந்தை, சீரிய செயல், வாய்மை முதலியன என்றும் போற்றுதற்கு உரியன. ஆதலின், இப்பூமியின் நாலா பாகங்களிலிருந்தும் பற்பலர் பாரத பூமிக்கு வந்து, பலனும் நலனும் பெற்றுப் பெருமக்களாகித் திரும்பிப் போகின்றனர்" என்று அவர் வரைந்துள்ளார்.

இஸ்லாமிய ஆசிரியரில் ஒருவர் **ஷம்சுத்தீன்** எனப்படுவார். இவர் பதின்மூன்ரும் நூற்ருண்டினர். இவர் கூறியுள்ளதாவது :

> "கடல் மணலினும் மிகுந்தது பாரத பூமியின் ஜனத் தொகை. வஞ்சமும் சூழ்ச்சியும் முரட்டுச் சுபாவமும் அம் மக்களிடம் காணப்படா. உடலம் அழியினும் உயிர் நீங்கினும், அன்னவர் அச்சம் கொள்வதில்லை. அவர்களின் அருங் குணங்கள் அனைத்தும் பெரிதும் வியக்கத் தக்கவை."

மார்க்கோ போலோ என்பார் இத்தாலி தேசத்தவர். பதின்மூன்ரும் நூற்ருண்டிலே அவர் பாரத பூமிக்கு வந்திருந்தார். "பாரத பூமியில் உள்ள வேதியர் வியன் உலகில் உள்ள வணிகரில் மிகச் சிறந்தோர் ; மகா சத்திய சந்தரும் ஆவர் ; உலக மனைத்தும் கைதனில் சிக்குவதாயினும் அன்னவர் பொய்ம்மொழி புகலார்," என்று தமது நூலொன்றில் அவர் எழுதி வைத்திருக்கிருர்.

கமாலுத்தீன் என்பார் துருக்க மரபினர். பதினைந்தாம் நூற்ருண்டிலே விஜயநகர சாம்ராஜ்யத்தின் அரச சபையில் தூதராக அவர் இருந்தார். "பாரத தேசத்திலே வர்த்தகருக்கும் அவர்தம் சரக்குகளுக்கும் பங்கம் நேருவதில்லை. வணிகரோ நிம்மதியுடன் நேர்மையாகத் தொழில் புரிந்து வருகின்றனர். நாட்டினிலே கள்வர் பயமும் மோசமும் கிடையா," என்று அவர் புகழ்ந்திருக்கிருர்.

அபுல் பாஸல் என்பவர் மதியமைச்சரில் ஒருவர் ; அக்பர் சக்கரவர்த்தியின் அருமைத் தோழர். அவர் உரைத்துள்ளதாவது :

> "இந்துக்கள் சமயப் பற்றில் சிறந்தோர் ; நெருங்கிப் பழகின், மிக்க நேசம் காட்டுவர் ; வேற்று மனிதரைக் காணின், முகமலர்ச்சி கொண்டு உபசரிப்பர். எப்போதும் அவர்களின்

அகமும் முகமும் மலர்ந்திருக்கும். அறிவு வளர்ச்சியில் அவர்களுக்கு ஆர்வம் அதிகம். தர்மமும் தயையும் அவர்களிடம் நிரம்பி நிற்கும். வணிகத்திலே அவர்கள் மகா வல்லவர்கள். நன்றியறிவிலோ மிகவும் சிறந்தவர்கள். விசுவாசத்திற்கு அவர்களே ஓர் இருப்பிடம்.''

கர்னல் ஸிலிமான் என்பார் ஓர் ஆங்கிலேயர்; சில நூற்றுண்டுகளுக்குமுன், இங்கே உத்தியோகம் பார்த்தவர். இந்தியரின் குணநலங் கண்டு, ''நாட்டுப்புற மக்கள் பொய் பேசுவதை நான் ஒருநாளும் கண்டதில்லே. எண்ணிறந்த வழக்குகளே நான் விசாரித்தேன். பொய்யுரை பகரின், உடலும் உயிரும் உடைமையும் ஆபத்தினின்று தப்பும் என்ற தருணத்திலும், வாய்மையினின்று தவற இந்தியர் மனங் கொண்டதில்லே,'' என்று அவர் கூறியிருக்கிருர்.

மாக்ஸ் முல்லர் என்பார் பாரத மக்களின் குணச்சிறப்பை வியந்துரைத்துள்ளதாவது :

''இந்திய மக்களின் குணநலங்களில் தலைசிறந்தது சத்திய வசனமே. அன்னவர் பொய் பேசியதாக எவரும் சொல்லியதில்லே. பல தேசங்களுக்குப் போய் வந்தவர்களே நான் கண்டு வினவினேன். இந்திய மக்களேப்போல் நாணயமுள்ளவரைத் தாம் எங்கும் கண்டதில்லே என்றே அவர்கள் அனைவரும் இயம்பினர்.''

மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் இந்நாட்டில் சிறந்து விளங்கிய சக்கரவர்த்தி **சந்திரகுப்தன்**. கிரேக்க தேசத்தின் தூதராக அவன் சபையில் இருந்தவர் **மகஸ்தனிஸ்** என்பவர். அவர் வியப்புரை யாவது :

''இந்தியாவிலே அடிமைகள் இல்லே. அடிமை வாழ்வும் கிடையாது. மாதரோ கற்பரசியர்; ஆடவரோ சிறந்த வீரர். தீரத்திலே ஆரியருக்கு எவரும் இணையாகார். சாந்தமும்,

சுறுசுறுப்பும், உள்ளத்தூய்மையும், தொழில் சிறப்பும் பாரதரின் பிறவிக் குணங்களாம்.''

வேளாண் மக்கள் விழுமிய வளப்பம் தேடும் நாட்டம் உள்ளவர்கள். தொழிலாளிகளோ அறிவும் ஆற்றலும் நிரம்பிய வர்கள். அன்னவர் பூசலிட்டு வழக்காடுதல் மிக அருமை. குலத் தலைவரின் சொற்கேட்டு அடங்கி வாழ்வதே அவர்களின் பரம்பரைக் குணம். மலர்ந்த முகமும், கனிந்த உள்ளமும் படைத்தவர் யாவரெனில், அன்னார் பாரத மக்களே என்பேன்!''

கர்னல் டிக்ஸன் என்பவர் ஓர் ஆங்கிலேயர். அவர் முன்பு இத் தேசத்திலே ஓர் அதிகாரியாக இருந் தார். அவர் கூறியிருப்பது: ‘‘இந்தியர் பரம விசுவாசமுள்ளவர்; சொல் தவறாத சீர்மையாளர்; கண்ணியமானவர்; உள்ளத்தில் உரமும் உடலில் வலியும் படைத்த உத்தம மாந்தர்; அடைந்தோரை ஆதரிக்கும் அன்புடைய சீலர்; ஆண்டவனிடம் பக்தி காட்டும் அருங்குணத்தவர்; ‘நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்’ என்பதே அன்னாரின் அரிய கொள்கை.''

சிடன் ஹாம் என்னும் ஆங்கிலேயர் உரைத் திருப்பதாவது: ‘‘இந்துக்களின் குணங்கள் எவை யெனில், அடக்க ஒடுக்கம், அன்பு ஆர்வம், பக்தி விசுவாசம், கூரிய மதி, சீரிய சிந்தனை, தயாள குணம், தருமசிந்தை முதலியனவாம். இத்தகைய அருங்குணங்கள் ஒரு தேச மக்களிடம் ஒருங்கே காணப்படுதல் அருமையினும் அருமை.''

ஸர் ஜான் மால்கம் என்னும் ஆங்கிலேயர் முன்பு இங்கே உத்தியோகம் பார்த்தவர். ‘‘இந்திய மக்கள் அழகும் வடிவும் அறிவும் ஆற்றலும் படைத்த வர்கள். அவர்களின் மனத்தூய்மை பெரிதும் மதிக்கற்பாலது. வீரதீரம், தர்மசிந்தை, வாய்மை, பெருந்தன்மை முதலியன அவர்களின் சீரிய குண

நலங்களாம். அவர்களுடைய அருங் குணங்களை இங்கிலாந்தில் உள்ள மக்கள் கேட்டறியின், ஈதென்ன கட்டுக்கதை என்றே நினைப்பர். இந்தியரினும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரை நான் எங்கும் பார்த்ததில்லை '' என்று அவர் போற்றியுள்ளார்.

இந்தியாவின் பற்பல பாகங்களை முன்னாளில் சுற்றிப் பார்த்தார் ஹீபர் என்னும் ஒரு பாதிரியார். அவர் எழுதி வைத்திருப்பது : '' நாகரிக நயத்தை இந்தியரிடமே நன்கு காணலாம். அன்னவரின் நடத்தையில் இனிமையும் பெருமையும் புலப்படும் ; அறிவும் ஆற்றலும் விளங்கும். நிதானமும் நேர்மையும் திகழும் ; ஊக்கமும் உற்சாகமும் துலங்கும். அன்னவர் அதிசூரர், பெருவீரர் ; வான சாஸ்திரம், கணித சாஸ்திரம் முதலியவற்றில் முதன்மை பெற்றவர் ; மானிட கோடிகளில் இந்திய மக்களே ஏற்றம் உடையோர் ; இந்தியர் ஈடும் எடுப்பும் இலாதவர் என்பேன் '' என்பது.

14. தொழிற் சிறப்பு

நெசவுத் தொழில் நிகர் அற்றது; பாவம் இல்லாத தொழிலும் அதுவே. உலகிலே நெசவில் நிகரற்றவர் இந்தியரே. ஆதியில் கைத்தறி கொண்டே நெசவு நடந்தது; இராட்டையிலே நூல் நூற்கப்பட்டது. இக்காலத்திய ஆலைநூலும் ஆடையும் அக்காலத்திய கைநூல் ஆடைகளுக்கு ஈடாகா. பாலாவியும் பாம்புரியும் போன்ற மெல்லிய ஆடைகளை நம் முன்னோர் நெய்தனர். **டாக்கா மஸ்லின்** என்னும் ஆடையைப் போல் இந்நாளிலும் இங்கிலீஷ் மில்கள் நெய்ய முடியவில்லை.

புத்தர் என்பவர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். **கங்கை** என்னும் ஒரு மாது அவரைத் தரிசிக்க வந்தனள். அப்போது இருபது முழங்கொண்ட டாக்கா மஸ்லின் துணி அவள் உடலை மூடிநின்றது. ஆயினும், அவளது அங்கங்களை உரியவாறு மறைக்கவில்லை. அது கண்ட புத்தர், "இனிமேல் மாதர் எவரும் மஸ்லின் ஆடை தரிக்கக் கூடாது" என்று ஆணையிட்டார். காசுமீர சால்வை களின் நேர்த்தி உலகப் புகழ்பெற்றது. இன்றும் ஆயிரக்கணக்கில் விலைகொடுத்து அவற்றை அன்னிய நாட்டார் வாங்கிக் களிப்பர். இராமபிரானது பத்தினி யான சீதைக்கு அச்சால்வை அளிக்கப்பட்டது என்றால், பல்லாயிரம் ஆண்டுகளாக அத் தொழில் சிறந்து வருகின்றது என்பது வெளிப்படை.

டாக்டர் **வில்ஸன்** என்பவர் ஓர் ஆங்கிலேயர். அவர், "நம்மிடம் பலவகையான யந்திர சாதனங் களும் அதிசயமான கருவிகளும் இருப்பினும், காற்றினும் மெல்லியதான டாக்கா மஸ்லினைப்போல்

ஆடை நெய்ய நம்மால் இயலாது. ஆதலின், நெசவுத் தொழிலிலே இந்தியரிடம் நாம் பாடம் கற்கவேண்டும். இந்தியருக்கு நாம் நெசவுத் தொழிலைப் புகட்ட முயலுதல், கொல்லன் தெருவில் ஊசி விற்பது போலாகும்'' என்று சொல்லியுள்ளார்.

பருத்தி என்றால் என்ன என்றே ஆதியில் ஐரோப்பியருக்குத் தெரியாது. அது ஒரு பூச்சியின் மயிரே என்று அன்னவர் எண்ணி யிருந்தனர்! இந்தியரிடமிருந்தே பருத்தியை ஐரோப்பியர்கள் அறியலானார்கள். கதர் ஆடையில் மெல்லிய வகைகள் இருக்க இயலுமோ என்று இன்று பலர் ஐயம் கொள்கின்றனர். அன்னார் டாக்கா மஸ்லின் கதையை அறிந்தால், ஐயம் நீங்குவர். எலியின் மயிர் கொண்டும் நம்மவர் மெல்லிய கம்பளம் நெய்து, எங்கும் ஏற்றுமதி செய்தனர்,'' என்று தமிழ் நூல்கள் நுவலுகின்றன.

வீபர் எனும் ஆசிரியர் கூறுவது :

''மெல்லிய ஆடைகள் நெய்வதிலும், பலவகையான சாயங்கள் தோய்ப்பதிலும், இரும்புச் சாமான்கள் செய்வதிலும், தங்கம், வைர நகைகளின் நகாசு வேலையிலும், விதம் விதமான இரசாயனங்களை இறக்குவதிலும், இந்தியருக்கு இணை ஆவார் உளரோ ?''

செடி கொடிகளின் சாற்றிலிருந்து சாயம் இறக்க முதன்முதல் உணர்ந்த மக்கள் இந்துக்களே. பலவகை மலர்களின் மணங்களைப்போல் செயற்கை முறையில் வாசனை செய்யக்கூடிய விவரங்களை வராஹ மிஹிரர் என்பார் தமது நூலில் நன்கு கூறி யிருக்கிறார்.

பதினேழாம் நூற்றாண்டில் நம் தேசத்தை ஆண்ட சக்கரவர்த்தி அவுரங்கசீப் ஆவார். அவர்

புதல்வி டாக்கா மஸ்லினை உடுத்து வந்து, தந்தையைக் கண்டனள். அவுரங்கசீப் அது கண்டு தலையைக் குனிந்து கொண்டார்.

உடனே, "கண்ணே! நிர்வாணமாக இங்கு வந்தனையே. இது அழகாமோ?" என்று அவர் வினவினார். அதற்கு அவள், "எந்தாய்! உடை ஒன்று; அதனை ஏழு சுற்றுச் சுற்றி உடுத்துள்ளேன்" என்றனள். உடனே டாக்கா மஸ்லினின் நேர்த்தியறிந்து அச் சக்கரவர்த்தி வியப்புற்றார் என்று சரித்திரம் கூறுகிறது.

பல்பொருட் களஞ்சியம் என்னும் நூலில் பின்வருமாறு வரையப்பட்டுள்ளது :

"கைத்தொழில் திறமையிலே இந்தியர் பெருங் கீர்த்தி வாய்ந்தோர். உரோமாபுரி வல்லரசாக விளங்கிய காலத்தில் இந்தியாவின் ஆடைகளே உரோமரின் அரண்மனைகளை அலங்கரித்தன. டாக்கா மஸ்லின் பல்லாயிரம் வருஷ காலமாக ஓங்கு புகழ் பெற்றதாகும்."

"1852-ஆம் ஆண்டில் அகில தேசப் பொருள் காட்சி சாலையில் இருந்த இந்திய ஆடம்பரப் பொருள்களைக் கண்டு மூக்கில் விரல் வைத்து வியக்காதார் இல்லை. வேலைப்பாடமைந்த விசித்திரப் பொருள்கள், கைவேலைத் திறங்காட்டும் மரச் சாமான்கள், பலவகையான பட்டாக்கத்திகள், பளபளப்பான பீங்கான் சாமான்கள் இவை இந்தியாவில்தான் கிடைக்கும்."

ஷாஜஹான் வீற்றிருந்த மயிலாசனம் 65 கோடி பவுன் விலையுள்ளது. பதினேழாம் நூற்றாண்டில் காஸிம் பஜார் என்னும் நகரம் 22 லட்சம் இராத்தல் எடையுள்ள பட்டாடைகளை ஏற்றுமதி செய்தது. புராதன உலகின் நடுநாயகமான வர்த்தக பூமி இந்தியாவே. ஆரிய தேசத்தின் கப்பல்களோ அவனியெங்கும் சரக்குகளைக் கொண்டுபோய்க் குவித்தன. தரை வழியாகப் பொதி மாடுகள்

எண்ணிறந்த பண்டங்களைச் சுமந்து சென்று எங்கும் கொட்டின.

மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் மகா அலெக்ஸாந்தர் என்பவர் இப் பூமியின்மீது படைகொண்டு வந்தார். இந்தியாவின் செல்வமும் வளமையுமே அவரைப் படையெடுக்கத் தூண்டின. "பொன்னாடு போகின்றோம்" என்று பெருமை பேசிக்கொண்டே அவர் படைஞர் கிளம்பினர். முகம்மது கஜனி என்பவர் பதினேழு முறை இங்கே படைகொண்டு வந்தது ஏன்? தேசத்தின் செல்வத்தைக் கண்டு அவற்றைக் கைப்பற்றக் கொண்ட ஆவலினாலேயே அன்றோ? கன்னோசி நகரின் செல்வப் பெருக்கைக் கண்டதும், "பொன்னாடும் இக் கன்னோசி நகருக்கு ஈடாமோ?" என்று கூறி, அம் முகம்மது மனம் பூரித்தார்.

ஆரிய தருமபூமியின் மிதமான சீதோஷ்ண நிலைமை, நீர்வள நிலவளங்கள், இணையிலா தாதுப் பொருள்கள், விதவிதமான கைத்தொழில்கள், எங்கும் பரந்த வியாபாரம் இவையே செல்வச் சிறப்புக்குக் காரணங்கள் ஆயின. கற்பகத் தருவைச் சார்ந்து எதனை விரும்பினும், அது உடனே கிட்டும் என்று நமது நூல்கள் கூறும். அவ்விதமே இந்தியத் தாய் யார் யார் எதை எதை விரும்பினும், அவற்றை யெல்லாம் அளித்து வந்தாள்; இப்போதோ வற்றிப் போன மாட்டைப் போல் நலிந்து நிற்கின்றாள். பாரத புத்திர புத்திரிகள் முனைந்து முயலின், முன்போல் இங்கே தொழில்கள் பெருகும்; வியாபாரம் ஓங்கும்; செல்வமும் சீரும் இன்பமும் நிரம்பும். பல்வளமும் சுறக்க நம் பாரதத் தாய் தவறமாட்டாள்! மக்களின் முயற்சியே இன்றியமையாதது.

15. இசைக் கலை

எத்துறையிலும் நேர்த்தியும் தேர்ச்சியும் அடைவதே நமது முன்னேரின் நாட்டமாகும். நாதத்திலே ஒரு கீதம் கண்டு, அதன் சிகரத்தை எட்டிப் பார்த்தனர் நம்மவர். வேதங்களை ஓதுவதிலும், மந்திரங்களை உச்சரிப்பதிலும், அன்னவர் கீதஇன்பம் அமைத்தனர். அழுகையிலும் கீதஇன்பம் தோன்றுதல் ஆச்சரியமாக இருக்கும்.

கயிலை மலையைப் புரட்டி, மலைமகளை மறுக வைத்த இராவணனை வாட்ட நினைத்தார் சிவ பெருமான். அப்போது அவன் சாம வேதத்தைக் கானம் பண்ணவே, பரமசிவன் மனமகிழ்ந்து, அவனை விடுவித்து வெற்றிவாள் ஒன்றும் கொடுத்தருளியதாக நமது நூல்கள் கூறுகின்றன.

இசைக்கு ஈசனே உருகினன் என்ருல், இம் மானிடர் எம்மாத்திரம்? இசையினுல் மனநோயும் உடல் நோயும் பறக்கும். ஆற்ற முடியாத துயரமும் துன்பமும், வாதையும் வேதனையும் நேரிடினும், இசை இன்பம் கண்டு அவற்றை மாந்தர் மறக்க முயலுவர்.

சங்கீதம் எனப்படும் இசை அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று. அது ஒரு நுண்ணிய கலையுமாகும். கீதம் என்பது, பாட்டு. சப்தம் தொண்டையில் உண்டாகிறது. எல்லோரும் சப்தம் செய்யலாம். கழுதை கத்துகிறது. ஆனுல் அதன் குரல் இன்பமாக இராது. குயில் கூவும். அது, இன்பமாகவே இருக்கிறது. எனவே, குரலில் இனிமை இருத்தல் அவசியம்.

சப்தத்தைச் சுவரமாகப் பிரித்து வகை துறையாக அமைத்தால், அதில் ஓர் இனிமை உதிக்கும். குரலைப்

புரட்டிப் புரட்டி இசைப்பதிலும் ஒரு நயம் உதிக்கும். அவ்வகையில் தேர்ந்தவர்களேயே இசைவாணர் அல்லது சங்கீத வித்வான்கள் என்ர்ப. பாரத புத்திரரே இசையறிந்த சாதியார் ஆவர் என்று மேனாட்டினர் வியந்து கூறுவர்.

அரசரும் பிரபுக்களும் ஆதிமுதல் அக்கலையை ஆதரித்து வந்தனர். அக்கலையில் தேர்ந்தவர்களுக்கு இன்றும் மிக்க சிறப்பு உண்டு; ஆதரவும் அதிகம். அதில் ஏழு சுவரங்கள் உண்டு. இராகங்களோ பலவாம். நமது பண்டை வேந்தரில் சிலர் அக்கலையில் வல்லவராக விளங்கினர்.

தெய்வ துதியான தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருவாய்மொழி இவற்றை இசையுடன் பாடக் கேட்டால், நமக்குப் பரவசம் பிறக்கும்; பக்தி உதிக்க மனமும் ஒருவழிப்படும். அவ்விதம் ஆண்டவனது குணகணங்களை எடுத்துரைத்து இன்பம் எய்துவதற்கே இசைக்கலை ஏற்பட்டது. வெறும் உற்சாகம் அடைவதற்கு அன்று.

ஆதி நாளிலே **பரதர், ஈசுவரர், பரணர், நாரதர்** என்போர் சிறந்த இசை அறிஞராக விளங்கினர். அவர்கள் பல நூல்களும் இயற்றியுள்ளனர். இசை இன்பம் கண்டு கல்லும் உருகும். இதனை விளக்கும் கதை ஒன்று உண்டு.

தும்புரு, நாரதர் என்போர் இசையிலே தலை சிறந்தவர்கள். ஒருசமயம் இந்த இருவரிலே யார் சமர்த்தர் என்று வாதம் எழுந்தது. இருவரின் திறத்தை அறிந்து, யார் பெரியவர் என்று கூற எவராலும் இயலவில்லை. முடிவிலே, இருவரும் அனுமனை அடைந்து முடிவுகூற வேண்டினர்.

அனுமான் அவ்விருவரையும் ஒரு பாறை

மீதிருந்து பாடச் சொன்னான். இருவரும் அவ்வாறே பாடினர். யார் சமர்த்தர் என்று அஞ்சனை மைந்தன் கூறவில்லை. முடிவில் அவன் அப்பாறைமீது அமர்ந்து, அவர்களின் வீணையை வாங்கித் தான் இசை பாடினான். பாடத் தொடங்கியதும், அப்பாறை இளகத் தலைப்பட்டது. முடிவில் அடியோடு உருகி விட்டது. அதுகண்டு இருவரும் தலைகுனிந்தனர்.

அக்பர் சக்கரவர்த்தியின் சபையிலே **தான சேனன், வீரபாலன்** என்னும் இசையறிஞர் இருவர் இருந்தனர். தானசேனனுக்கு அச்சக்கரவர்த்தி இலட்சக்கணக்கில் பரிசு வழங்கினார்; வீரபாலனையோ ஒரு குறுநாட்டின் அரசனுக்கிப் பெருமைப் படுத்தி னார். அந்நாளில் தஞ்சை மாநகரிலே **கோபால நாயகர்** என்னும் இசைக் கலைஞர் இருந்தார். அவரது பெருமை மகா அக்பருக்கு எட்டியது. உடனே அவர் நாயகரை வருவித்துத் தீபக ராகம் பாடும்படி வேண்டிக் கொண்டார். அவரும் அதற்கு இசைந்து, யமுனை நதியிலே கழுத்தளவு நீரில் இறங்கி நின்று பாடத் தொடங்கினார். அந்த இராகம் பாடி னால், பாடுவோரின் உடலிலிருந்து தீ கொழுந்து விடும். கோபால நாயகர் கழுத்தளவு நீரிலிருந்து பாடினாலும், உடலிலிருந்து தீ கொழுந்துவிட்டது. முடிவிலே, அந்நெருப்புக்கு அவர் இரையாகிவிட்டார்.

ஸ்ரீராகம் என்பது ஒரு பண். அதனைப் பகலில் பாடுவது கிடையாது. பகலிலே அதனைப் பாடிக் கேட்கவேண்டும் என்று அக்பர் ஆசை கொண்டார். உடனே, தானசேனனை அழைத்து ஸ்ரீராகம் பாடுமாறு அவர் வேண்டிக்கொண்டார். அக்கலைஞரும் அவ் வாறே பாடிவந்தார். வருகையில் **ஆக்ரா** நகரின் அரண்மனையைச் சுற்றிலும் இருள் வந்து சூழ்ந்து

கொண்டது என்று விட்டன் என்னும் ஆங்கிலேயர் எழுதி வைத்திருக்கிறுர்.

பாரத புத்திரரின் இசைக்கலேயின் தேர்ச்சிக்கு வேறு உதாரணம் வேண்டுமோ ? சிறிது காலத்திற்கு முன்னே, தஞ்சையை அடுத்த திருவையாற்றில் ஸ்ரீதியாகையர் இருந்தார். அவரது கீர்த்தனங்கள் இந்நாளில் எங்கும் பாடப்படுகின்றன. அக் கீர்த்தனம் பாடத் தெரியாதவன் இசை அறிஞன் என்று சொல்லிக்கொள்ள முடியாது. அவரது பாடல்களில் பக்தி மணமே கமழும்.

இந்திய சங்கீதம் தெய்வ அம்சம் வாய்ந்தது. அக்கலேயிலே இந்தியரை நிகர்ப்பார் யார் என்பர் மேனுட்டுக் கவிஞரும் பிறரும்.

16. கலைஞான பீடங்கள்

ஒரு தேசத்தின் உயர்ச்சிக்கு முதல் காரணமா யுள்ளவை மக்களின் கல்வியறிவும் ஞானப் பெருக்கு மேயாம். நமது மூதாதையர் பல துறைகளிலும் பெரிய மேதைகளாக விளங்கினர். மாக்ஸ் முல்லரின் வாக்கே அதற்குச் சான்று பகரும். கல்வியின்பத்திலே நமது முன்னோர் பேரின்பம் கொண்டர்.

தோட்டி முதல் தொண்டைமான் வரையில் கல்வி கற்பதற்கு உரிய சாதனங்கள் இங்கே நிரம்பி இருந் தன. தற்காலம் நகரங்களில்தான் கல்லூரிகள் உள. முன்னுளிலோ கானகங்களே கலைஞான நிலையங் களாகத் திகழ்ந்தன. மேதாவிகள் பலரும் கானகங் களையே தமது வாழிடமாகக் கொண்டிருந்தனர். அர சிளங் குமரன்முதல் பணியாளன் மகன்வரையில் அனைவரும் ஆசிரமம் அடைந்து, ஆசிரியரையடுத்து அவருக்குச் செய்தற்குரிய தொண்டுகள் இயற்றி அருங்கலை பலவும் பழுதறக் கற்றனர். ஆசிரமத்தில் கிடைத்த கல்வியே அருமைக்கும் பெருமைக்கும் அடிப்படையாயிற்று. இந்நாளிலும் அப்படித்தான்.

கவி திலகரான இரவீந்திரநாத தாகூர் என்பார் நிறுவியுள்ள சாந்தி நிகேதனம் என்னும் கலைஞான நிலையம் ஓர் ஆரணியத்திலேயே உளது. காந்தி மகானது சபர்மதி ஆசிரமமும் ஓர் ஆற்றங் கரையிலேயே அமைந்தது. இவ்விரண்டு இடங்களி லும் மக்கள் பெறும் ஞானப் பெருக்கு எங்கும் கிடைத்தற்கு அரிதானதாகும். ஆதியிலே ஆசிரமங் கள் கலைஞான நிலையங்களாக இருந்துவர, நாளடை வில் நகரங்களில் கலைஞான பீடங்கள் தோன்ற லாயின. அங்ஙனம் தோன்றிய பீடங்கள் பலவாகும்.

கலைஞான பீடங்களை இக்காலத்தில் பல்கலைக் கழகம் என்கிறோம். பாரத பூமியிலே மிகப் புராதன மான சர்வ கலாசாலைகளில் சிறந்தது **தட்சசீலம்.** மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் தட்சசீலம் தலை சிறந்து நின்றது. பஞ்ச நதிப் பிரதேசத்திலே இந் நாளில் **ராவல்பிண்டி** என்னும் நகர் ஒன்று உள்ளது. அதற்கு அருகில் தட்சசீலம் இருந்தது.

ஜனமேஜய மகாராஜன் அந்த இடத்தில்தான் **தட்சயாகம்** செய்தனன். இயற்கை வனப்பனைத் தும் அங்கே பரிபூரணமாக இருந்தது. முன்னாளிலே இந்தியாவுக்கும் மத்திய ஆசியாவுக்கும் போய்வரும் இராஜபாதை ஒன்றுண்டு. அதன் வழியேதான் ஆயிரக் கணக்கான பொதிமாடுகளின்மீது வணிகர் சரக்குகளைக் கொண்டு செல்வர்.

அத்தகைய பாதையின் அருகில் இருந்தது தட்ச சீலம். தட்சசீலம் தலைசிறந்து நின்றதற்குக் காரணம் ஆசியர்களின் அபார ஞானமேயாகும். அன்னார் உலகப் புகழ் பெற்ற மேதாவிகள். கலைமகள் அவ் விடத்தைத் தன் உறைவிடமாகக் கொண்டிருந்தாள். தட்சசீலத்தில் போதிக்கப் படாத கலைகள் இல்லை. பாரத மக்களே யன்றி, பிறதேசங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான மாணவர் அங்கே வந்து கல்வியும் ஞானமும் பெறலாயினர்.

தட்சசீலத்திற்கு அடுத்தபடியாகப் பிரசித்தி பெற்ற கலைஞான பீடம் **நாளந்தா.** கலைஞானம் பெற்றுச்செல்ல நான்காம் நூற்றாண்டிலே **பாகியான்** என்னும் சீனர் அங்கு வந்தார்; ஏழாம் நூற்றாண் டிலே **ஹியூன்சங்** என்பார் வந்தார். இருவரும் தூதர்; நாளந்தாவில் இருவரும் பத்தாண்டு பொருந்தியிருந்து, பல கலையும் கற்றனர்.

ஆரியதேவன் என்பான் நாளந்தாவை ஏற்படுத்தியவன். பலவகையான மரங்களும் விதவிதமான நீர் நிலைகளும் அழகிய பூஞ்சோலைகளும் நிரம்பிய இடத்தில் நாளத்தா துலங்கிற்று. ஆசிரியரும் கையேடு வாசிப்போருமாக அங்கே பதினாயிரவர் இருந்தனர். அனைவருக்கும் உண்டி, உடை, இருக்கை முதலிய அனைத்தும் இலவசமாகக் கிடைத்தன. பற்பல மதங்களும் அங்கே ஆராயப்பெற்றன ; அறுபத்து நான்கு கலைகளும் போதிக்கப் பெற்றன. அதன் நூல்நிலையம் ஒன்பதடுக்கு மாடங்கள் கொண்டது. பிரசங்க மண்டபங்களோ நூற்றுக்குமேல் இருந்தன.

நாளந்தாவுக்குப் பின்னர் பேற்பெற்ற கலைஞான பீடமாக விளங்கியது, **விக்கிரமசீலம்**. அதன்பின் தலையெடுத்தது **உதயாந்தபுரி**. பிறகு தோன்றியது **நவத்வீப** கலைஞான பீடம். இது பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. இன்று இது இளைத்த மாட்டைப் போல் வங்கத்தில் உள்ளது. இங்கு ஆயிரக் கணக்கான பண்டிதர் கூடித் தம் வாதத் திறமையைக் காட்டிப் புகழ் பெறுதல் வழக்கம்.

தமிழகத்திலோ முதல், இடை, கடை என முச்சங்கங்கள் இருந்தன. பெரும்புலவர்கள் வீற்றிருந்து அரிய நூல்களை இயற்றி, ஞான ஒளி பரப்பினர். கடைச் சங்கத்தில் இருந்த **கபிலர்**, **பரணர்**, **நக்கீரர்** முதலியோரின் பெருமையை அறியாதவர் யார் ?

முகம்மதியரின் ஆட்சிக் காலத்திலும் **சுல்தான் பிரோஸ்** என்பவர் கலைஞான பீடம் நிறுவினார். அக்பர் மகா சக்கரவர்த்தியோ பற்பல சமயங்களைத் தழுவிய கல்விமான்களையும் மேதாவிகளையும் வரவேற்று, வாரந்தோறும் தர்க்கம் நடத்தி, கலை வகைகளை வளர்த்து வந்தார்.

இனி, காஞ்சிப் பல்லவரின் ஆட்சிக் காலத்திலே புதுச்சேரிக்கு அடுத்த **பாகூர்** என்னுமிடத்தில் கலை ஞான பீடமொன்று கவின்பெற நின்றது. சீமான் களும் பிறரும் அதற்குப் பல கிராமங்களை மானிய மாக அளித்தனர். ஆண்டுதோறும் அங்கு நடந்த பட்டமளிப்பு விழா இப்போது பிற இடங்களில் நடக்கும் விழாக்களினும் மிக்க சிறப்பாக நடை பெற்றது.

தமிழகத்திலே பற்பல ஊர்கள் **சதுர்வேதி மங்கலம்** என்னும் சிறப்புப் பெயர் பெற்றிருக்கும். வேதசாஸ்திரங்களில் வல்ல வேதியருக்கு விடப்பட்ட மானியக் கிராமங்கள் அவை. அவ்வேதியர் தமது அகங்களில் மாணவரைப் பயிற்றுவித்தலைக் கடமை யாகக் கொண்டிருந்தனர். ஆதலின், அக்கிராமங்கள் குட்டிக் கலை ஞான நிலையங்களாக விளங்கிவந்தன.

17. கருணைக் கடல்

பனிமலையின் அடிவாரத்தில் சாக்கிய நாடு என ஒரு நாடு இருந்தது. அந்நாட்டரசன் **சுத்தோதனன்** எனப்படுவான். அவன் மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற மன்னவன். அவன் மனைவியின் பெயர் **மாயா தேவி** என்பது. இருவருக்கும் அருமையாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குச் **சித்தார்த்தன்** என்று பெயரிட்டனர்.

பெற்றோர் அக் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். வாலிப வயதில் அவனுக்கு விவாகம் ஆயிற்று. அவன் தேவியின் பெயர் **யசோதரை** என்பது. அவ்விரு வருக்கும் பிள்ளை யொன்று பிறந்தது. அதன் பெயர் **இராகுலன்** என்பது.

இராஜ போகத்தில் சித்தார்த்தரது மனம் ஈடுபட வில்லை. உலகை அவர் உற்று நோக்கினர். பெரிய உயிர்கள் சிறிய உயிர்களைத் தாக்கித் துன்புறுத்து வதைக் கண்டு அவர் இரங்கினர் ; மனிதரை மனிதர் கடிந்து பேசுவதைக் கண்டும் கலங்கினர்; மனிதருக் குள்ள மூப்பு, பிணி, சாக்காடு இவற்றை நோக்கியும் வருந்தினர்.

"உலகவாழ்வு துக்க மயமாக உள்ளது. அந்தத் துயரைப் போக்க வேண்டும். எல்லோரும் இன்புறு வதற்கு ஏற்ற ஒரு வழியைக் கண்டறிதல் வேண்டும்" என்று அவர் உறுதி பூண்டார்; உடனே அரசபோகம், இளமனைவி, அழகிய குழந்தை எல்லாவற்றையும் துறந்தார் ; காவியுடைதரித்து வெளியேறிச் சென்றார்.

பல இடங்களிலும் அவர் அலைந்து திரிந்தார். முடிவிலே **கயா** என்னும் நகரிலே ஓர் அரசமரத்

தடியில் அமர்ந்து நெடுநாள் சிந்தனை செய்தார். முடிவிலே, "உயிர்களிடம் அன்பு பூண வேண்டும். போதுமென்ற திருப்தி கொள்ள வேண்டும். ஆசையை அறவே ஒழிக்க வேண்டும். உயிர்களுக்கு ஊறு செய்யக்கூடாது. பாவமும் பண்ணக்கூடாது. அப்படி யானால் துக்கம் தொலையும், இன்பம் கிட்டும்," என்று அவருக்குப் புலப்பட்டது.

அப்பால், "யான் கண்ட உண்மையை இவ் வையகம் எங்கும் எடுத்துரைப்பேன்" என்று புத்தர் முடிவு செய்தார்; நாட்டின் பல்வேறிடங்களிலும் சென்று உபதேசம் செய்தார். முதன் முதல் அவர் உபதேசம் செய்தது காசியை அடுத்த **சாரநாத்** என்னும் இடத்திலாகும். அந்த இடம் மிகவும் புனித மானது.

அந்நாளிலே மகத இராச்சியத்தின் அதிபதியாக இருந்தவன், **பிம்பசாரன்**. அவன் பேரரசு கண்டதன் அடையாளமாக யாகமொன்று செய்யத் துணிந்தான். அதில் ஆடுகளைப் பலியிடுதல் வழக்கம். புத்தர் அவன்பால் நண்ணி, உயிர்க்கொலை வேண்டாம் என்று உபதேசம் செய்தார். உடனே அவரது மார்க் கத்தை அவன் பின்பற்றினன்.

புத்தர் போதித்த மார்க்கம் **புத்த மதம்** எனப் படும். அம்மதத்தின் உண்மைகள் வேத சாஸ்திரங் களில் அடங்கியுள. அன்பையும் கொல்லாமை யையுமே அவரது மதம் குறிக்கோளாகக் கொண்டது. வேத மார்க்கத்தின் நுட்பமான உண்மைகளை அறிய இயலாத சாதாரண மக்கள் அந்தச் சமயத்தைப் பின் பற்றினர்.

செய்யும் தொழிலை மதித்து ஆரிய சமூகத்தில் ஏற்பட்ட நான்கு வருணாசிரம தருமங்களானவை

நான்கு சாதிகளாக மாறிவந்ததை அப்புத்தர்பிரான் கண்டித்தார் ; சாதிப்பாகுபாடு கூடாது என்றார். வேத மார்க்கத்தின் விதிமுறைகளைவிட, அப்புத்தமதத்தின் விதி முறைகள் எளியனவாக இருந்தன. ஆதலின் பலரும் அம்மதத்தைத் தழுவத் தொடங்கினர்.

அவர் காலத்துக்குப் பின், ஓர் இருநூறு வருஷம் அரசரும் பிறரும் அம்மதத்தைத் தழுவியதனால், அம் மதம் இத்தேசமெங்கும் பரவிற்று ; வெளிநாடுகளிலும் பரவலாயிற்று. அதனால் ஆங்காங்கே யாக யக்ஞங் கள் நடைபெறுவது குறைந்தது. சாதிப்பாகுபாடு என்பதும் தளர்ந்தது. அன்பும் கொல்லாமையும் ஓங்கின.

அன்பு, அஹிம்சை இரண்டையும் வலியுறுத்திய பெருமை அப்புத்தர் பிரானைச் சாரும். அவரது போதத்தால் துறவுத் தன்மையும் மக்களிடம் வேரூன்றியது. அதனால், வீரத்தன்மை குன்றலா யிற்று. அந்நாளில் வெளிநாடுகளிலிருந்து பற்பல வகுப்பார் இத் தேசத்தின் மீது படையெடுத்து வந்தனர். தேசம் நலியத் தொடங்கியது.

இதனையறிந்த வேதமார்க்க விற்பன்னர் அம் மார்க்கத்தில் திருத்தங்கள் செய்தனர். செய்யவே, வேதமார்க்கம் மீண்டும் முன்போல் சிறக்கலாயிற்று. அதனால் இத் தேசத்திலே புத்த மதத்தின் செல்வாக்கு குறைந்துவிட்டது. இப்போது வெளிநாடுகளில்தான் அம்மதம் வழக்கில் உள்ளது.

வேதமார்க்கத்தை ஓரளவு திருத்தவே புத்தர் பிரான் தோன்றினர். அவரை அவதார புருஷர் என்று அம்மதத்தார் கொண்டாடுவர். அவரது காலம் 2500 ஆண்டுகளுக்கு முன்னராகும்.

18. வீர இளைஞன்

கௌதமபுத்தரின் காலத்திலே நமது தேசத்தில் பற்பல அரசுகள் இருந்தன. அவற்றுள் சிறந்தது மகத இராச்சியம். ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் மகாபாரத யுத்தம் நடந்தபோது, மகதத்தை ஆண்டு வந்த பெருவீரன் **பிருகத்திரதன்** என்பவன். அவன் காலத்தில் **கிரிவிரஜம்** என்பது அந்நாட்டின் தலை நகராக இருந்தது. அப்பால் **இராஜக்கிருகம்** என்பது அரசிருக்கை ஆயிற்று. அவனது வழி முறையில் வந்தவனே பிம்பசாரன். இவன் புத்த பகவானது உபதேசத்தால் பௌத்த மதத்தில் சேர்ந் தான். இவன் சக்கரவர்த்தியாக விளங்கினான்.

இவனுக்குப் பின் பட்டமேற்றவன் **அஜாதசத்ரு** என்பவன். பெயருக்கேற்ப இவன் மகா பராக்கிரம சாலி. இவனே தற்போது **பாட்னா** என வழங்கும் **பாடலீபுர** நகரை நிறுவி, இராஜதானியாகக் கொண்டவன். இவனுக்குப் பின் **நவநந்தர்** என் போர் அரியணையில் அமர்ந்தனர். அவ்வமிச முதல் வன் மகாபத்மநந்தன் என்பவன்; கடைசியானவன் தனநந்தன் ஆவான்.

தனநந்தன் மலைமலையாகப் பொருளைக் குவித்து வந்தான்; ஆதலின் தனநந்தன் என்று பெயர் பெற்றான். இவன் காலத்தில்தான் கிரேக்க வேந்தனான **மகா அலெக்சாந்தர்** பாரதநாட்டின்மீது படை கொண்டுவந்தார். அப்போது தனநந்தன் பேரரசனாக இருந்தும், அந்த அன்னியனை எதிர்க்காமல் வாளா இருந்துவிட்டான்.

படைகொண்டு வந்த அலெக்ஸாந்தரின் வீரர் "பொன் விளையும் நாடு போகின்றோம்" என்று சொல்லிக்கொண்டு கிளம்பினர். அலெக்ஸாந்தர், ஞான விளக்கு எரியும் பூமியைப் பார்க்கச் செல்வ தாகப் பூரிப்புக் கொண்டார்; பாரதநாட்டை யடைந்து, பஞ்சநதிப் பிரதேசத்தில் சில இடங்களைக் கைப் பற்றினர்.

மேலும் உள்நாட்டிலே புக, மகா அலெக்ஸாந்தரின் வீரர் விரும்பவில்லை. ஆதலின் அவர் மனவாட்டத் துடன் திரும்பிப்போக நேர்ந்தது. செல்லும்போது, அலெக்ஸாந்தர் இங்கிருந்து தத்துவ ஞானிகள் சிலரை விரும்பி அழைத்துச் சென்றார்.

மீண்டும் பெரும் படையுடன் வந்து, பாரத பூமியை ஜெயிக்கவேண்டும் என்பதே அலெக்ஸாந் தரின் நோக்கம். ஆயினும், சொந்த தேசத்துக்குத் திரும்பிய இரண்டு ஆண்டினுக்குள் அவ்வீர வேந்தன் மாண்டுபோனார். அவர் வென்ற நாட்டை அவரது தளகர்த்தர் பங்கிட்டுக்கொண்டு ஆண்டு வந்தனர். அப்போதும் தனநந்தன் வாளா இருந் தான்.

தனநந்தனது வமிசத்திலே தோன்றியவன் சந்திரகுப்தன் என்னும் வீர இளைஞன். தனநந்தன் வாளா இருத்தல் கண்டு, அவ்விளைஞன் மனம் பொறாயினன். பாடலிபுரத்திலே யிருந்த சாணக் கியர் என்பாரும் கிரேக்கரின் படையெடுப்பு கண்டு பதைப்புக்கொண்டார்.

இவர்கள் இருவருஞ் சேர்ந்து, பஞ்சநதிப் பிரதேசஞ் சார்ந்து, ஆங்குள்ள மக்களைத் திரட்டி அக் கிரேக்கருடன் போர் தொடுத்தனர். சுருங்கச் சொன்னல், அன்னியக் கிரேக்கர் ஆற்றாது ஓடினர்.

பின்பு சந்திரகுப்தனும் சாணக்கியரும் மகதத்தின்-மீது பாய்ந்தனர். தேசநலத்தை மதியாத தனநந்தனைத் தொலைக்கவேண்டும் என்பதே அவ்விருவரின் நோக்கமாகும்.

மகத மக்களும் அவ்விருவரையும் வாவேற்று உதவி புரிந்தனர். தனநந்தன் போரிலே தோற்றுப் போனான். அதோடு அந்த அரச வமிசமும் மறைந்தது. உடனே மகத மக்கள் சந்திரகுப்தனையே அரசனாக ஏற்றுக்கொண்டனர். அவன் முரை என்னும் மாதினுக்குப் பிறந்தவன். ஆதலின் அவனது வமிசம் **மௌரிய வம்சம்** எனப் பெயர் பெற்றது.

கி. மு. 320 ஆம் ஆண்டிலே அவன் பட்டம் ஏற்றான். சாணக்கியர் அவனுக்கு மதியமைச்சராக அமர்ந்து அரசியலை ஒழுங்கு செய்தார். அப் பேரமைச்சர் வரைந்த அரசியல் நூலொன்று **அர்த்த சாஸ்திரம்** எனப்படும். அரசை அமைத்துக் காக்கும் அற்புத விவரங்கள் அனைத்தும் அந்நூலில் காணப்படுகின்றன. மேனாட்டு அரசியல் அறிஞர் அனைவரும் அந்நூலை உச்சிமீது கொண்டு கொண்டாடுகின்றனர்.

மகதத்தை ஒரு வல்லரசாக்கி, இப் பாரத பூமியைப் பாதுகாக்க வேண்டும் என்று அரசனும் அமைச்சனும் முயன்றனர். சந்திரகுப்தன் திக்கு விஜயஞ் செய்து, இந்தியாவின் பெரும்பாகத்தை வென்று தன் ஆட்சிக்கு உட்படுத்தினான். சாணக்கியர் தலைநகரைத் தக்க பாதுகாப்புக்களுடன் அமைத்தார்.

அந்நகரைச் சுற்றி மதிள்சுவர்களும் அகழிகளும் அமைக்கப்பட்டன. நகரின் கோட்டைக்கு அறுபத்து

நான்கு வாயில்கள் அமைந்தன. கோட்டைக்குள்ளே இளமரக்கா ஒன்று எழுந்தது. அதன் நடுவே அரசனது அரண்மனை நின்றது. மாளிகையின் அமைப்பும் அழகும் சிற்ப சித்திர வேலைக்கு ஓர் எடுத்துக் காட்டாயின.

அவ்விதமெல்லாம் வல்லரசு உருவாகி வருகையில், வேற்றரசன் ஒருவன் சீறிவந்தான். அதன் விவரத்தை அடுத்த அதிகாரத்தில் காணலாம்.

19. வீறுகொண்ட வேந்தன்

மகா அலெக்சாந்தர் மரித்ததும், ஆசியாவிலே அவன் முன்னர் அடிப்படுத்திய நாடுகளுக்கு **ஸெலுகஸ்** என்பவன் தலைவன் ஆனான். சந்திர குப்தனது வெற்றிகண்டு ஸெலுகஸ் மனங்கொதித் தான்; மேலும், தனது தலைவனைப் பின்பற்றிப் பல நாடுகளைப் பிடிக்கவேண்டும் என்றும் பேராவல் கொண்டான்.

அதன் விளைவாகவே, கிரேக்க வீரர் மீண்டும் பாரத பூமியை எட்டிப் பார்த்தனர். எல்லைப் புறத் திலேயே சந்திரகுப்தன் அவ்வீரரை மறித்து நிறுத்தி முறியடித்தனன். அதன்மேல் ஸெலுகஸ் என்பான் நமது தேச வேந்தனுடன் ஓர் உடன்பாட்டுக்கு வர இசைந்தனன்.

அதன் பயனாக ஆப்கானிஸ்தானம், பஞ்சநதிப் பிரதேசம் இரண்டையும் ஸெலுகஸ் விட்டுக் கொடுத் தான்; நட்பின் அடையாளமாகத் தனது அழகிய மகளொருத்தியையும் அவ்வீர வேந்தனுக்கு மணம் செய்தளித்தான்; **மகஸ்தனிஸ்** என்பவரைத் தனது பிரதிநிதியாகப் பாடலிபுர அரசவைக்கு அனுப்பி வைத்தான்.

அதற்குமுன் நெடுநாளாகவே இந்தியாவுக்கும் கீரிஸ் தேசத்துக்கும் வர்த்தகத் தொடர்பு இருந்து வந்தது. ஸெலுகஸின் தோல்விக்குப் பிறகு, அரசி யல் தொடர்பும் ஏற்பட்டது. அதனால் கிரேக்கர் பலர் அறிவும் நலமும் எய்த இங்கே வந்து போயினர். நமது தேச தத்துவ ஞானியரும் அத்தேசஞ் சென்று அறிவுச்சுடர் கொளுத்தி வந்தனர்.

ஐரோப்பாவில் கிரீஸ் தேசமே ஆதியில் தலை சிறந்து நின்றது. அப்பால் உரோம இராச்சியம் தலை யெடுத்தது. ஐரோப்பாவின் நாகரிக வளர்ச்சிக்கு அவ்விரு நாடுகளுமே காரணம் என்பர். பாரத பூமியின் தொடர்பு கிட்டியதனுல், கலைகள் இங் கிருந்து கிரீசுக்குப் பரவின.

கிரேக்கரின் மூலமாக நமது கலையறிவையும் உரோமர் எய்தினர். வல்லரசு கொண்டு வாழ்ந்தமை யால், உரோமரின் செல்வாக்கு ஐரோப்பா எங்கும் பரவிற்று. அதனோடு நமது கலைஞானமும் பரவிய தென்பது வெளிப்படை. உரோமரும் நம்மவருடன் நெடுங்காலமாக வாணிபத் தொடர்பு கொண்டோ ராவர்.

சந்திரகுப்தனது காலத்திலே நகர பரிபாலனம் இந்நாளைய பரிபாலனத்தைவிடச் சிறந்திருந்தது. நகரம் பல பாகங்களாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பிரதிநிதி உண்டு. அப்பிரதிநிதி களே நகராண்மைக் கழகத்தினர் ஆயினர். அந் நகருக்கு வரும் புதியவரை வரவேற்று, அன்னுருக்கு உரிய வசதி தேடித்தரவும் ஒரு பஞ்சாயத்து (கமிட்டி) இருந்துவந்தது.

மௌரிய சேனையில் ஆறு இலட்சம் காலாளரும், முப்பதாயிரம் குதிரை மறவரும், பத்தாயிரம் யானைப் படைஞரும், ஆயிரக்கணக்கான தேர் வீரரும் இருந்த னர். சட்டதிட்டங்கள் மிக நேர்மையாக இருந்தன. ஜனங்கள் இன்பமாக வாழ்ந்துவந்தனர்.

அந்நாளிலே ஜனங்கள் நீதிமன்றம் குறுகி வழக் காடுதல் என்பது அருமை. கொடுக்கல் வாங்கலுக்குச் சீட்டுநாட்டு வேண்டியதில்லை. மக்களிடம் வாய்மை என்னும் விழுமிய குணம் நிறைந்திருந்தது. யாரும்

சொன்ன சொல் தவருர். வீடுகளுக்கோ பூட்டும் சாத்தும் தேவையில்லை.

சந்திரகுப்தன் சக்கரவர்த்தி என்று பெயர் பெற்ருன். பிற அரசர் அனைவரும் அவனுக்கு அடங்கி வாழ்ந்து வந்தனர். அவனது பேரறிவும் போராண்மையும் பாரத பூமியெங்கும் பரவியது. அதனுல் மகத சாம்ராஜ்யம் மகிமை எய்தியது.

கிரேக்க தூதரான மகஸ்தனிஸ் என்பவர் வாயிலாகச் சந்திரகுப்தனது பெயரும் புகழும் மேனுடுகளிலும் பரவின. கல்வியில் பெரிய கம்பன் வாக்கில் எழுந்த பின்வரும் பாடல் அவனது ஆட்சி முறையின் நேர்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும் :

'' தாயொக்கும் அன்பில் ; தவமொக்கும் நலம் பயப்பின் ;
சேயொக்கும் முன்நின்று ஒரு செல்கதி உய்க்கு நீரால் ;
நோயொக்கும் என்னின் மருந்தொக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னுன் ''

அன்பிலே அவன் தாய்போல்வான் ; நலம்புரிவதில் தவம் போல்வான் ; நற்கதி சேர்ப்பதில் மைந்தரைப் போல்வான் ; நோய் என்ருல், அதற்கு மருந்தாக இருப்பான் ; அறிவு போலவும் துலங்குவான்.

மேனுட்டுச் சரித்திர ஆசிரியர் கூறும் வண்ணம், சரித்திர காலத்தில் அவனே முதல் சக்கரவர்த்தி ; முதன்மையான சக்கரவர்த்தியுமாவான். அவனுக்குப் பின் வந்தவனே அசோகன்.

20. அன்பு வெள்ளம்

புத்தர்பிரான் பௌத்த மதத்தை தோற்றுவித்தார் என்ருல், அதனைப் பாரெங்கும் பரவச் செய்தவர் **அசோக சக்கரவர்த்தி**யாவார். அவர் **மகத** சாம்ராஜ்யத்தின் தலைவர். பட்டத்துக்கு வந்ததும், பெரும் படைகொண்டு கலிங்கநாட்டை வென்ருர். அப்போரால் நேர்ந்த உயிர்ச்சேதம் அளவிடற்கரியது.

படுகளங்கண்ட அவரது கருணையுள்ளம் துடி துடித்தது. ஆயுதத்தை வீசி ஆளுவதினும், அன்பைப் பரப்பி ஆளுவதே சாலச் சிறந்ததென்ற உறுதி அவர் உள்ளத்தில் பிறந்தது; பௌத்த மதத்திலும் அவருக்குப் பற்று மிகுந்தது. மிகவே, அறப்பயிர் விளைக்கவே அவர் முயன்ருர்.

அவரது தூதுவர் இப்பாரத பூமியெங்கும் சென்றதுடன், வெளிநாடுகளுக்கும் போய் பௌத்த தர்மத்தைப் பரவச் செய்தனர். அன்பும் கொல்லாமையும் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்தன. மக்கள் பலரும் குணசீலராக வாழத் தலைப்பட்டனர்.

அவர் இப் பாரத பூமியில் ஆங்காங்கே கல் தூண்களும் சிலைகளும் ஸ்தூபிகளும் அமைத்து, அவற்றில் பௌத்த தரும வாக்கியங்களைப் பொறித்து வைத்தார். கல்மேல் எழுத்து என்றும் மாருது அல்லவா? அந்த எழுத்துக்கள் சாஸனங்கள் எனப் படும். ஒரு சாஸனம் பின்வருமாறு:

"மதப்பகை கூடாது. எல்லா மதங்களும் சத்தியத்தையே போதிக்கும். பிற மதத்தை ஒருவன் இழித்து உரைத்தால், தன்னுடைய மதத்தையே அவன் நிந்தித்தவன் ஆவான். பெரியோராவோர் எம்மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்,

அவர்களை வணங்கி உபசரிப்பேன். ஒழுக்கமும் மேன்மையும் பொருந்திய மகான்களை நான் என்றும் போற்றுவேன்.''

அவரது முத்திரை தர்ம சக்கரமேதான். நமது குடியாட்சியிலும் அத் தர்ம சக்கரத்தையே அரசியல் சின்னமாகக் கொண்டுள்ளனர். அவரது ஸ்தூபியின் சிகரம் தபால் கடிதங்களிலும் செலாவணி நோட்டு களிலும் குறிக்கப்பட்டுள்ளது. அவர் தமது புதல் வனையும் புதல்வியையும் சமயத் தூதுவராக இலங் கைக்கு அனுப்பியதுடன், பாரத பூமியெங்கும் நீதி நெறி, வாய்மை, தர்மம் இவற்றை மக்களுக்கு எடுத் துரைக்க அதிகாரிகளையும் ஆங்காங்கே அமைத் திருந்தார். அவர்களுக்குத் **தரும மகா மாத்திரர்** என்று பெயர்.

அசோகர் புஜபல பராக்கிரமத்திலும் போர் நூலிலும் வல்லவராயினும், அன்பு தயை சாந்தம் அடக்கம் முதலிய குணங்களே கொண்டு குலவினர். அவரது நல்லாட்சி நாற்பதாண்டு நடைபெற்று வந்தது. இமயமலை முதல் மைசூர் வரையில் அவரது அரசு பரவியிருந்தது. அவருக்கு இணையான அரசர் எக்காலத்திலும் இருந்ததில்லை என்று மேனாட்டு வரலாற்று ஆசிரியர் கூறுவர்.

தருமபுத்திரனேபோல் அம் மன்னர்மன்னன் விளங்கி வந்தும், பின்வந்த அரசர் பல விதத்திலும் தகுதியற்றிருந்தனர். ஆதலின், அவர் காலமாகி ஐம்பதாண்டு கழிந்ததும், மௌரிய வமிசமும் வல்லரசும் மறையலாயின.

ஏறக்குறைய இருநூறு வருஷகாலம் மௌரிய வமிசத்தார் ஆட்சி செலுத்தி வந்தனர். அப்போது தேசம் மகோன்னத நிலை எய்தியது. பாவ புண்ணியத் துக்கு அஞ்சி, அரசரும் குடிமக்களும் நடந்து

வந்தனர். அந்நாளில் யானைப்படையே சிறப்புற்றிருந்தது; தேர்ப்படையும் மிகுதி. அரசரிடம் மிகப் பெரிய சேனு சமூகங்கள் இருந்தன. சிற்றரசரும் பெருஞ் சேனை கொண்டிருந்தனர்.

வியாபாரம் ஏராளமாக நடந்து வந்தது. போர்க் கப்பல்களும் இருந்தன. கப்பல் கட்டும் தொழில் சிறந்திருந்தது. உள் நாட்டிலே வர்த்தகத்துக்கு உரிய பாதைகள் நிரம்பி யிருந்தன. அயல்நாட்டுத் தூதரில் பலர் பாடலீபுரத்தில் தங்கியிருந்தனர்.

சிற்ப சித்திரக்கலைகள் இணையற்றனவாகத் திகழ்ந்தன. அசோகர் அமைத்த தூண்களும் மண்டபங்களும் சிற்ப நேர்த்தியையும் தேர்ச்சியையும் நன்கு விளக்குவன. கல் தூண்களைத் தொட்டால், பட்டாடை போல் வழுவழுப்பாக இருக்குமாம்.

தேசமெங்கும் கல்வியும் கலைகளும் பெருகின. ஆலயங்கள் பல ஆங்காங்கே எழுந்தன. புத்த கயாவின் ஆலயம் மிக்க வனப்பு வாய்ந்தது. கல்விமான்களும் கவிவாணரும் தக்க ஆதரவு பெற்றனர். சம்ஸ்கிருதம், பிராகிருதம், பாலி முதலிய மொழிகள் செழித்தோங்கின. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இராதல்லவா?

21. அன்னியரின் மாற்றம்

மௌரிய வமிசம் தலைசாய்ந்தபின், பாடலீபுர நகரத்திலே, பேரரசனுக விளங்கியவன் **புஷ்ய மித்திரன்** என்பவன். இவன் புல்லேந்தும் வேதியனுயினும், வில்லேந்தித் திக்குவிஜயம் செய்தான். வட இந்தியா முழுவதும் இவனது ஆட்சிக்கு உட்பட்டது. இவன் பழைய வேத மார்க்கத்தினுக்குப் புத்துயிர் ஊட்டி அதனை நிலைநாட்டினுன்.

இவன் காலத்தில் மத்திய ஆசியாவில் உள்ள **பாக்டிரியா** என்னும் நாட்டின் நரபதியான **மினுந்தர்** என்பான் படைகொண்டு, பாரத பூமிக்குள் புகுந்தான். புஷ்ய மித்திரனது மைந்தனுன **அக்கினி மித்ரன்** என்பவன் அப்பகையரசனைப் போர் முனையில் வென்று தொலைத்தான். அது குறித்தும், சக்கரவர்த்தி என்பதை நிலைநிறுத்தவும், **அசுவமேத யாகம்** செய்தான் புஷ்யமித்திரன். அதற்கு அரசர் பலரும் உடனிருந்து உதவினர்.

இனி, சிந்து நதிக்கு மேற்கிலும், வடமேற்கு எல்லைப் பிரதேசத்திலும், **பார்த்தியர்** என்னும் ஜாதியார் வந்து நாடாளத் தலைப்பட்டனர். **சாகர்** என்பாரும் தோன்றி அங்கே அரசு கொண்டனர். **உஜ்ஜயினி, வடமது**ரை முதலிய இடங்களில் சாக அரசுகள் ஏற்பட்டன. அப்பால், **குஷானர்** என்னும் ஒரு வகுப்பார் பஞ்சாபிலே அரசுகொண்டனர். அக்குஷானரில் சிறந்த அரசன் **கனிஷ்கன்** எனப் படுவான். காபூல் நகரம் வரையில் அவனது அரசு பரவியிருந்தது. **பெஷாவர்** நகரம் தலைநகரா யிருந்தது.

கனிஷ்கன் புத்த மதத்தைத் தழுவி நன்கு அர

சாண்டு வந்தான். அவன் காலத்தில் புத்தமதம் பேராதரவு பெற்றது. அவனுக்குப் பின்வந்த அரசர்கள் திறமைசாலிகளாக இல்லை. அதனால், அக்குஷானர் அரசு அழிந்துபோய்விட்டது. அவ்வமிசத்தார் தேச மக்களுடன் கலந்துவிட்டனர்.

மழைநீர் தான்விழும் இடத்தின் தன்மையை எய்தும். அவ்வாறே, மனிதரும் தாம் நெருங்கிப் பழகும் மக்களோடு மக்களாக ஆகிவிடுதல் இயற்கை. அதன்படி, யவனர், சாகர், பார்த்தியர், குஷானர் முதலிய பற்பல அன்னியரும், இப்பாரத பூமியின் நடை உடை பழக்கவழக்கங்களை நாளடைவில் மேற்கொண்டனர்; பின்பு, மக்களோடு மக்களாய் வேற்றுமையின்றிக் கலந்துவிட்டனர்.

இங்கே வந்து புகும் அந்நியர் யாவராயினும் சரி, அன்னாருக்குத் தனது சிறப்பியல்புகளை ஊட்டி, ஆட்கொள்ளுதல் நமது பூமியின் இயற்கை. அந்த இயற்கைக்கு ஏற்ப, ஆதிமுதல் நேற்றுவரை வந்த அனைவரையும், தமது உடன்பிறப்பாளரெனக் கொண்டு, பாரத மக்கள் நடந்து வருதலே ஓர் உயர்ந்த பண்பாடாகும்.

இப்பூமியில், புஷ்யமித்திரனுக்குப்பின், வல்லரசு இல்லையே என்று குப்த குலத்தார் வருந்தி, வீறுடன் எழுந்து, குப்தகுல வல்லரசு ஒன்றை கி. பி. நான்காம் நூற்றாண்டில் நிறுவினர். அக்குலத்தாரின் காலத்தில், நமது தேசம் பலவிதத்திலும் உலகிலே தலைசிறந்து விளங்கத் தொடங்கியது.

22. குப்தரின் கீர்த்தி

பாரத சமூகத்திலே, வைசியர் என்போர் ஒரு பிரிவினர். குப்தர் என்று அவர்களுக்கு ஒரு பட்டப் பெயர் உண்டு. அவர்களில் சிற்றரசனுகை இருந்த **சந்திர குப்தன்** என்பான் வேறு; மௌரிய குல சந்திரகுப்தன்வேறு. இவன் பாடலீபுர வேந்தனுகை ஆயினன். தனது தோள்வலியால் இவன் கி. பி. 320 ஆம் ஆண்டிலே இராஜாதிராஜன் என்று பட்டம் சூட்டிக்கொண்டான்; குப்த சகாப்தம் ஒன்று ஏற் படுத்தினுன். நெடுநாள் அது நிலவி வந்தது.

இவனது புத்திரனுன **சமுத்திரகுப்தன்** என் பான் மகா வீரன். இவன் மேனுட்டு மகாவீரனுன **நெப்போலியனை** நிகர்த்தவன் என்று ஆங்கில வர லாற்று ஆசிரியர் கூறுவர். இவன் இந்தியாவின் பெரும்பாகத்தை வென்று ஆட்சி செய்து வந்தான். தெற்கே **காஞ்சீபுரம்** வரையில் இவனது செங்கோல் சென்றது. இப்பூமியில் அரசுகொண்டிருந்த அன்னி யர் அனைவரையும் இவன் வேரறுத்தான்.

இவனது வீரமும் கீர்த்தியும் எங்கும் பரவவே, இலங்கை வேந்தனுன **மேகவண்ணன்** என்பான் இவனுடன் நட்புக்கொண்டான். பாரத பூமிக்கு மேற்கே, **ஆக்ஸஸ்** என்னும் பிரதேசத்தை ஆண்டு வந்த பேரரசனும் அச்சமுத்திரகுப்தனது நேசத்தை நாடி நின்ருன். இவனது புதல்வனே புகழ்பெற்ற **விக்கிரமாதித்தன்** என்பவன். விக்கிரமனும் தனது தந்தையைப்போல் அறிவும் திருவும் ஆற்றலும் நிரம்பியவன்.

விக்கிரமாதித்தனது, சபையில்தான் மகாகவியான **காளிதாசன்** விளங்கி வந்தான். அம்மகாகவியைத்

தவிர, வேறு எண்மரும் அவன் சபையை அலங்கரித்த னர். அக்கவிஞரில் ஒருவர் வானசாஸ்திரத்தில் வல்லவாரான **வராக மிகிரர்** என்பார். இன்னொருவர் கணிதசாஸ்திர மேதாவியான **ஆரியபட்டர்**. அந்த ஒன்பது புலவர்களையும் நவரத்தினங்கள் என்பர். அப்போது தலைநகராயிருந்தது **உஜ்ஜயினி**.

காளிதாசன் இயற்றிய **சாகுந்தலம்**, **மேக தூதம்** முதலிய காவியங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. **முத்திரா ராட்சஸம்**, **மிருச்சகடி** முத லிய தலைசிறந்த நூல்களும் அவ்விக்கிரமன் காலத்தில் பிரபலம் அடைந்தன. விக்கிரமனைக் குறித்து, வேதா ளக் கதை, முப்பத்திரண்டு பதுமை கதை என்பன இப்போதும் வழங்கி வருகின்றன.

குப்தகுலத்தாரின் கடைநாளிலே, **ஹூணர்** என் னும் ஜாதியார் படைகொண்டு இங்கே வந்தனர். அவர்களை **ஸ்கந்த குப்தன்** என்பான் போரிலே புறங் கண்டான். குப்தரின் காலத்தில்தான் நிஜாம் ராஜ்யத்திலே, **அஜந்தா** குகைகளில் காணப்படும் சிற்பங்களும் ஓவியங்களும் தோன்றலாயின. அவற் றைக் கண்டு வியக்காத மேனாட்டார் இலர்.

குப்த வேந்தரின் காலத்தை வேதமார்க்கத்தின் மறுமலர்ச்சிக் காலம் என்னலாம். இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, மனுதர்ம சாஸ்திரம் முத லிய பலவும் பெயர்த்து எழுதப்பெற்று, மிக்க கீர்த்தி யடைந்தன. கிராமங்கள்தோறும் புராண இதிகாசப் பிரசங்கங்கள் நாள்தோறும் நடைபெற்று வந்தன.

குப்தர் ஆட்சிக் காலத்திலே **பாஹியான்** என் னும் சீனத்தூதுவர் இங்கே வந்திருந்தார். அவர் சொல்லும் வண்ணம், சட்டதிட்டங்கள் நேர்மையாக இருந்தன ; மக்கள் சுகமாக வாழ்ந்து வந்தனர் ;

எல்லோரும் தர்மவான்கள், மகாயோக்யர்கள். பாடலி புரத்திலே தர்ம வைத்யசாலைகள் பல இருந்தன.

அந்நாளில் பௌத்த மதம் நலிந்து போயிற்று என்றே சொல்லவேண்டும். குப்தர் எங்கும் சிவாலயங் களும், விஷ்ணுகோயில்களும் எழுப்பினர்; வேத விதிப்படி பூஜையும் திருவிழாக்களும் நடந்துவர ஏற்பாடு செய்தனர்; வேதசாஸ்திரங்களில் வல்லவர் களை மிகவும் ஆதரித்து வந்தனர்; எங்கும் கலைகளைப் பரப்பினர்.

கொல்லாமை, புலால்மறுத்தல், மனத்தூய்மை, ஆலயப்பணி முதலியன வேத மார்க்கத்திலும் வேரூன்றி மிளிரவே, பௌத்த மதத்தில் மக்களுக் கிருந்த பற்று வரவரக் குறைந்து வந்தது. **வேத மார்க்கம்** ஓங்கலாயிற்று.

23. கும்பமேளா

குப்தர் காலத்தில் தோன்றிய **ஹூணர்** முதலில் தோல்விகொண்டும், அப்பால் கூட்டம் கூட்டமாக வந்து, வட இந்தியாவிலே தம் ஆட்சியை நிலைநாட்ட முயன்றனர். அவர்களின் தலைவனான **தோரமணன்** என்பான் பஞ்சாபிலே ஓர் அரசு கண்டான். அன்னியன் அரசு கொள்வதை மக்கள் ஒப்பவில்லை. அதனால் அம்மக்களை அவன் மிகவும் கொடுமையாக நடத்தினான்.

அவனுக்குப்பின் வந்த அவன் மைந்தன் **மிகிர குலன்** என்பானும் கொடுங்கோலனாக இருந்தான். ஆதலின், மக்கள் மனங்கொதித்து எழுந்தனர். அமர்க்களத்திலே அவனைச் சிறையும் செய்தனர். ஆயினும், மக்களின் அதிபனான **பாலாதித்தன்** என்பான் அவனை மன்னித்து உயிர்ப்பிச்சை அளித்தான்.

ஆனாலும், ஹூணரின் அட்டகாசம் அடங்கவில்லை. **கன்னியாகுப்ஜம்** அல்லது கன்னோசி என்னும் நாட்டின் அரசன் அவர்களுடன் நெடுநாள் மல்லுக்கு நின்று முடிவில் மாண்டுபோனான். அதன்பின், **தானேஸ்வர** நாட்டின் வேந்தனான **பிரபாகர வர்த்தனன்** என்பான் அவர்களைப் பழிவாங்கினான். அப்போதும் அவர்கள் அடங்கவில்லை.

பிரபாகரவர்த்தனனது புதல்வனான **ஹர்ஷன்** என்பான் கி. பி. 606ஆம் ஆண்டில் அரசனாகி, அந்த ஹூணரின் கொட்டத்தை ஒடுக்கினான். பின்பு, வடஇந்தியா முழுவதையும் வென்று சக்கரவத்தி ஆயினான். அவன் சபையில் விளங்கிய கவிஞரில் சிறந்தவர் **பாணன்**. இவர் **ஹர்ஷ சரிதம்** எழுதி

யுள்ளார். அது வடமொழியில் சுவைபட அமைந் துள்ளது.

ஹர்ஷ சக்கரவர்த்தியின் காலத்தில் சீனுவி லிருந்து **யுவான்சுவாங்** என்னும் தூதர் இங்கே வந் தார். தேசம் முழுவதையும் அவர் சுற்றிப் பார்த்தார். தாம் கண்டதையும் கேட்டதையும் அவர் விரிவாக எழுதி வைத்திருக்கிறுர். அந்நூலில் காணும் வண்ணம், ஹர்ஷன் மகா பண்டிதன் ; செங்கோலே செலுத்தியவன் ; ஊண் உறக்கத்தையும் கவனியாமல், மக்களின் நலத்தையே கவனித்து வந்தவன் என்று தெரிகிறது.

ஹர்ஷன் புத்த மதத்தினன் ; ஆயினும், மத சம ரசம் வாய்ந்தவன். புத்த ஆலயங்களுடன் சிவன் கோயில்களும் அவன் கட்டினுன். அடிக்கடி பண்டித சபை கூட்டி, வித்துவான்களுக்கு வரிசை வழங் கினுன்; தேசமெங்கும் சத்திரஞ் சாவடிகளும், தர்ம வைத்தியசாலேகளும் ஏற்படுத்தினுன்.

கங்கையும் யமுனேயும் கூடுமிடம் **பிரயாகை** எனப்படும். அந்த இடத்திலே, ஐந்து ஆண்டினுக்கு ஒரு முறை, ஹர்ஷன் ஒரு பெருஞ் சபை கூட்டு வான். சிற்றரசரும், சேனேத் தலேவரும், சீமான் களும் அங்கு வந்து குழுமுவர். பௌத்த, சைவ, சௌர, வைணவ மத மேதாவிகள் பலரும் வந்து சேருவர். இதர மக்களும் இலட்சக் கணக்கில் வந்து கூடுவர். அனேவரிடமும் பக்தி விசுவாசம் பரிமளிக் கும்.

புத்தர், சூரியன், சிவன் ஆகியோர் விக்கிரகங் களுக்கு அங்கே, தூப, தீப, ஆராதனேகள் நடக்கும். பண்டிதருக்கும் பிறருக்கும் 75 நாள் வரையில் அவன் தான தருமங்கள் செய்வான். முந்தைய ஐந்து வரு

டங்களில் சேர்ந்த செல்வம் அனைத்தையும் அவன் வழங்கிவிடுவான்; தனது ஆடை அணிகளையும் தானமாகக் கொடுத்துவிடுவான். தனக்கென வாழாது, பிறர்க்கெனவே வாழ்ந்து வந்த பெருந்தகையாக அவன் விளங்கினான்.

அன்று அம்மன்னவன் நடத்திவந்த திருவிழா இன்றும் **கும்பமேளா** என்று கொண்டாடப்பட்டு வருகிறது. இலட்சக் கணக்கான மக்கள் அலகபாத் நகரிலே அச்சங்கமத்தில் நீராடி நிமலனை வழுத்துவர். அவன் காலத்திற்குப் பின்பு வட இந்தியாவிலே குழப்பமும் கலகமும் ஏற்பட்டன. அப்போது, இராஜ புத்திரர் கிளம்பி ஆங்காங்கே அரசுகளை ஏற்படுத்தினர்.

24. மலேக்கோயில் மாண்பு

வேத காலந்தொட்டு விழுப்பம் வாய்ந்தது காஞ்சிமா நகரம். அது சென்னேக்கு நாற்பது மைல் தூரத்தில் உள்ளது. பண்டை இந்தியாவின் புகழ்பெற்ற ஏழு நகரங்களுள் காஞ்சியும் ஒன்ருகும். மற்றவை அயோத்தி, அவந்தி, மதுரா, மாயா, காசி, துவாரகை என்பன.

காஞ்சியில் பல ஆலயங்களே இன்றும் பார்க்க லாம். சிவ காஞ்சி, விஷ்ணு காஞ்சி என இரண்டு பிரிவுகள் உண்டு.

ஆதிநாளிலே, காஞ்சிபுரத்தில் பற்பல மதப் பெரி யாரும் வந்து, வாதித்துத் தம் தம் சமயக் கொள்கை களே நிலேநாட்டிச் சென்றனர். **சாத்தம், வைண வம், சைவம், பௌத்தம், காபாலிகம், ஜைனம்** முதலிய மதங்களுக்கு அந்நகரம் ஓர் உறைவிட மாயிற்று. இப்போது, அங்கே வரதன், ஏகாம்பரன், காமாட்சி இவர்களுடைய ஆலயங்கள் விளங்கு கின்றன.

பல்லவ வேந்தர் என்போர் ஐந்நூறு வருட காலம் அந்நகரத்திலிருந்து ஆண்மையுடன் ஆட்சி புரிந் தனர். அவ்வேந்தரில் மிகவும் கீர்த்தி வாய்ந்தவன் **மகேந்திரவர்மன்** ஆவான். மலேகளேக் குடைந்து, கோயில்கள் கட்டிய பெருமகன் அவன். அக்கோயில் கள் பார்ப்பதற்கு மிகவும் கம்பீரமாக இருக்கும்; மனி தர் கட்டியதா என்றும் தோன்றும்! அத்தகைய அழ கிய மலேக் கோயில்களே உலகிலே எங்கும் காண முடி யாது. திரிசிராப்பள்ளி, திருவெறும்பியூர் ஆகிய இடங்களில் மலேக்கோயில்கள் உள.

அவன் மைந்தன் பெயர் **நரசிம்மவர்மன்.** இவன் மல்போரில் மகா சமர்த்தன். ஆதலின் **மாமல்லன்** என்று புகழ் பெற்றான். அந்நாளில் பல்லவரின் பிரபலமான துறைமுகம் **மகாபலிபுரம்.** உலகின் பல பாகங்களிலிருந்தும் வர்த்தகக் கப்பல்கள் அங்கு வந்து தங்கும். இலண்டன் துறைமுகத்தைப் போன்றது அது என்பது மிகையாகாது. இன்றும் அதன் அடையாளங்கள் தென்படுகின்றன.

அதற்கு **ஏழுமலைக்கோயில்** என்றும் ஒரு பெயர் உண்டு. அங்கே மாமல்லனால் குடைந்து அமைக்கப் பெற்ற ஏழு கற்கோயில்களை எல்லாரும் பார்க்கலாம். அவை நம் கருத்தைக் கவரும் தன்மை வாய்ந்தவை. தமிழ் நூல்களிலே அந்நகரம் **கடல்மல்லை** என்று குறிக்கப்பட்டுள்ளது. அந்நகரிலிருந்து இலங்கை, பர்மா, ஸயாம், ஜாவா முதலிய இடங்களுக்கு மக்கள் ஏராளமாகப் போய் வந்தனர் ; அவ்விடங்களில் குடியும் புகுந்தனர்.

அக்காலத்திலே, **சாளுக்கியர்** என்னும் மரபினர் மேலைக் கடற்கரையோரமாக **வல்லபை** என்னும் நகரிலிருந்து ஆட்சி செலுத்தி வந்தனர். எவரும் அழிக்க முடியாதது என்ற காரணத்தால் அந்நகருக்கு வல்லபை என்னும் பெயர் வழங்கியது. நரசிம்மவர்மன் அதனையறிந்து, படைகொண்டு சென்று, அந்நகரை அழித்துச் சாளுக்கியரையும் வென்று திரும்பினான்.

பல்லவ வேந்தரில் மற்றொருவன் **நந்திவர்மன்** என்பவன். இவன் தமிழ் மூவேந்தரையும் ஒரு சமயம் போரில் வென்றவன் ; கும்பகோணத்துக்கு அருகே **நந்திபுரம்** என்னும் அழகிய நகரம் சமைத்தவன். இப்போது அதனை **நாதன் கோயில்** என்பர். நமது

தமிழ் மொழியினிடத்து இவனுக்குப் பற்று அதிகம். அதற்காகத் தலையும் கொடுத்தான் இவன். இவன் மீது பாடப்பெற்ற நூல் **நந்திக் கலம்பகம்** என்பது. இது சொற்சுவை பொருட்சுவை மிக்கது.

பல்லவ அரசரில் பலரும் கவிஞர் ; கலை ரஸிகரும் ஆவர். பெயர் பெற்ற **பில்கணன், பாரவி** முதலிய கவிஞர் அக்கொற்றவரின் காலத்தில் விளங்கினர். அவர்களில் சிலர் ஜைனர், சிலர் சைவர், சிலர் வைணவர். வடமொழியும் தென்மொழியும் அவர்கள் காலத்திலே ஓங்கி உயர்ந்தன. அவர்கள் முயற்சியால் அவ்விரு மொழிகளும் இணைந்து வளர்ந்தன. வட மொழி நூல்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப் பெற்று வெளிவந்தன.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் அவ்வேந்தரால் போற்றப்பட்டு வந்தனர். **சிறுத்தொண்ட நாயனர்** என்பவர் பல்லவரிடம் சேனைத் தலைவராக இருந்தவர். **திருமங்கையாழ்வார்** நந்திவர்மனைப் புகழ்ந்து பாடியிருக்கிறர். தென்னட்டிலே, ஜைன மதம் பரவத் தொடங்கியபொழுது, சைவ மதம் சீர் திருத்தங் கொண்டு சிறந்தோங்கியது. வைணவமும் அப்படியே. சைவ, வைணவ பக்தி நூல்கள் பல எழுந்து மக்களைப் பரவசப்படுத்தின. வேத மார்க்கம் தமிழகத்திலே மறுமலர்ச்சி கொண்டது.

25. சோழர் சிறப்பு

தமிழ்மொழி வழங்கும் நாடு தமிழகம் எனப்படும். தமிழகத்தின் வடக்கெல்லை திருவேங்கடமலை. தெற்கெல்லை குமரிமுனை. பண்டைக் காலந்தொட்டு, நம் தமிழகம் மூன்று பிரிவாக இருந்தது. அவை சேர, சோழ, பாண்டிய நாடுகளாகும். மகாபாரத யுத்தம் நடந்தபொழுது, சேரலாதன் என்பான் பாண்டவ, கௌரவ சேனைகள் இரண்டினுக்கும் அப்போர் நடந்த பதினெட்டு நாளும் அன்னமிட்டு வந்தான்.

பாண்டிய மன்னனது மகளான அல்லிராணியை அர்ச்சுனன் மணந்து கொண்டான். கரிகால் சோழன் என்பான் இமயமலையின் உச்சியிலே தனது புலிக்கொடியை நாட்டினான் என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. இவ்விதம், தமிழ் வேந்தர் பல்லாண்டு பல்லாண்டாகப் புகழுடன் விளங்கினர்.

சோழர் என்னும் பட்டப்பெயருள்ள அரசர் ஆண்டுவந்த நாட்டினுக்குச் சோழநாடு என்று பெயர் வந்தது. தஞ்சை, திருச்சி ஜில்லாக்கள் கொண்டது சோழ நாடாகும். பழைய காலத்துச் சோழரில் மிகவும் கீர்த்திவாய்ந்தவன் கரிகால் சோழன் ஆவான். இவன் காவேரி நதிக்கு இருபக்கத்திலும் கரை எழுப்பினான் ; அணைக்கட்டும் அமைத்து, ஆற்று நீரைப் பல கால்வாய்களில் பிரித்து விட்டான். இவனைப் பின்பற்றியே ஆங்கில அரசும் அந்நதிக்கு அணைக் கட்டுக்கள் கட்டிவைத்தது.

அக்கரிகாலன் இளமையிலேயே பட்டம் பெற்றவன். அவனிடம் வழக்கொன்று விசாரணைக்கு வந்தது. ‘ இந்த இளைஞன் நமது வழக்கைத் தீர்க்க முடியும் ?’ என்று கட்சிக்காரர் தயங்கினர். உடனே

அவன் எழுந்து போய்விட்டான். பிறகு, ஒரு முதியவர் வந்து, வழக்கை விசாரித்து, நியாயம் வழங்கினுர். முடிவில், கரிகாலனே கிழவனுக வேடந்தரித்து வந்தான் என்று கண்டு அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர்.

முன்னுளில் சோழரின் தலைநகரமாக இருந்தது **காவிரிப்பூம் பட்டினம்.** அது ஒரு பெரிய துறைமுகம்; இலண்டன்மாநகரையும் தோற்கடிக்கும் தன்மையுடையது. அங்கே, வர்த்தகம் கருதி உரோமரும் கிரேக்கரும் வசித்து வந்தனர். அன்றியும், சோழ அரசரிடம் போர்ச்சேவகமும் செய்தனர். அந்நகரம் கடலில் மூழ்கிவிட்டது. இப்போது அந்த இடத்தில் ஒரு சிறிய கிராமமே இருக்கிறது. பின்பு, திருச்சிக்கு அடுத்த **உறையூரே** சோழரின் தலைநகராயிற்று.

மற்றொரு சோழ வேந்தன் **பராந்தகன்** எனப்படுவான். இவன் ஆண்மையும் திண்மையும் வாய்ந்தவன்; பெருஞ்சேனையும் உடையவன். அதனுல், ஒரு சமயம் பாண்டிய நாட்டையும் இலங்கைத் தீவையும் வென்று ஆண்டு வந்தான். **சிதம்பரத்திலே** நடராஜ ஆலயம் உள்ளது. அந்த ஆலய விமானம் பொன்மயமானது. இவனே அதற்குப் பொன்தகடு வேய்ந்து அரிய திருப்பணி புரிந்தவன். இவன் சிவநேசச் செல்வனுகவும் இருந்தான்.

இன்னொருவன் **இராஜராஜன்.** தஞ்சாவூரிலுள்ள **பிருகதீசுவரர்** ஆலயத்தைக் கட்டியவன் இவனே. அந்த ஆலய அமைப்பு அதிஅற்புதமானது; அழகிய சிற்ப வேலைப்பாடும் வாய்ந்தது. அங்குள்ள மிகப் பெரிய நந்தி ஒரே கல்லால் ஆனது. எட்ட நின்று பார்த்தால், உயிருள்ள நந்தியே என்று

தோன்றும். இவன் கப்பல்படை கொண்டு **கடாரம்** எனப்படும் சுமத்ரா சேர்ந்து, அங்கிருந்த அரசனை வென்று அரும்புகழ் கொண்டவன்.

இவன் மைந்தனான **இராஜேந்திரன்** என்பவன் வடக்கே கங்கை நதிவரையில் வீரக்கொடி தூக்கியவன்; அதனால் **கங்கை கொண்ட சோழன்** என்னும் பெயர் பெற்றான்; தவிர, **கங்கை கொண்ட சோழபுரம்** என்னும் நகரொன்றமைத்து, அதனைத் தனது தலைநகராகக் கொண்டான். அப்போது, அந்நகரம் கும்பகோணம் வரையில் நீண்டிருந்தது.

கொள்ளிடத்தின் நீரனைத்தும் வீணே கடலில் போவதை யறிந்து, சிதம்பரத்திற்கு அருகிலிருந்து கொள்ளிடத்தில் ஒரு கால்வாய் வெட்டி, எழுபது மைல் தூரம் அவ்வெள்ளநீரைக் கொண்டுபோய், அரியிலூருக்கருகிலுள்ள ஒரு பெரிய ஏரியில் தேக்கி வைத்தவன் இராஜேந்திரனேயாவான். அது, ஒரு குட்டிக் கடல்போலிருந்தது. இந்நாளிலும் அந்த ஏரியின் அடையாளத்தை அங்கே காணலாம்.

சங்கநூல்களிலும் சோழரின் பெருமை கூறும் பாடல்கள் காணப்படுகின்றன. **ஒட்டக்கூத்தர்**, **கம்பர்** முதலிய கவியரசர் சோழரின் சபையில் இருந்தவர்கள். அவ்வேந்தர் தமிழை வளர்த்து வந்தோர் ஆவர்.

26. பாண்டியர் பெருமை

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் அடங்கியது பாண்டிய நாடாகும். குமரிமுனை அந்நாட்டின் தென்கோடியில் உள்ளது. அன்றியும், பார்வதி தேவியே **தடாதகைப் பிராட்டியார்** எனப் பெயர் பூண்டு, ஒரு பாண்டியன் மகளாகப் பிறந்து, மதுரையை ஆண்டு வந்தாள். அதுபற்றி, அந்நாடு **கன்னிநாடு** எனப்படும்.

தமிழ்ச்சங்கம் அம்மதுரை நகரில்தான் இருந்து வந்தது. பாண்டிய அரசரே அச்சங்கத்தை அமைத்து வளர்த்து வந்தனர். முதல் சங்கத்திலும், இடைச் சங்கத்திலும் எத்தனையோ புலவர்கள் இருந்தனர். **அகத்திய** முனிவரும் அவர்களில் ஒருவராவார். அவரே தமிழுக்கு முதலாசிரியர். அவர் தவம் இயற்றிய இடம் **பொதியமலை** அல்லது மலையமலை எனப்படும். மலையமாருதம் அல்லது இளந்தென்றல் என்பது அங்கிருந்தே உதித்துப் பரவும்.

இப்போது, தமிழிலுள்ள பழைய நூல் **தொல்காப்பியம்** எனப்படும். அதனை இயற்றியவர் **தொல்காப்பியர்** என்பவர். அவர் அகத்திய முனிவரின் சீடருள் ஒருவர். மதுரை நகரிலே, பொற்றாமரைக் குளம் உள்ளது. அதன் கரையில்தான் சங்கப்புலவர் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்து வந்தனர். சிவபெருமான் அவர்களுக்கு ஒரு பலகை ஈந்தார். அது **சங்கப்பலகை** எனப்படும். புலவர் பலரும் அப்பலகையில் அமருவர். மெய்யான புலவருக்கே அது இடந்தரும். மற்றையோர் அதில் அமர முடியாது.

பாண்டியநாட்டை அடுத்த கடலில்தான் ஆதி முதல் முத்தும் பவழமும் வாரி எடுத்தனர். அது பற்றி மேனுட்டினர் பலர் அங்குவந்து போயினர். சங்கில் சிறந்த வலம்புரிச் சங்கும் அக்கடலில்தான் கிடைக்கும். முன்னுளில் முத்துமாலே, பவளமாலே, சங்கு வளேயல் இவை மிகவும் பெயர் பெற்ற அணி களாக இருந்தன. மேனுட்டினரும் அவற்றை மிக விரும்பி அணிந்து வந்தனர். அதனுலும் அந்நாடு உலகப் பிரசித்தி அடைந்தது.

மதுரைநகரில் எழுந்தருளியுள்ள **சோமசுந்தரக் கடவுள்** 64 திருவிளேயாடல்கள் புரிந்தார். அந்த விவரம் அடங்கிய நூல் 'திருவிளேயாடற் புராணம்' எனப்படும். மதுரைக் கோயிலிலே ஆயிரக்கால் மண்டபத்தின் முகப்பில் சிற்ப வேலேயின் சிகரமான உருவங்களேப் பார்க்கலாம். அங்கே காணப்படும் சிலேகளுக்கு உயிர் ஒன்று இல்லேயே தவிர, மற்ற அம்சங்களில் உண்மை வடிவங்களாகவே அவை தோன்றும். அச்சிற்ப நேர்த்தியை நோக்க இரு கண்கள் போதா.

கண்ணகிதேவி, தனது கணவன் கோவலனுக் காக வாதாடிய இடம் மதுரைதான். தவறு செய்து விட்ட பாண்டியன் நெடுஞ்செழியன் "நானே அரசன் நானே கள்வன்" என்று கூறி அக்கணமே அரியணேயில் ஆவி விடுத்தான். அத்தகைய நீதி யரசர் நிலவிய தலம் மதுரையே. தவறுதலாக ஒரு வீட்டின் கதவை இரவில் தட்டிய குற்றத்திற்காக ஓர் அரசன் தனது கையைக் குறைத்துக் கொண்டான். அவன் **பொற்கைப் பாண்டியன்** எனப்படுவான்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் எழுந்த நூல்கள் எண்ணில. இப்போது கிடைப்பவை, **நற்றிணே,**

குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு முதலியனவாம். அவை தவிர, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் பதினெட்டு சிறுநூல்களும் உண்டு.

சில நூற்றுண்டுகளுக்கு முன் நாயக்க மன்னவர் அங்கே ஆட்சி செலுத்தினர். அவர்களில் திருமலை நாயக்கர் என்பவர் கட்டிய மகாலும் மண்டபமும் அற்புதமானவை. அவர் கட்டுவித்த புது மண்டபம் என்பதோ சிற்ப நூல் வல்லாரும் வியக்கத்தக்க வேலைப்பாடுடையது.

27. சேரர் கீர்த்தி

தற்போதுள்ள திருவாங்கூர், கொச்சி இரண்டும் அடங்கியது சேரநாடு. முன்னுளில் திரிசிராப்பள்ளி யின் ஒரு பகுதி, கோவை, சேலம், மைசூரின் ஒரு பகுதி ஆகியவையும் சேரநாட்டில் அடங்கி இருந்தன. சேரநாடு **கேரளம்** என்றும் சொல்லப் படும். **பரசுராம க்ஷேத்திரம்** என்றும் அதனை அழைப்பர்.

சோழ, பாண்டிநாடுகளின் அரசவமிசம் அற்றுப் போனுலும், சேர மன்னர் மரபு இன்றும் நிலைத் துள்ளது. சேரநாடு மலையும் காடும் அடர்ந்த பூமி. அங்கே மழை மிக அதிகம். மலைவளமும் வனவள மும் எங்கும் நிறைந்திருக்கும். அந்நாட்டிலே யானை கள் மிகுதி. தேக்கும் தேனும் நிரம்பக் கிடைக்கும். யானைத் தந்தத்தால் ஆகிய நேர்த்தியான சிற்ப உருவங்களுக்கு இந்நாடு பெயர் பெற்றுள்ளது.

ஆயுர் வேத வைத்தியத்தில் வல்லவர்கள் இந் நாட்டில் அதிகமாக இருக்கிருர்கள். அங்குள்ளாரில் பலரும் வடமொழியில் நன்கு பயின்றவர்கள். அவர்கள் பேசும் மொழி **மலையாளம்** எனப்படும். கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகள் தமிழின் வழிவந்தவை. கேரளவாசிகள் நாள்தோறும் இரு முறை நீராடுவர்; எளிய, ஆனுல் தூயவாழ்க்கை யினர்.

அந்நாட்டின் பழமையான தலைநகரம் **வஞ்சி** அல்லது திருவஞ்சைக்களம் எனப்படும். **முசிரி** என் பது பண்டைய சேரநாட்டுத் துறைமுகம். உலகின்

பற்பல தேசத்தினரும் முற்காலத்தில் இத்துறைமுகம் வந்து வர்த்தகம் நடத்தினர். அந்நாளில் அதனை அகில உலக நகரம் என்றே அழைத்து வந்தனர். ஆதி நாள் தொட்டு ஏலம், கிராம்பு, மிளகு முதலிய வாசனைத் திரவியங்களுக்கு அது தாயகமாக விளங்கி வருகிறது.

அந்நாட்டரசர் மிக்க தெய்வ பக்தியுடையவர் ; மகா புண்ணிய சீலர்கள் ; தானதருமங்களில் சிறந்தவர்கள். **உதியன்சேரன்** என்னும் அரசன் அறிவு ஆற்றல், வாய்மை இவற்றில் இணையற்று விளங்கினன். அவன் ஓர் அறச்சாலை அமைத்திருந்தான். அறுபது நாழிகையும் அதில் மக்களுக்கு அறுசுவை உண்டி அளிக்கப்பட்டு வந்தது.

எப்பொழுதும் சமையல் நடந்துவந்ததனல், அந்த அறச்சாலையிலே பேரோசை கிளம்பிய வண்ணமாயிருந்தது. அந்த ஓசை மலைவீழ் அருவியின் முழக்கத்தை நிகர்க்கும் என்று புலவரொருவர் புகழ்ந்து பேசியுள்ளார். அந்தச் சேரனது புதல்வனே **சேரலாதன்** எனப்படுவான். இவனே பாரதப் போர் பதினெட்டு நாளிலும் பாண்டவ கௌரவ சேனைகளுக்கு அன்னமளித்து வந்தவன்.

இவ்விரு வேந்தரையும் பின்பற்றியே, சமீப காலம் வரையில் திருவாங்கூரிலே **ஊட்டுப்பிறை** என்னும் அன்னதான சாலை இருந்துவந்தது. வேத மார்க்கத்தில் கூறப்பட்டுள்ள ஜபதபம், தானதர்மம், பூஜை நிவேதனம் என்னும் கிரமங்கள் அந்நாட்டில் இப்போதும் பலரிடையே காணப்படுகின்றன.

பதிற்றுப் பத்து என்னும் பழைய நூலில் சேரவரசரின் வரலாறும் சிறப்பியல்களும் கூறப்பட்டுள்ளன. தந்தையின் நலங் கருதியே **பீஷ்மர்**

O-bx N51

என்பார் ஆயுள் அளவும் மணஞ்செய்து கொள்ளா திருந்தார். சேரநாட்டின் இளவரசர் ஒருவர் தம் தமைய னது மனக்கோளை மதித்த அக்கணமே இளவயதில் துறவறம் பூண்டார். அவரே **இளங்கோ அடிகள்** ஆவார். அவ்வரலாற்றை இங்குச் சுருக்கமாகக் கூறுவோம்.

சேரலாதன் என்னும் சேரவேந்தன் ஒருநாள் அரியணையில் வீற்றிருந்தான். அவன் பக்கத்தில் மைந்தர் இருவரும் வீற்றிருந்தனர். மூத்தவன் பெயர் **செங்குட்டுவன்**; இளையவன் பெயர் **இளங்கோ**. அச்சமயம் அங்கு வந்த நிமித்திகன் அவ்விருவரின் இளையவனை நோக்கி, " இவனுக்கே அரச இலக்கணங்கள் நிரம்பியுள. இவனுக்கே அரசு கிட்டும் " என்றனன்.

முறைப்படி மூத்தவனுக்கே அரசுரிமை கிடைத் தல் வேண்டும். ஆதலின், செங்குட்டுவன் முகம் சிறிது மாறுபட்டது. அதனைக் குறிப்பால் அறிந்த இளையவன் அக்கணமே எழுந்து, " இப்போதே நான் துறவு பூண்பேன் " என்று கூறிக் காவியுடை அணிந்தான். தம்பிக்காக அன்று **இராமபிரான்** அரசு துறந்தான் என்றால், பின்பு அண்ணனுக்காக இளங்கோ துறவு பூண்டார்.

அவ்விதம் இராமனினும் மேம்பட்ட மைந்தன் நம் தமிழகத்தே தோன்றினன். கோவலன் கண்ணகி கதையை ஒரு காவியமாகத் தமிழில் இயற்றித் தந்த வர் இளங்கோ அடிகளே யாவார். அது **சிலப்பதி காரம்** எனப்படும். தமிழிலுள்ள ஐம்பெருங்காவியங் களில் அது ஒன்றாகும். சரித்திர நிகழ்ச்சிகளும் அந் நூலில் உள்ளன. சொற் சுவையும் பொருட்சுவையும் மிகுந்துள்ளது பற்றியே அது " நெஞ்சையள்ளும்

120718

சிலப்பதிகாரம்'' என்று பாரதியாரால் போற்றப்பட்டுள்ளது.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் சேரமான்பெருமாள் நாயனுர். இவர் சேரவேந்தரில் ஒருவர். ஆழ்வார்களில் ஒருவரான குலசேகர ஆழ்வாரும் கேரள வேந்தரில் ஒருவராக இருந்தவர். அவ்விதம் பக்தி மணம் நிரம்பியது சேரர் பரம்பரை.

தமிழ் வேந்தர் கட்டிவைத்த ஆலயங்கள் எண்ணிறந்தவை. ஒவ்வொன்றிலும் சிற்ப நேர்த்தியை நாம் காணலாம். தமிழகமெங்கும் சிவாலயங்கள் நிரம்பியதற்கு அம்மூவேந்தருமே காரணமாவர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழகமெங்கும் கிராம சபைகள் மேன்மையாக நடந்துவந்தன.

28. முகம்மதியரின் பெருமிதம்

பாரதபூமிக்கு மேற்கே அரேபியா என்று ஒரு நாடு உண்டு. ஆரும் நூற்ருண்டின் கடைசியிலே, தீர்க்கதரிசி ஒருவர் அங்கே தோன்றினுர். அவர் **இஸ்லாம்** என்னும் ஒரு புதிய மதத்தைத் தோற்று வித்தார். 'இஸ்லாம்' என்பது 'சாந்தி' என்று பொருள்படும். முகம்மது என்பவர் தோற்றுவித்ததால் முகம்மதியமதம் என்றும் சொல்லப்படும். "கடவுள் ஒருவரே. அவர் அல்லா எனப்படுவார். அவருக்கு உருவம் கிடையாது. எனவே, விக்கிரகம் வைத்து வணங்குதல் தவறு. அவருக்கு எல்லோரும் சமம். ஜாதிபேதம் கிடையாது." இவையே அம்மதக்கொள் கைகளினுடைய சாரம். அவரது உபதேசமெல்லாம் ஒரு நூலாக உள்ளது. அது **குர்ஆன்** எனப்படும். அதுவே இஸ்லாமியரின் அல்லது முகம்மதியரின் வேதம். அரேபியா எங்கும் அம்மதம் பரவியது.

புதிய மதத்தில் மோகம்கொண்ட அரபியர், அய லகமான, **ஸிரியா, துருக்கி, பாரஸீகம்** ஆகிய நாடு களில் அதனைப் பரவச்செய்தனர். அங்கே ஒரு பெரிய அரசையும் ஏற்படுத்தினர். பின்பு, மேற்கு நோக்கிச் சென்று, ஐரோப்பாவிலே **ஸ்பெயின்** தேசம் வரையில் பரவினர்; பின்பு, கிழக்கு நோக்கியும் அவர்கள் வந்தார்கள்.

அரேபியாவிலே அவர்களின் பேரரசு சிதறிய பின்னர் பத்தாம் நூற்ருண்டின் கடைசியிலே, சிறிய சிறிய அரசுகள் அங்கே முளைத்தன. அவற்றுள் ஒன்று **கஜினி** அரசு. அதன் தலைவரான **முகம்மது கஜினி** என்பவர் பாரதபூமியின் செல்வச் சிறப்பைக்

காண வந்தார். வந்தவர் கொள்ளைகொள்ளக் கருதிப் பதினேழு முறை இந்தியாவின்மீது படையெடுத்தார்.

அக்காலத்தில், பஞ்சநதிப் பிரதேசத்தில் ஆண்டு வந்த அரசரான **ஜெயபாலன்** என்பவர் அவரை மறித்து நிறுத்திப் புறங்கண்டார். ஹர்ஷரது காலத்திற்குப்பின் வடஇந்தியாவில் கிளம்பிய வீர இராஜபுத்திர வேந்தரில் ஜெயபாலன் ஒருவர். இவரது ஆண்மையும் தேசபக்தியும் கண்டு, மாதரும் போரிலே துணை நின்றனர்.

இவரது மைந்தரான **அநங்கபாலன்** என்பவரும் அக்கஜினி முகம்மதை எதிர்த்து அருஞ்சமர் செய்தார். தந்தையும் மகனும் வீரசுவர்க்கம் புகுந்த பின்பே, முகம்மது இப்பூமிக்குள் புகமுடிந்தது. விக்கிரக ஆராதனை இஸ்லாம் மதத்திற்கு விலக்காதலின், அக் கஜினி முகம்மது இந்தியாவிலே கொள்ளை கொண்டதுடன், பற்பல ஆலயங்களையும் அழித்தார். ஆனாலும், ஒவ்வொரு தடவையிலும் அவர் நல்ல அடி வாங்கிக் கொண்டே திரும்பினர்.

அவர் தாக்கிய ஆலயங்களில், கூர்ஜரத்திலிருந்த **சோமநாத** ஆலயம் மிகவும் முக்கியமானது. அதில் பொன்னும் மணியும் குவிந்து கிடந்தன. அதன் தட்டுமுட்டுச் சாமான்களும் தங்கத்தால் ஆனவை. விக்கிரகத்தின் சிரத்திலிருந்த இரத்தினம் சூரியப் பிரகாசம் வாய்ந்தது. அந்நாட்டரசரும் வீரரும் முகம்மதை எதிர்த்து நின்று பொருதும் ஆற்ருது போயினர்.

அதன்மேல், முகம்மது அந்த ஆலயத்தினுள் புகுந்தார். அப்போது ஆண், பெண், குழந்தை அடங்கலாக நகரமக்கள் அனைவரும் அக்கோவிலைக் காத்து நின்றனர். கையில் ஆயுதம் இல்லாவிடினும்,

பக்தி மேலீட்டால், அவர்கள் துணிந்து நிற்பதைக் கண்டு அவர் வியப்படைந்தார்; ஆயினும், அனை வரையும் கொன்று, விக்கிரகத்தை உடைத்து, அங் கிருந்த பொருள்களை எல்லாம் வாரிக்கொண்டு, ஆல யத்தையும் அழித்துச் சென்றார்.

பதினோராம் நூற்றாண்டின் துவக்கத்திலே அழி வுண்ட அந்த ஆலயத்தை இந்த இருபதாம் நூற்றாண் டிலே, **சர்தார்படேலின்** முயற்சியால் புதுப்பித்து வருகின்றனர். இந்தியாவின் ஜனாதிபதியான **பாபு இராஜேந்திரப் பிரசாத்** அதற்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். விரைவில் அந்த ஆலயம் முன்போல் வானளாவி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவிலுள்ள கட்டிடங்களின் நேர்த்தியை யும் சிற்பவேலையின் சிறப்பையும் கண்டறிந்த அம் முகம்மது ஏராளமான சிற்பியரையும் இங்கிருந்து சிறைசெய்து சென்று, அங்கே கஜினியில் தமது மாளிகைகளைப் புதுக்கினார்; நகரையும் அலங்காரமாக அமைத்தார். இங்கிருந்த நாகரிகப் பண்பையும் அவர் கொள்ளைகொண்டார் என்றே கூறவேண்டும்.

அப்பால், பன்னிரண்டாம் நூற்றாண்டின் கடைசி யிலே, **கோரிமுகம்மது** என்பவர் ஒரு பெரும் படை யுடன் இந்தியாவின்மீது வந்தார். அச்சமயம் இராஜ புத்திர அரசரில் சிறந்தவரும், டில்லியிலே ஹிந்து சக்ர வர்த்தியாக இருந்தவருமான பெருவீரர் **பிருதிவி மன்னர்** ஆவார். அவர் கோரிமுகம்மதைப் படை முகத்திலே பன்முறை தோற்கடித்தார். அவர் அந்த அவமானம் தாங்காமல், தமது தளகர்த்தரின் தலை களில் கொள்ளுப் பைகளைத் தொங்கவிட்டு மிருகங் களைப்போல் இழிவுபடுத்தினார்.

ஏழுமுறை அவ்விதம் தோற்றோடிய அக்கோரி

முகம்மது மறுபடியும் படையுடன் டில்லிமீது பாய்ந்தார். பிருதிவியும் போர்க்கோலம் பூண்டு பெருஞ் சமர் விளைத்தார். வெற்றிபெறும் சமயத்தில் துரோகம் விளைந்தது. அத்துடன் கன்னோசி நாட்டரசனுன ஜெயசந்திரன் என்பாரும் அப்பகைவனுக்கு உடந்தையானுர். அதனுல் பிருதிவிராஜன் போர்க்களத்தே மாண்டு மடிய நேர்ந்தது.

வெற்றிபெற்ற அம்முகம்மது, டில்லிமா நகரிலே தமது அடிமைகளில் ஒருவரான **குத்புதீன்** என்பவரை அரசராக்கி ஊருக்குத் திரும்பினுர். அது காரணமாக, 1206 ஆம் ஆண்டில் இந்தியாவில் முதன் முதல் முகம்மதிய அரசு முளைக்கலாயிற்று. ஒருவர் பின் ஒருவராகப் பலர் அரசாளத் தொடங்கினர். ஆயினும், இராஜபுத்திரர்களுடன் அவர்கள் ஓயாமல் ஒழியாமல் சண்டையிட்டு வரநேர்ந்தது.

29. விஜயநகர வல்லரசு

அவ்விதம் டில்லியிலே முளைத்த முகம்மதிய அரசு இங்கே முந்நூறு வருடகாலம் மொய்ம்பு காட்டியது; தேசமக்களில் பலரை மதமாறவும் செய்தது; மதம் மாற மறுத்த ஹிந்து மக்களுக்கு ஆள்வரி அல்லது தலைவரி விதித்தது. ஏழை மக்களில் சிலர் மதம் மாற ஒப்பினரேனும், பெரும்பாலோர் ஆள்வரி செலுத்தி ஆண்மையுடன் நின்றனர்.

அம் முகம்மதிய அரசரில் ஒருவர் **பால்பன்** என்பவர். நாட்டு மக்களும் முகம்மதியரும் மன ஒருமையுடன் வாழவேண்டுமென அவர் பெரிதும் விரும்பினர்; நேர்மையாகவும் ஆட்சி நடத்தினர். ஆனாலும் அவருக்குப்பின் வந்த அரசர் நேர்மை தவறியதனால், இராஜபுத்திர வேந்தரும் வீரரும் அந்த அந்நிய அரசரை எதிர்த்துப் போர் புரிந்தேவந்தனர். **அலாவுதீன் கில்ஜி** என்பார் சித்தூர்நாட்டு அரசரது மனைவியான **பத்மினி**யின்மீது மோகங்கொண்டு சித்தூரை அழித்து ஒழிக்க முயன்றும் முடியவில்லை.

அத்தகைய போரின் நடுவே, இரஜபுத்திரமாதர் தீக்குளித்துத் தமது மானத்தைக் காத்துக்கொண்டனர். ஆடவரோ உயிர்போகும் வரையில் போர் புரிந்து வீரசுவர்க்கம் புகுந்தனர். இதனை, அலாவுதீன் கண்டு பிரமித்தார்; முடிவில் பாரத பூமியைச் சொந்த நாடெனவே கொள்ளவேண்டுமென்று கருதினர். முகம்மதியரிலே பலர் இத்தேசத்தின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி நடக்க முயன்றனர்.

முகம்மதியர் இத்தேசத்தில் அரசு கொண்டிருப்பதை அறிந்ததும், வெளியிடங்களிலுள்ள இதர முகம்

மதியரில் பற்பல சாராரும் படை கொண்டு வந்து இங்கே அரசை நிலைநாட்ட ஆசைப்பட்டனர். ஆதலின், அம்முகமதிய மன்னவர் தமது சுய நலத்தைக் கருதி, தேசமக்களை அணைத்து ஆதரிக்கவே ஆவல் கொள்ள நேர்ந்தது.

பிரோஸ்ஷா என்னும் வேந்தர் கருணையும் சாந்தமும் வாய்ந்து ஆட்சி நடத்தி வந்தார். தேச மக்களுக்கு இவரும் தலைவரி போட்டாலும், மக்கள் சுகமே வாழப் பெரிதும் உதவினர்; வேளாண்மையை விருத்தி செய்தார்; அணைக்கட்டுக்கள் பல கட்டுவித்தார். கல்விமான்களையும் எளியவரையும் ஆதரித்தார்.

ஒரு சமயம் **தைமூர்** என்பவர் கொள்ளையடிப்பதில் கருத்து மிகுந்து, டில்லிமீது பாய்ந்து அரசைச் சீர்குலைத்தார். அவர் கண்டு களித்த கொலை விழா கூறுந்தரம் உடையதன்று. அந்நாளில் 'தைமூர்' என்ற பெயரைக் கேட்டாலே மக்களுக்கு நடுக்கம் உண்டாகுமாம்.

அதற்குச் சற்றுமுன் பின்னுக டில்லி அரசரின் தளகர்த்தரொருவர், தெற்கு நோக்கி வந்து, தக்காணத்திலே **பாமினி இராச்சியம்** என்னும் தனியரசு ஒன்றை ஸ்தாபித்தார். நாளடைவில், பீஜபூர், கோலகொண்டா, ஆமத்நகர், பீடார், பீரார் ஆகிய ஐந்து சிறு அரசுகளாக அது பிரிந்து போயிற்று. அதனால், முகம்மதியரின் ஆதிக்கம் தக்காணத்திலும் பரவத் தொடங்கிற்று.

அலாவுதீனின் தளகர்த்தரான **மாலிக்காபூர்** என்பவர் ஒரு பெருஞ் சேனையுடன் குமரிமுனை வரையில் சென்று, ஆங்காங்கிருந்த ஆலயங்களையும் நகரங்களையும் அழித்துக் கொள்ளையும் கொண்டார். அப்பொழுது, தென்னிந்தியாவையேனும் காக்கவேண்டு

மென்ற நோக்குடன் **துங்கபத்திரா** நதியின் கரையிலே இந்து அரசொன்று முளைத்தது.

இந்த அரசு நாடடைவில் பெருகி **விஜயநகர சாம்ராஜ்யம்** எனப் பெயர் கொண்டது. இந்த அரசின் பாதுகாப்பினுல், தென்னிந்தியா அமைதியுற்றது. தெய்வம், தேசம், தர்மம் இவை இடையூறின்றி விளங்கி வந்தன. மலிக்காபூரினுல் இடியுண்ட ஆலயங்கள் பலவும் பழுது பார்க்கப் பெற்றன. நமது புராதன நாகரிகமும் கலையும் தலைசிறந்தன.

விஜயநகர சாம்ராஜ்ய வேந்தரில் மிகவும் சிறந்தவர் **கிருஷ்ணதேவராயர்**. நீதியும் நேர்மையும் உடையவராக இவர் அரசாண்டார். இவரது பெருவீரமும் வலியுங்கண்டு, தக்காண முகம்மதிய அரசுகள் அஞ்சி அடங்கிக் கிடந்தன. கலை வல்லாரை இவர் பெரிதும் ஆதரித்தார். **போர்த்துகல், பாரசீகம்** ஆகிய நாடுகளுடன் இவர் அரசியல் தொடர்பு கொண்டிருந்தார்.

போர்த்துகல் தேசத்தூதர் இந்த சாம்ராஜ்யத்தின் அருமை பெருமைகளை விரிவாக எழுதி வைத்திருக்கிருர். பொன்னும் மணியும் கொழித்த நாடு என அவர் எழுதி வைத்துள்ளார்; மக்களனைவரும் மன மலர்ச்சியுடன் வாழ்ந்து வந்தாகவும் விளம்புகிருர். **ராயர்— அப்பாஜி** என்று எவ்வளவோ கதைகள் உண்டு. கிருஷ்ணதேவராயரையும் அவரது அமைச்சரான திம்மரசையும் பற்றியவைகளே அக்கதைகள். ஸ்ரீரங்கம், மதுரை ஆகிய இடங்களில் **இராயர் கோபுரம், இராயர் மண்டபம்** என்பவை அவ் விஜய நகர வேந்தரின் சிறப்பை இன்றும் குறிக்கின்றன. இது நிற்க,

தைமூர் வந்துபோன பின்பு, இரஜபுத்திரர் வீறு

கொண்டெழுந்து, டில்லியரசின் பெருமையைக் குலைத்து விட்டனர். பெயரளவில் டில்லியரசு இருந்து வந்ததெனவே சொல்லவேண்டும். முகம்மதிய மன்னவரின் கொடுமையைக் கண்டதும், குஸ்ரு என்னும் ஹிந்து ஒருவர் அம்மதத்தைத் தழுவி அன்னிய அரசை வேரறுக்க அருமுயற்சி செய்தார்.

முகம்மதிய அரசு சிதறவே, குட்டி முகம்மதிய அரசுகள் தோன்றின. இராஜபுத்திர ராஜ்யங்களும் எழுந்து பெருகின. அரசிலே அவ்விதமெல்லாம் புரட்சி நடந்து வந்தாலும், கிராம மக்களோ பஞ்சாயத்து சபைகளின் மூலம் கிராம நலத்தை வளர்த்து வாழ்ந்து வந்தனர். அரசுகள் தோன்றி மறையலாம். அரசரும் வாழ்ந்து மாயலாம். ஆனல் தேசத்தின் உயிர்நாடி போன்ற பஞ்சாயத்து சபைகள் பெருமிதத்துடன் விளங்கி வந்தன.

30. தர்மப் பண்பு

பாரத பூமியை மேய்ச்சல் நிலமாகக் கொள்ள லாம் என்று கருதி, முகம்மதியரிலே ஒரு பிரிவினரான **மொகலாயர்** கி. பி. 1526 ஆம் ஆண்டில் டில்லியில் அரசு எய்தினர். அவர்களில் முதல்வர் **பாபர்** என் பவர். ஆதிமுதல் அன்னியருடன் மல்லுக்கு நின்ற இராஜபுத்திரர் அப்போதும் ஆண்மையுடன் எழுந் தனர்.

மேவார் நாட்டு மன்னவனுன **சங்கர சிம்மன்** போர்க்கோலங் கொண்டு புறப்பட்டான். சிற்றரசர், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், மண்டலீகர் முதலிய நூற்றுக்கு மேற்பட்ட வேந்தர் அச்சங்கரனுக் குத் துணை போயினர். பாபர் முதலிலே தோற்றுப் போய், அச்சிம்மனுக்குப் கப்பங்கட்டி வாழவும் எண்ணினுர். சங்கரன் ஒப்பாது போகவே, மீண்டும் போர் மூண்டது. சங்கரன் முடிவான வெற்றிபெறும் சமயத்தில் துரோகம் விளைந்துவிட்டது. ஆதலின் பின் வாங்க நேர்ந்தது.

பகையரசனை வெற்றி கொள்ளாமல், தன் தலை நகரான **உதயபுரி**யில் புகுவதில்லையென அச்சங் சங்கரன் சபதம் செய்திருந்தான். ஆறு மாதமான தும், அவன் இறந்துபோக, அதன் பின்பே டில்லியி லிருந்து பாபர் கவலையின்றி ஆளமுடிந்தது. தேச மக்களைத் தட்டிக் கொடுத்தாலன்றி அரசு நிலைக்கா தெனவும் பாபருக்குப் புலப்பட்டது. ஆதலின், பாபர் நீதியிலேயே நாட்டம் வைத்தார்.

பாபர் ஐந்து வருஷம் அரசாண்ட பின், அவர் மைந்தனுன **ஹுமாயூன்** என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவரும் நேர்மையுடனேயே ஆண்டு வந்

தார். ஆயினும் அதிகாரிகளோ தேச மக்களான ஹிந்துக்களைத் துன்புறுத்தி வந்தனர். ஹிந்து—முகம்மதிய விரோதம் வளர்ந்தது. அப்போது **சீக்கிய மதம்** குருநானக் என்பவரால் தோற்றுவிக்கப் பட்டது.

"இந்த அரசு எத்தனை நாளைக்கு நிலைக்கும்," என்று அப்பெரியார் வருந்திக் கூறினர். வேதம் பொய்த்தாலும் பெரியாரின் வாக்கு ஒரு நாளும் பொய்க்காதன்றோ? ஆதலின், **ஷெர்ஷா** என்பவர் கிளம்பி, ஹுமாயூனைப் புறங்கண்டு வெருட்டி ஓட்டி டில்லியரசரானர்.

ஹுமாயூன் தமது மனைவியுடன் கால் நடையாகவே ஓட நேர்ந்தது. மனைவியோ பூரண கருப்பிணி. அந்நிலையில் அவரை ஆதரிக்க அனைவரும் அஞ்சினர். அதனல் அவரும் அவர் மனைவியுமாகக் கண்ணீர் விட்டுக் கதற நேர்ந்தது. அச்சமயம், **அமரகோட்டை** என்னும் நகரையாண்ட இராஜ புத்திர மன்னன் அவ்விருவருக்கும் அடைக்கலம் அளித்தான்.

ஆதலின், இருவரும் அந்நகரிலே தங்க, அங்கே ஓர் ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தையே பின்னுளில் **மகா அக்பர்** என்னும் பெயருடன் இத்தேசத்தை ஆள நேர்ந்தது. பின்பு, அவ்விருவரும் கைக் குழந்தையுடன் புறப்பட்டுச் சென்று பாரசீக தேசஞ் சேர்ந்து, அங்கே தஞ்சம் புகுந்தனர்.

டில்லியரசில் அமர்ந்த ஷெர்ஷா என்பவர் மிகமிக நேர்மையாக நாட்டை ஆண்டுவந்தார்; நிலங்களை யெல்லாம் அளந்து, தரவாரியாகப் பிரித்து, ஏற்ற தீர்வை விதித்தரர்; எங்கும் கால்வாய்கள் வெட்டி வைத்து, இராஜபாட்டைகளும் அமைத்து,

வழி நெடுகச் சாவடிகளும் ஏற்படுத்தினர் ; அஞ்சலிலே தபால்களைக் கொண்டுபோக ஏற்பாடுசெய்தார்.

இவருக்குப் பின்வந்த அரசர்கள் திறமைசாலிகளாக இல்லை. ஆதலின், ஹுமாயூன் அச்சமயம் பார்த்து வந்து, இங்கே மீண்டும் தம் அரசை நிலைநாட்டினர் ; அப்பெரியாரின் வாக்கையும், அமர கோட்டையில் கொண்ட அடைக்கலத்தையும் எண்ணியுணர்ந்து, இனிது நடக்கவே முற்பட்டார்.

ஷெர்ஷா என்பவர் விதித்திருந்த அரசிறை முறையையும் ஒழுங்கையும் தழுவியே, பின்னர்வந்த மொகலாய வேந்தரும் ஆளத்தலைப்பட்டனர்.

31. சமரஸ உருவம்

தன்னுடன் வந்துகலக்கும் நீருக்கும் தனது குணத்தையும், நிறத்தையும் அளிக்கவல்லது பால். அப்பாலின் தன்மையையுடையது பாரதபூமி. ஆதி நாளிலே, சாகர், பார்த்தியர், யவனர், ஹூணர் முதலியோரைத் தன்வயமாக்கிய பாரதபூமி முகம்மதியரின் மனத்தையும் கவரத்தொடங்கியது. முகம்மதியரிலும் மதியூகிகளான பலர் இப்பூமியின் பண்புகள் கண்டு, அவற்றில் ஈடுபட்டனர் ; பற்றும் வைத்தனர். போர்முனைகளிலே இரத்தவெள்ளம் கண்டு களித்த அலாவுதீன் கில்ஜியும் பாரதபூமியின் தத்துவஞானப் பெருக்கைக் கண்டு கூறியதாவது :

> "இப்பாரத பூமியிலே அளப்பரிய ஞானம் பொதிந்து கிடக்கின்றது. நன்கு ஆராய்ச்சி செய்தால், தத்துவ சாஸ்திரத்தின் எல்லாப் பகுதிகளும் இந்தியாவிலே காணக்கிடைக்கும். நமது இஸ்லாம் மதத்தில் இந்தியருக்கு நம்பிக்கை இல்லாதிருக்கலாம். ஆனால், அவர்களது கோட்பாடுகள் பலவும் நமது கோட்பாடுகளைப்போன்றனவே. தெய்வம் ஒன்றே என்பதை அவர்கள் நம்புகின்றனர். கல்லையும், மண்ணையும், பறவை விலங்குகளையும் அவர்கள் தொழுதாலும், எல்லாம் இறைவன் படைப்பு என்பதை ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஊன்றி அறிந்தால், பாமரருக்குத்தான் விக்கிரக ஆராதனை என்பது புலப்படும்."

முகம்மதிய மதப்பெரியாரும், வேதமார்க்க வல்லுநரும் அடிக்கடி கூடிக்கலந்து வாதம் நடத்திவரவே, ஒருவரையொருவர் அறிந்துகொள்ளுதலும், ஒருவரின் மத உயர்வை மற்றவர் மதித்துணர்வதும் எளிதாயின.

அக்பரின் ஆட்சிக்காலத்திலே அந்த உணர்ச்சி ஓர் உருக்கொள்ளலாயிற்று. கருவிலேயே அவருக்கு இத்தேச மக்களின்மீது பற்று உதித்ததென்னலாம். அவர் சிம்மாசனத்தில் அமர்ந்ததும், ஷெமு என்னும் இராஜபுத்திர வீரன் பெருங்கலகமாகக் கிளம்பி, மொகலாயவரசையே கவிழ்த்துவிட முயன்ருன். நாட்டுமக்களின் நல்லபிமானம் இன்றேல், அரசு வாழாது என்று அக்பர் உணர்ந்தார்.

ஆதலின் அக்பர் இராஜபுத்திர வேந்தர் அனைவரையும் அணைத்து ஆதரிக்கத் தொடங்கினர். ஹிந்து மக்களுக்கு அரசிலே உயர்பதவிகளெல்லாம் அளித்தார் ; இராஜபுத்திரமாதை மணந்துகொண்டு உறவாட முற்பட்டார் ; அம்மாதைக் காதல் மனைவியாகக் கொள்ளாமல், பட்டத்து இராணியாகவே கொண்டார்; அப்போது பாரசீக மொழியே அரசாங்க பாஷையாக இருந்தது. அவரது காலத்தில்தான் இராமாயணம், மகாபாரதம், அதர்வணவேதம், நளசரித்திரம், பகவத் கீதை, யோகவாசிஷ்டம், பஞ்ச தந்திரக் கதைகள் முதலியன பராசீக மொழியில் பெயர்த்து எழுதப் பெற்றன. அம்மொழி பெயர்ப்பு நூல்களைப் பார்த்த பலரும் பரத தேச வேதமார்க்கத்தின் மீதும் பண்பாட்டின்மீதும் ஈடுபாடு கொள்ளலாயினர்.

அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் அல்லவா ? முகம்மதிய மக்களும் தம் வேந்தரைப் பின்பற்றி நடக்கத் தலைப்பட்டனர். அவரது ஆட்சி மன்றத்திலே ஏறக்குறைய அறுபது வடமொழி வித்துவான்கள் வீற்றிருந்து விழுப்பம் எய்தினர். அவரது மைந்தரான ஜிஹாங்கிர் என்பாரும், பேரனுன ஷாஜஹான் என்பவரும் தமது ஆட்சிக் காலத்திலே வடமொழி வல்லுநரைப் பேணிவந்தனர்.

அக்பர் தினந்தோறும் சூரிய நமஸ்காரம் செய்து வந்தார்; ஹிந்துமத நூல்களை நாள்தோறும் படிக்கக் கேட்டுப் பரவசமுற்றார்; ஏனைய மதப்பெரியார்களை யும் வரவழைத்து, அந்தந்த மத உண்மைகளை ஊன்றி உணர்ந்து வந்தார். அதன் பலனாகவே சமரஸமான உலகமதம் ஒன்றுகாண அவர் முற்பட்டார். நீதி மன்றங்களில் நமது வேதசாஸ்திரங்களின் விதிக் கிணங்கவே தீர்ப்புக்கள் அளிக்கப்பட்டுவந்தன.

விக்கிரமார்க்கனது சபையில் இருந்ததுபோல் அக்பரது சபையிலும் ஒன்பது சிறந்த மேதாவிகள் இருந்துவந்தனர். அந்த ஒன்பதின்மரும் நவரத்தினங் கள் எனப்பட்டனர். புகழ்வாய்ந்த சக்கரவர்த்தி யாக இருந்தாலும், பக்கிரியைப்போலவே அதாவது துறவியைப்போலவே வாழ்ந்துவர அவர் விரும் பினார்.

அந்நாளிலே **பிரதாப சிம்மன்** என்னும் இராஜ புத்திர அரசர் உதயபுரி நாட்டை ஆண்டு வந்தார். ஆண்டவன் ஒருவனைத் தவிர வேறெவர்க்கும் தலை வணங்காத பெருவீரர் இவர். ஆதலின், அன்னிய அரசுக்குத் தலைவணங்கவோ, அதனுடன் நட்புரிமை கொள்ளவோ இவர் விரும்பவில்லை. அதனால் அக்பருக்கும் இவருக்கும் இருபத்தேழு வருஷம் போர் நடந்தது.

அதில் நாடு நகரம், வீடு வாசல் அனைத்தையும் இழந்தாலும், பிரதாபசிம்மன் கம்பீரமாகவே இருந் தார்; மானிடமன்னவனுக்கு முடிவணங்கேன் என்று சொல்லி நின்றார். அவரை மடக்க அக்பர் எத்துணையோ முயன்றும் இயலவில்லை. பிரதாப சிம்மனது மனநிலை கண்ட முகம்மதியர் பிரமிப்பும் உதைப்புங் கொண்டனர்; அதன் பயனாக நாட்டு

மக்களிடம் முன்னையிலும் அதிகமாக நல்லன்பு காட்டலாயினர்.

அக்பரின் கீர்த்தியும், பாரத பூமியின் நேர்த்தியும் இங்கிலாந்துக்கும் எட்டின. அப்போது இங்கிலாந்தை ஆண்டுவந்த எலிசபெத் இராணி மனங்களித்து, அக்பருக்கு நட்புரிமைக் கடிதமொன்று விடுத்துக் காணிக்கையும் அனுப்பினர்.

32. சிவாஜியின் எழுச்சி

அக்பர் சக்கரவர்த்திக்குப்பின் **ஜிஹாங்கீர், ஷாஜஹான்** ஆகிய இருவரும் அரசு செலுத்தினர். இருவரும் நாட்டு மக்களின் நல்லெண்ணத்தை நாடியே ஆண்டனர். பின்பு **ஒளரங்கசீப்** என்பவர் சக்கரவர்த்தி ஆனுர். இவர் மிக்க தெய்வ பக்தி யுள்ளவர் ; எளிய உடையும் வாழ்க்கையுமே கொண்டவர். தமது சொந்தச் செலவுக்காக இவர் அரசிறையைக் கையாண்டது கிடையாது.

ஆயினும், ஒளரங்கசீபினிடம் மத வைராக்கியம் ஊன்றியிருந்தது. முகம்மதிய மதமே சிறந்தது என்பது இவர் கொள்கை. எல்லாரும் அதனைத் தழுவ வேண்டும் என்பதும் இவரது பேரவா. அதனுல் ஹிந்துக்களுக்கு இவர் கடுமையான தலைவரி விதித்தார். விக்கிரக ஆராதனை கூடாதென்று ஆணை யிட்டார். இவர் காலத்திலே இந்தியா முழுவதும் இவரது ஆட்சிக்கு உட்பட்டது. ஹிந்துக்கள் சுகமாக வாழ முடியவில்லை.

இது இங்ஙனம் இருக்க, தக்காணத்திலிருந்த முகம்மதிய அரசுகள் ஒன்றுகூடி, விஜயநகர சாம்ராஜ்யத்தை அழித்துவிட்டன. அதனுலும், ஹிந்துக்கள் பெரிதும் வருந்தலாயினர். தக்காண முகம்மதிய அரசுகள் ஒருபுறமும், மொகலாய வல்லரசு ஒருபுறமும் ஓங்கி நிற்கும் வரையில், தெய்வம், தேசம், தர்மம் இவை தலைதூக்க முடியா என்று ஓர் இளமகன் அறிந்தான் ; அதற்குத் தக்க பரிகாரம் தேடவேண்டும் என்று பரபரப்புங் கொண்டான்.

அவ்வீர மைந்தன் பெயர் சிவாஜி. அவன் மகா ராஷ்டிர வகுப்பைச் சேர்ந்தவன். அவன் தந்தை **ஷாஜி** என்பார் தக்காண முகம்மதிய அரசிலே தள கர்த்தராக இருந்து வந்தார். குழந்தைப் பருவத்திலேயே இராமாயண, பாரதக் கதைகளைக் கேட்ட அம் மைந்த னுக்கு ஆண்மையும் திண்மையும் உதித்தன. வீரத் துடிப்பு நாள்தோறும் அவன் உள்ளத்தில் வளர்ந்து வந்தது.

வாலிப வயதிலே தேசத்தின் நிலையை அச் சிவாஜி உற்று நோக்கினர். மலைநாட்டு வாசிகளான **மாவலர்** என்போரைச் சேர்த்து, ஒரு படை திரட்டினர்; தக்காண முகம்மதிய அரசுகளைத் தாக்கிச் சிறிது சிறிதாக நாடு பிடித்து வந்தார். நாளடைவில், அவரது சேனையும் அரசும் பெருகி வந்தன.

உடனே அவர் ஔரங்கசீபுக்கு ஒரு கடிதம் வரைந்து விடுத்தார். "நீர் சக்கரவர்த்தியாக இருந்து என்ன பயன்? அல்லா என்னும் ஆண்டவன் முகம்மதியருக்கு மட்டுமா கடவுள்? எல்லா உயிர் களும் அவன் படைப்பு அல்லவா? இங்ஙனமிருக்க, உமது ஆட்சியில் ஹிந்துக்கள் நலிதல் அந்த ஆண்டவனுக்குச் சம்மதம் ஆகுமோ? எல்லோரும் உமது குடிகளன்றோ?" என்று அக்கடிதத்தில் குறிக்கப் பட்டிருந்தது.

அக்கடிதத்தை ஔரங்கசீப் மதிக்கவில்லை. ஆதலின் சிவாஜி தமது படைகொண்டு ஔரங்சீப் புக்குச் சொந்தமான நகரங்களை ஒன்றன்பின் ஒன்ருகத் தாக்கி வந்தார். அதுகேட்டு, ஔரங்கசீப் சினம் மிகுந்து, தமது சேனைத் தலைவர்களை ஒவ்வொரு வராக அனுப்பிப் பார்த்தும், அவரை வெல்ல முடிய வில்லை.

ஒரு சிறிய அரசரை ஒரு வல்லரசு ஜெயிக்க முடியவில்லையே என்று எல்லாரும் அதிசயித்தனர். ஔரங்கசீபுக்கு ஆத்திரம் மிகுந்தும், ஒன்றும் செய்ய முடியவில்லை. முடிவிலே, அவரை டில்லிக்கு வரவழைத்துச் சிறை செய்தார் ஔரங்கசீப். சிவாஜி அச்சிறையிலிருந்து மாயமாகத் தப்பித் தம் தலைநகருக்கு மீண்டார்.

மீண்டதும், சிவாஜி மறுபடியும் மொகலாயரின் நகரங்களைத் தாக்கிக் கைப்பற்றினர்; தமது அரசையும் படையையும் பெருக்கிக் கொண்டார். பம்பாய் மாகாணமெங்கும் அந்த அரசு பரவியது. அதற்கு மகாராஷ்டிர அரசு என்று பெயரிட்டு சிவாஜி முடிசூட்டிக் கொண்டார்; அறிவிற் சிறந்த அமைச்சரைக்கொண்டு அரசை நன்கு நடத்தி வந்தார்.

இந்தியா முழுவதும் ஹிந்து அரசை நிலைநாட்ட வேண்டுமென்பதே அவரது விருப்பம். அதன் பொருட்டு அவர் பெருமுயற்சி செய்து வந்தார். அவரது அரசில் முகம்மதியர் பலர் இருந்து வந்தனர். ஆனாலும், அவர்களிடம் அவர் வெறுப்புக் காட்டவில்லை; அவர்களை அன்பாகவே நடத்தி வந்தார்.

ஒருசமயம் **கல்யாண்** என்னும் கோட்டை சிவாஜியின் வசமாயிற்று. அதன் தலைவர் ஒரு முகம்மதியர். அத்தலைவரது மகள் அழகு மிக்க மங்கை. அவளைக் கொணர்ந்து சிவாஜியின் முன்னே நிறுத்தினன் ஒரு படைவீரன். சிவாஜி அவளைத் தமது சகோதரி எனவே மதித்து, அவளுக்கு ஆடை அணிகள் எல்லாம் அளித்து, தக்க பாதுகாப்புடன் அவளை அனுப்பிவிட்டார். இதனையறிந்த பொது மக்கள் அனைவரும் சிவாஜியின் ஒழுக்கத்தையும் உயர்வையும் கொண்டாடினர்.

ஒருசமயம் தெருவிலே பிக்ஷையேற்க வந்த **இராமதாஸ்** சுவாமிகளுக்குத் தமது அரசு முழுவதையும் அளித்து, அவரது பிரதிநிதியாகவே காவிக் கொடியுடன் நாட்டை ஆண்டு வந்தார் சிவாஜி. சுயநலம் கருதி அவர் அரசு கொள்ளவில்லை ; தருமத்தைக் காக்கவே அரசு கொண்டார்.

அவர் நிறுவிய மகாராஷ்டிர அரசு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது ; முடிவு வரையில் மொகலாய வல்லரசை வாட்டியும் நின்றது. டில்லியிலே சுயவரசை அம்மராட்டியர் அமைக்கும் தருணத்தில், ஆங்கிலேயர் வந்து குறுக்கிட்டனர். அந்த ஆங்கிலேயரையும், அம்மராட்டிய அரசு ஆட்டிவைத்தது.

33. மேனாட்டினரின் வருகை

சிவாஜியின் பெருமுயற்சியினால், மொகலாய வல்லரசு சின்ன பின்னமாகி விட்டது. ஔரங்க சீபுக்குப் பின் வந்த வேந்தர் எவரும் தகுதி வாய்ந்தோ ராக இல்லை. மஹாராஷ்டிரர் ஒருபுறமும், சீக்கியர் ஒருபுறமுமாகக் கிளம்பித் தனியரசுகள் ஏற் படுத்தினர்.

இதற்கு இடையிலே இத்தேசத்தின் வளமையைக் கேள்வியுற்று, மேனாட்டினரான ஐரோப்பியர் பலரும் வர்த்தகங் கருதி இங்கே வந்தனர். வந்தபோது இங்கிருந்த அரசருக்கு மண்டியிட்டு வணங்கியே நின்றனர். வீடேறி வந்தோரை விருந்தினராக மதித்தல் நம்மவரின் இயற்கை அன்றோ ?

ஆதலின், வர்த்தகம் புரிய அன்னோர்க்கு இங்கே வசதி கிடைத்தது. முதலில் **போர்த்துகீசியர்** இங்கே வந்து ஒரு நூறு வருடம் வாணிபத்தில் மிகுந்த பணஞ் சேர்த்தனர். தங்களது கிறிஸ்தவ மதத்தையும் இங்கே பரப்பினர்.

பின்னர் **டச்சுக்காரரர்** வந்து ஏராளமான திரவியம் குவித்தனர். அப்பால் **பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும்** வந்து, முதலில் வர்த்தகமே நடத்தினர். மொகலாய வல்லரசு குலைந்ததும், அதன் தளகர்த்தரும் தனித்தனி அரசு ஏற்படுத்திக்கொண்டு செருக்கி ஒருவரையொருவர் வெல்லப் பார்த்தனர்.

அச்சந்தடியில் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேய ரும் அந்த அரசுகளின் பக்கம் சேர்ந்து, பூனைகளின் அப்பத்தைக் குரங்கு பங்கிட்டதேபோல் நடந்து,

நாட்டைக் கைப்பற்ற முயன்றனர். முடிவில் பிரெஞ்சுக்காரருக்கு மூன்றே நகரங்கள் கிடைத்தன. ஆங்கிலேயருக்கோ தேசம் முழுவதும் கிட்டியது.

ஆங்கிலேயர் தேசத்தின் வளமையைச் சுரண்டிச் சென்றதுடன் தேசத் தொழில்களையும் அழித்து விட்டனர்; தங்களது ஏசு மதத்தைப் பரப்பவும் வெகு தந்திரமாக முயன்றனர்; ஆங்கிலப் படிப்பில் நமக்கு மோகம் ஊட்டி, நமது புராதனக் கல்வியை மறக்கப் பண்ணினர்.

இக்காரணங்களால் தேசமக்கள் கொதிப்புக் கொண்டு கிளம்பினர். கிளம்பவே 1857 ஆம் ஆண்டில் இங்கே **சுதந்திரப்போர்** மூண்டது. இமயம் முதல் குமரி வரையில் மக்கள் ஒரு முகமாக மண்டியெழுந்ததனுல், ஆதியில் ஏற்பட்ட ஆங்கில வர்த்தகரின் — அதாவது கும்பினியின் ஆட்சி கவிழ்ந்தது.

அதற்கு முன்னதாகவே நம் தமிழகத்தில் இரு பெரு வீரர் தோன்றினர். ஒருவர் திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்த **பாஞ்சாலங்குறிச்சியின்** வீர வேந்தரான **கட்டபொம்மு** எனப்படுவார். கும்பினி யாட்சியை இவர் எதிர்த்துப் பொருது இணையிலா வெற்றி பெற்ருர். முடிவிலே துரோகம் விளைய இவர் தூக்கிலே மாள நேர்ந்தது.

பாஞ்சாலங்குறிச்சி மண்வாசியே வீரம் விளைக்கு மாதலின், அக்கோட்டையை அடியோடு இடித்துத் தள்ளியும், நகரைச் சுட்டெரித்தும், நிலத்தைக் கழுதையைக் கட்டி உழுதும், எங்கும் ஆமணக்கை விதைத்தும் வஞ்சினம் தீர்த்துக் கொண்டனர் அக் கும்பினியார்.

மற்ருெரு வீரர் **வேலுத்தம்பி** எனப்படுவார்.

இவர் திருவாங்கூர் திவானுக இருந்தவர். ஆண்டவன் தலையிலும் கைவைக்க அக்கும்பினியார் முயன்றதனுல், இவர் பதறியெழுந்து, அந்நாட்டிலிருந்த ஆங்கிலேயரைக் கருவறுத்தார். கொச்சி திவானும் அதற்குத் துணைபுரிந்தார்.

முடிவிலே மக்களின் பக்கபலம் குன்றியதனுல், வேலுத்தம்பி ஆங்கிலேயரின் கைதனில் சிக்காமல், தாமே தமது உடைவாளால் தமது தலையைச் சீவிக் கொண்டார். செத்த பின்பும் அவர்கள் பகைமை காட்டி அக்கிரமம் புரிந்தனர். அதனைத் தமிழ் மக்கள் மறவாமல், அச் சுதந்திரப் போரிலே பங்குகொண்டனர். ஸ்ரீபெரும்பூதூரிலும் பாளையங்கோட்டையிலும் இருந்த வீரர் வெகுண்டெழுந்து அப்போது சமர் செய்தனர்.

கும்பினியின் ஆட்சி கவிழ்ந்தபின்பு, ஆங்கிலேய அரசாங்கத்தின் நேர்முகமான ஆட்சி ஏற்பட்டது. அரசை ஏற்றுக்கொண்ட **விக்டோரியா இராணி**யார் அழகான வாக்குறுதி கொடுத்தாலும், அது செயலில் நடக்கவில்லை. ஆட்சி மோசமாகவே இருந்தது.

அதுபற்றி மீண்டும் கலகமாய்க் கிளம்பவே பலர் முயன்றதனுல், ஆங்கில மதியூகி யொருவர் வெகு தந்திரமாக இங்கே **காங்கிரஸ் மகாசபை**யை அமைத்தார். அச்சூழ்ச்சியைக் கூர்ந்துணர்ந்த நம்மவர் அச்சபையின் மூலமே சுயவரசு எய்த முனைந்து முயன்றனர்.

34. சத்தியப் போர்

காங்கிரஸ் மகாசபை ஏற்பட்டதும், நம்மிலே ஹிந்துக்கள், முகம்மதியர் என்ற பிளவை ஊட்டினர் ஆங்கிலேயர் ; அப்பால், படித்த வகுப்பார், பாமரர் என்று நம்மைப் பிரித்து வேற்றுமையை வளர்த்தனர் ; அதன் பின்னரோ உயர்ஜாதி, கீழ்ஜாதி என்று பேதப் படுத்திப் பார்த்தனர். முடிவிலே சமஸ்தான மன்ன ரைக்காட்டி அச்சுறுத்தினர்.

வீர இளைஞர்கள் சிலர் வெடிகுண்டையும் துப் பாக்கியையும் கையாண்டனர். அதிகாரிகளும் ஒப்புக்கு அடக்குமுறைகளைக் கையாண்டனர். தேசத் திலே அமைதியின்மை தாண்டவமாடியது.

அச்சமயத்தில் **காந்திமகான்** தோன்றினர் ; "கத்தியோ கம்போ வேண்டாம் ; சத்தியம் ஒன்றே போதும்" என்றார் ; "பிரகலாதனைப் போல் நாம் கடவுளை நம்பி, அஹிம்ஸையைக் கடைப்பிடித்து நிற்போம்" என்றார். பிரகலாதன் கொடுந் துன்பத் துக்கு ஆளானன். அவ்விதமே காங்கிரஸ்காரரும் பலவாறன துன்பத்துக்கு இலக்கு ஆயினர். உயிர், உடைமை, உடல் மூன்றையும் சுதந்திரதேவிக்கு அர்ப்பணஞ் செய்ய முன்வந்தனர். கத்தியின்றி இரத்தமின்றி, நம்மவர் போர்புரிவதைக்கண்டு ஆங்கில அரசாங்கம் திகைத்தது.

முதல் உலக மகா யுத்தத்திலே ஜெர்மன் சக்கர வர்த்தியான **கெய்ஸரை** ஆங்கிலேயர் வீழ்த்தினர் ; இரண்டாவது யுத்தத்திலோ **ஹிட்லரைத்** தற் கொலைக்கு ஆளாக்கினர். படைபலமும் பணபலமும் நிரம்பப் படைத்திருந்தும், நமது அஹிம்ஸைப் போரின் முன்னே அவர்கள் தலைவணங்க நேர்ந்தது.

அவர்கள் முடிவிலே வழிக்குவந்தனர் ; நம்முடன் உடன்படிக்கை செய்துகொள்ள எண்ணினர். அப்போதும் ஹிந்து முஸ்லிம் பகையை வளர்த்துப் போயினர். வகுப்புவெறி தாண்டவம் ஆடியது. இரத்த ஆறு ஓடியது. ஒரு கோடி மக்கள் இடம் பெயர்ந்து ஓடிவந்தனர்.

அவ்வளவையும் **பண்டிதநேரு, சர்தார்படேல்** ஆகிய இரு தலைவர்களும் சமாளித்தனர் ; முகம்மதியருக்கு ஒரு பாகத்தைப் பிரித்துக் கொடுத்தனர். அச் சிறிய பாகம்போக, எஞ்சிய பெரும் பாகம் **பாரதம்** என்ற பெயருடன் சுயவரசு கொண்டுள்ளது. அது குடியரசாகும்.

முகம்மதியர் கொண்ட பாகம் **பாகிஸ்தான்** எனப்படும். அதுவும் சுயவரசு நாடுதான். கடைசி வரையில் இந்தியாவை ஆங்கிலேயர் கட்டியாளப் பார்த்தும் இயலவில்லை. மூட்டை முடிச்சுடன் சொந்த ஊர் போக நேர்ந்தது.

ஐந்நூறு வருஷம் நீண்டிருந்த முகம்மதிய ஆட்சியும் சரி, இருநூறு வருஷம் தலைதூக்கி நின்ற ஆங்கில ஆட்சியும் சரி, நமது பூமியின் புராதனப் பெருமையையும் சக்தியையும் மாய்த்துவிட முடியவில்லை. மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்குமோ ?

குருவியைக் காகம் அடித்துண்பதுபோல், எளிய தேசத்தாரை வலிய தேசத்தார் வாட்டி வதைத்து வருகின்றனர் ; ஒருவரையொருவர் மாய்க்க மாயமான ஆயுதங்களையும் கண்டுபிடித்து வருகின்றனர். மூன்ருவது உலக மகா யுத்தம் ஏற்படும் என்றே தோன்றுகின்றது.

ஆயுத பலங்கொண்டு வெற்றிபெற்ற நாட்டார் அவ்வெற்றியின் பயனை அடைய முடியவில்லை;

வெற்றிகொண்டும், பகை முற்றியே வருகின்றது. ஆயுத பலமின்றி, அன்பையும் சத்தியத்தையுமே ஆதாரமாகக்கொண்ட யுத்தத்தில் பகை ஏது? கசப்பு ஏது?

அத்தகைய அரிய உயரிய வழியைக் காட்டியவர் மகாத்மா காந்தி. அவர் பாரத பூமியின் தவப் புதல்வர். அன்று புத்த பகவான் அஹிம்சை வழியைப் புகட்டினர். அப்பால் ஏசுநாதர் அப்போதமே புரிந்தார். உலகம் ஏற்கவில்லை.

இப்போதோ காந்தி வழியே—அதாவது பாரத பூமியின் பண்பாடான மார்க்கமே—சாலச் சிறந்ததென உலக மேதாவிகள் ஒப்புக்கொள்ளுகின்றனர்; எல்லாத் தேசங்களும் அவ்வழியையே பின்பற்ற வேண்டும் என்றும் விரும்புகின்றனர்.

உலகினுக்கு—பகையினுலும் சுயநலத்தினுலும் வருந்தும் உலகினுக்கு—ஒரு புதிய வழியை—பெருமையான வழியை—தர்ம மார்க்கத்தைக்—காட்டிய பெருமை—நடத்திக் காட்டிய பெருமை இப் பாரத பூமிக்கே உரியதாகும்!

ஓங்குக பாரதம்! உயர்வெல்லாம் தழைக்க!

3B
2-113